
1903



1-00

உரிமையது

சொ - ரூசாமி புஸ்தகம்

உ

கடவுள் துணை.

வித்வசிரோன்மணியாகிய

புகழேந்திப்புலவர்

திருவாய்மலர்ந்தருளிய

புனந்திரன் தூது.

இஃது

பு. ஏ. பார்த்தசாரதிப் பிள்ளையால்

பரிசோதிக்கப்பெற்று,

கும்பகோணம் புத்தகவியாபாரம் ம-ா-ா-ஸ்ரீ,

கோவிந்தசாமி நாயுடு அவர்கள்

விருப்பத்தின்படி,

சென்னைப்புரசை

நாராயணசாமிப்பிள்ளையவர்களது


நற்றமிழ்விலாச அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

1903.

16, சரவணப்பெருமாள்முதலி வீதி, புரசை,

சென்னை.



கடவுள் துணை.

புனந்திரன் தூது.

விநாயகர் தோத்திரம்.

அத்திமுகத்தோனே அரனார்திருமகனே
சத்தியின்புத்திரனே சரிந்தவயிற்றோனே
முத்தியளிக்கின்ற முருகற்குமூத்தோனே
வித்தையெனக்கருளும் வேலவற்குமூத்தோனே
திருவலயாம்மேற்பாடி தெற்கிசைந்தவெட்டாலை
வெட்டாலைக்குள்ளிருக்கும் சப்பாணிப்பிள்ளையரே
பொற்பாதம்நான்மறவேன் பொன்னுங்கணபதியே
பொன்னுங்கணபதியே பிரபலபாய்முன்னடவாய்
எடுதவறாமல் எழுத்தாணிசாயாமல்
கோடுதவறாமல் கொழுந்தோலைசாயாமல்
நாவுதவறாமல் நல்லோசைதாருமையா
குரலிற்குடியிருந்து குரலோசைதாருமையா
தப்பாமலெந்தனுக்கு சரஸ்வதியேமுன்னடவாய்
பஞ்சவர்கள்தன்கதையை பட்சமுடன்தான்படிக்க
செஞ்சொல்சோதையிட தேவியர்கள்பாலகனே
கஞ்சன்வலதழித்த கார்மேகமுன்னடவாய்
எல்லையளந்தபிரான் ஏழுமரமெய்தவரே
புனந்திரனார்தூதுரைக்கப் புண்ணியனேவாக்கருளும்
இந்திரனார்தூதுரைக்க எந்தனுக்குவாக்கருளும்
தப்பிதங்கள்வாராமல் தாழ்வுகள்நேராமல்
குற்றங்கள்வாராமல் குறைவுகள்நேராமல்
ஒப்பிமனம்பொறுத்து உத்தமனேவாருமையா
கார்க்கக்கடனுனக்கு கர்த்தாவேமெய்ப்பொருளே

முருகர் தோத்திரம்.

சீரானமாமுகனே சிற்றடியைவேலவரே
மாயோன்மருமகனே வள்ளிமணவாளா
கந்தனேயெந்தனிட கவலையெல்லாந்தீர்த்தவனே
புனந்திரனார்தன்தூதைப் புத்தியுடன்யான்பாட
புத்திதனைநீகொடுத்தால் புகழ்ச்சியாய்நான்படிப்பேன்

சரஸ்வதி தோத்திரம்.

தாயேசரஸ்வதியே சதுர்முகனார்தேவியரே
வாணிசரஸ்வதியே மறையவனார்தேவியரே
என்னாவிற்குடியிருந்து நடத்துமம்மாயிக்கதையை
நெஞ்சிற்குடியிருந்து நீநடத்தவேண்டுமம்மா
அஞ்சியுனைப்பணிந்தேன் ஆனந்தவாழ்மாரி
வஞ்சிபுனைமவளே வல்லியேகாருமம்மா

செஞ்சொல் தவராமல் சிராகவிக்கதையை
பஞ்சையானெக்தனுக்கும் பாடவருள்புரியும்
புனந்திரனூர் தூதுரைக்க புகழ்ச்சிதரவேண்டுமம்மா
மகிழ்ச்சியாயிக்கதையை மண்டலத்தில்பாடுகிறேன்

கதையின் வரலாறு.

பட்டணமாம்பட்டணமாம் இந்திராபுரிபட்டணமாம்
பட்டணத்தையாளுகிற பஞ்சவர்களைவருண்டு·
ஐவர்பஞ்சபாண்டவர்கள் அரசாளும்நாளையிலே
ஏதுகுறைவில்லாமல் இனியரசையாண்டிருந்தார்
மனதுகுறைவில்லாமல் வையகத்தையாண்டிருந்தார்
இப்படியாக யிருக்கின்றவேளையிலே
துரியோதிரன்சேனைத்தலைவர் ஆலோசனைக்கூட்டம்.
நூலார்கடுந்திரளார் நூற்றொருவர் தான்கூடி
அம்பலத்துவாசலிலே யனைவோரும்வந்திருந்தார்
காஞ்சிவளநாடாளுங் கருணரும்வந்திருந்தார்
சாமத்துரோகி சகுனியுமங்கிருந்தான்
பட்டார்புலவர் பதினெட்டுமந்திரியும்
அல்லவருமங்கிருந்து வாலோசனைகள்செய்து
ஐவர்பஞ்சபாண்டவரை அங்கேவரவழைத்து
தருமர்க்கெதிராக சகுனியவன்வந்திருந்து
தார்வேந்தன்முன்பாக சண்டாளன்வந்திருந்து
மாயத்தால்சூதாடி மனமுருகபாண்பறித்து
மாதைதுயிலுரிந்து மன்னவரைக்காடோட்டி
ஐவரையுங்காடோட்டி ஆண்டிருந்தான்ராச்சியத்தை
பதின்மூன்றுதன்வருஷம் பாரவனம்வோட்டி
பஞ்சவரைக்காடோட்டி பாருலகையாண்டிருந்தான்
இப்படியாக இவனிருக்கும்வேளையிலே

ஐவர் விலாடபுரத்தில் மறைவாயிருந்தது.

ஐவர்பஞ்சபாண்டவரும் ஆரணங்குதுரோபதையும்
மன்னர்பஞ்சபாண்டவரும் மயிலணையாதுரோபதையும்
பன்னிரண்டுதன்வருஷம் பாரவனம்தீர்ந்து
பதின்மூன்றும்தன்வருஷம் விலாடபுரத்தில்வந்து
மாறுவேஷங்கொண்டு மருமந்தெரியாமல்
உருவங்கள்தெரியாமல் உத்தமர்கள்வாசம்பண்ணூர்
அந்தவருஷம் அதுவுந்தொலைத்தபின்பு
பதினாலாந்தன்வருஷம் பிறந்ததுபஞ்சவர்க்கு
பெருமாளுடன் பஞ்சவர்கள் தூதுரைக்க ஆலோசனைசெய்கிறது.
ஐவரவரையரும் ஆழிவுசந்தாரும்
வேந்தர்பெருமாளும் வெளிமண்டபத்தில்வீற்றிருந்தார்.
தக்கப்புகழுடைய தருமரெழுந்திருந்து
ஏழுலகமாளுகிற எம்பெருமாளடிபணிந்து

ஆளப்பிறந்த அபிமனும்பட்டானே
அந்தாளர்தீர்த்த அரவானும்பட்டானே
தாமமுடியான் கடோற்கஜனும்பட்டானே
ஆரையனுப்புவோம் ஆளடிமைதூதுக்கு
எவரையனுப்புவோம் எழில்பெரிய தூதுக்கு
என்றுமவனுரைத்து ஏங்கிமனந்தளர்ந்து
சிந்தைகலங்கி திடுக்கிட்டுமெய்மறந்து
மன்னர்மனஞ்சலித்து மறுமமாய்வீற்றிருந்தார்
ஏழுலகமாளுகிற எம்பெருமாளேதுசொல்வார்
போட்டசிறைமீட்க நாளாச்சுமன்னவரே
வைத்தசிறைமீட்க நாளாச்சுமன்னவரே
தூதுக்குப்போவாரார் சொல்லுந்தருமரேநீர்
துரோபதைபிள்ளையை பெருமாள் வேண்டாமென்று தடுக்கிறது.
ஆரையனுப்புவோம் அடல்பெரிய தூதுக்கு
என்றுமவருரைக்க ஏதுசொல்வார் தருமலிங்கம்
பச்சைமடல்விரியும் பாளைவிரிபூமணக்கும்
பாஞ்சாலமகாராசன் சுயமணப்பூம்பந்தலிலே
வில்லோசைகொண்டு இளங்கொடியைமாலையிட்டோம்
வில்வளைத்துமாலையிட்ட மெல்லிதுரோபதையாள்
மாலைக்குழலாள்தன் மைந்தரைபோவிடுவோம்
அந்தவுரைகேட்டு ஆதிமூலமேதுசொல்வார்
ஒவ்வாதுஒவ்வாது உத்தமியாள்பெற்றபிள்ளை
இளம்பஞ்சபாண்டவர்கள் இணைபிரியாமன்னவர்கள்
ஐவரைப்போகவிட்டால் அனர்த்தங்கள்நேர்ந்துவிடும்
ஒவ்வாதுஒவ்வாது உத்தமியாள்பெற்றபிள்ளை
தக்கப்புகழுடைய தருமராதுகேட்டு
பெருமாள் நல்லரவானை வேண்டாமென்று தடுக்கிறது.
வீடெல்லாமாணிக்கம் வாசலெல்லாமாணிக்கம்
கட்டியுடைத்தால் கலந்தேறுமாணிக்கம்
மாணிக்ககூண்டுகட்டி வாசலிலேதானம்பண்ண
மாலைக்குழலாள்தன் மைந்தரைப்போவிடுவோம்
ஏழுலகமாளுகிற எம்பெருமாள்தான்கேட்டு
ஒவ்வாதுஒவ்வாது உத்தமியாள்பெற்றபிள்ளை
பாசத்திளவரைநின் பள்ளியழகையிலே
பாரதமோசிரதமோ என்றுன்படைத்தலைவன்
பெருமாளோபொரிமாவோ என்றுசொன்னான்புண்ணி
சொல்லியேபெருமாளும் தூதுக்குமாட்டான்காண் [யன்
எரிநாகங்கொண்டவனே டெதிராளமாட்டானே
ஒவ்வாதுஒவ்வாது உத்தமியாள்பெற்றபிள்ளை
தக்கப்புகழுடைய தருமராதுகேட்டு
இனியாரைப்போவிடுவேன் எழில்பெரிய தூதுக்கு

பெருமாள் மின்னொளியாள் பிள்ளையை வேண்டாமென்று தடுக்கிறது.

தேசத்தால்மடையடித்தால் செல்லேறப்போகுதென்று
பணத்தால்மடையடித்தால் பாசிபிடிக்குமென்று
துட்டால்மடையடித்தால் தூசேறப்போகுதென்று
காசால்மடையடித்தால் களும்புபிடிக்குமென்று
கோத்தால்மடையடக்கும் சோழன்றிருமடந்தை
மேகம்பயின்றெடுத்த மின்னொளியாள்நாயகியாள்
மாலைக்குழலாள்தன் மைந்தரைப்போவித்து
ஏழுலகமாளுகிற எம்பெருமாள்தான்கேட்டு
ஒவ்வாதுஒவ்வாது உத்தமியாள்பெற்றபிள்ளை
கொற்றப்பூர்மன்னன் குறக்கோலங்கொண்டல்லோ
கொற்றம்போரம்பலத்தே கூசாமல்போயிருந்து
கொச்சியங்கள்சொல்லி யுரைப்பார்களைவரையும்
எளிதங்கள்சொல்லி யுரைப்பார்களைவரையும்
ஒவ்வாதுஒவ்வாது உத்தமியாள்பெற்றபிள்ளை
தக்கப்புகழுடைய தருமராதுகேட்டு
சிந்தைகலங்கித் திடுக்கிட்டுமெய்மரந்து
இனியாரையனுப்புவோம் ஆளடிமைதூதுக்கு
எவரையனுப்புவோம் எழில்பெரியதூதுக்கு
எழுகோடிசேனைகளெல்லாமடிந்தார்கள்
ஒருகோடிபாலகர்கள் ஒக்கமடிந்தார்கள்
யாரையனுப்புவோம் ஆளடிமைதூதுக்கு
எவரையனுப்புவோம் எழில்பெரியதூதுக்கு
என்றுமவருரைத்து ஏங்கிமுகந்தளர்ந்து
ஏழுலகமாளுகிற எம்பெருமாளேதுசொல்வார்

கிருஷ்ணமூர்த்தி புனந்திரனைத் தூதுக்கனுப்ப சம்மதிக்கது.

மதுரையறுகாதம் வாழ்மதுரைமுக்காதம்
பொய்கையறுகாதம் பூமதுரைமுக்காதம்
மதுரை-அன்பத்தாறுகாதம் ஆளுகிறபாண்டியர்கள்
ஆறாயிரவர் அணிதிரளாம்பாண்டியர்கள்
மைந்தருமில்லையென்று மன்னர்மனஞ்சலித்து
நாளுகிறோமென்று மலைமேல்தவமிருந்தார்
மாளாதேயென்றுசொல்லி மலரிலவதரித்தாள்
மன்னன்விஜையன்றமடலூர்ந்தமாதேவி
காளைவிஜையன் கடலூர்ந்தமாதேவி
ஏழுபிராயத்திலே எதிர்த்துவந்தநேன்முகனை
வெட்டித்தலைதுணித்து வீரபட்டங்கட்டினவள்
பாவையிளங்கொடியாள் பயின்றெடுத்தரத்தினங்கள்
மாலைக்குழலாள்தன் மைந்தரைப்போவிடுவோம்
உத்தமியாள்பெற்றெடுத்த புத்திரனைப்போவிடுவோம்.

ஏழுலகமாளுகிற எம்பெருமாள் தானுரைக்க
தக்கப்புகழுடைய தருமரவர்கேட்டு

தருமர் வேண்டாமென்று தடுக்கிறது.

ஒவ்வாதுஒவ்வாது உத்தமியாள்பெற்றபிள்ளை
எழுவேலிமஞ்சள் எடுத்தந்தப்பாண்டியர்கள்
எழுமரிதண்ணீரிலே எல்லாமுரைத்தவர்கள்
ஸ்ரீங்காரங்கொண்டார்கள் சீருடையபுத்திரனை
மஞ்சனீர்கொண்டார்கள் மைந்தர்புனந்திரனை
மைந்தனுக்குமெந்தனுக்கும் பேசவழக்கில்லை
என்றுஉவருரைத்து யிருக்கின்றவேளையிலே

புனந்திரன் வரலாறு அருச்சுனன் தருமருக்குக் கூறுதல்.

காண்டாபுரமெரித்த காளையதுகேட்டு
வில்லாளி பார்த்தன் விசையனெழுந்திருந்து
அண்ணனெதிரிலே அடிவணங்கித்தெண்டனிட்டு
கூத்தனென்னுசோலையிலே போயிருந்தேனொருநாள்
வாழ்மதுரைபட்டணத்தில்போயிருந்தேநான்சிலநாள்
தொட்டுகொடுத்ததில்லை சுந்தரப்பெண்பாண்டியற்கு
எடுத்துக்கொடுத்ததில்லை எந்தனிடபுத்திரனை
மைந்தருக்குமெந்தனுக்கும் வழக்குண்டுஎம்பெருமாள்
வில்லாளிபார்த்தன் விசையனுரைக்கவுமே

தருமர் சம்மதித்தது.

தக்கப்புகழுடைய தருமரவர்கேட்டு
சந்தோஷப்பட்டு சரீரங்கள்பூரித்து
உள்ளங்குளிர்ந்து உடம்பெல்லாம்பூரித்து
தேகம்குளிர்ந்து இருதோளும்பூரித்து
உண்ணுதேபூரித்து உடம்பெல்லாம்பூட்டிவிட்டு
சந்தோஷங்கொண்டாரே தருமர்பெருமாளும்
ஈரலப்பூந்தாரர் இருவருமோடிவந்து
ஏழுலகமாளுகிற எம்பெருமாளைப்பணிந்து
தக்கப்புகழுடைய தருமரடிபணிந்து
கைகட்டிவாய்புதைத்து வந்துமுன்னேநின்றார்கள்
எங்களையழைத்தபணி யேதுபணிசொல்லுமென்றார்

தருமர் அல்லியரசாணிக்கும் புலந்திரனுக்கும் ஓலையெழுதுகிறது.

தக்கப்புகழுடைய தருமரதுகேட்டு
பங்கயஞ்சீர்கண்ணனுக்கு ஓலையெழுதுமென்றார்
தம்பிபுலந்திரற்கு சுருளோலையெழுதுமென்றார்
ஈரலப்பூந்தாரர் இருவருந்தான்கேட்டு
அருளருளுமென்னண்ணு அப்படிக்கேயாகுமென்று
தாளிபனையோலை வாரிதலைசேர்த்து
வெள்ளைப்பனையோலை விளிப்பிரண்டுந்தான்சீவி
பக்கமுஞ்சீர்வாரி பவளஞ்சீர்ஒப்பமிட்டு

செப்பேடுன்னெழுத்தாணி தேர்விசயர் கைப்பிடித்து
என்னவென் றுசொல்லி எழுதவென் றோலையிலே
தக்கப்புகழுடைய தருமரெழுத்துரைப்பார்
இன்னாளின்னங்காடுறைய மாட்டாளிளங்கொடியும்
எங்குந்திரிந்தார்கள் எளப்பானகல்லிறடி.
பருக்கல்லுறுத்த பனிவங்கலமோத
நம்பருக்கேலும் உள்ளங்கால்தானுறுத்த
கனிந்தமரத்தடியில் கண்பல்லிகொண்டிருந்தோம்
இன்னமின்னங்காடுறைய மாட்டாளிளங்கொடியாள்
தொங்கலிலைறுபூமுடியாள் தூதுரைக்கவேணுமிப்போ
சந்திரப்பூமுடியாள் இங்கேவரவேணுமென்று
ஓலையெழுதி சதுராய்க்குறியுமிட்டு
இராசாக்களோலைக்கு இரத்தினக்குறியுமிட்டு
மந்திரிமாரோலைக்கு மஞ்சட்குறியுமிட்டு
[illegible]மடித்து செந்திரிக்கம்தான்போட்டு
பார்த்திலேயும்வேகமுள்ள தூதுவரைத்தானழைத்து
ஓலைச்சுருளெடுத்து உத்தமர்கள்கைகொடுத்து
மதுரைவளநாட்டுக்கு மன்னவர்களேநீர்போய்
பட்டோலைகட்டிவச்சி மன்னுதிரும்புமென்று
கருமோலைகட்டிவச்சி தூதர்திரும்புமென்றார்
தூதுவருந்தான்கேட்டு தொழுதிரங்கிதெண்டனிட்டு
அருளருளுமென்னையா அப்படிக்கேயாகுமென்று
சொல்லப்பெற்றோமென்று கூறுக்காயெழுந்திருந்து
கூறப்பெற்றோமென்றுசொல்லி கும்பிட்டெழுந்திருந்தார்.

தூதன் மதுரைக்கு ஓலைகொண்டுபோகுதல்

பட்டோலைகட்டெடுத்து மன்னர்மடியில்வைத்து
கருமோலைக்கட்டெடுத்து தூதர்மடியில்வைத்து
அத்திபுரமும் நடந்தார்அழகாக
அங்கவளநாடும் நடந்தார்அழகாக
குருக்ஷேத்திரபூமி குருபூமிகேசவிட்டார்
எல்லையதுதாண்டி இளந்தோப்புதான்தாண்டி
வைகைக்கரைதாண்டி வனமாய்வனந்தாண்டி
காடுசெடிதாண்டி கரியமலைதான்தாண்டி
ஓங்கிவளர்ந்தொரு மூங்கில்வனந்தாண்டி
தெங்கைபடர்ந்தவனம் வெண்களாப்பூத்தவனம்
மதுரைத்திசைநோக்கிவாறார்கள் தூதுவர்கள்
போறவழிதனிலே என்னென்னவதிசயங்கள்
தாமரைகள்பொன்காய்க்க தெங்கைகள்குட்டியீன
முத்துக்காய்காய்க்க பவளக்கொடிகனக்க
நீர்முத்துஞ்சாலகளும் நின்றுநிழல்காக்க
[illegible] நின்றுவிளையாட

சேறுங்கழலுமங்கே சென்றவிளையாட
வாழைப்பழுக்க கரும்புகுலைசாய
ஆலைப்பழுக்க அணிகள்விளையாட
கிள்ளைப்பழுக்க கிளைகள்விளையாட
மாலைவுதிர மலர்கள்சொரிந்துவிழ
சந்தணஆறுத்ரும்பிவர, குங்குமஆறுகுளம்பிவர
ஸ்ரீதேவியம்மன் உரைவாள்பலதுரையும்
திருவிளையாள்அம்மன் திருவாள்பலதுரையும்
சோலைமலர்கண்டார் சொக்கரிடபாதங்கண்டார்
சொக்கரிடபாதம் தொழுதிறங்கிதெண்டனிட்டான்
ஆனைமலைகண்டான் அம்மனிடபாதங்கண்டான்
அம்மனிடபாத மடிவணங்கித்தெண்டனிட்டான்
அடிவணங்கித்தெண்டனிட்டு அப்பால்நடக்கலுற்றான்

பொற்றாமரைச் சிறப்பு.

அல்லிப்பிறந்தாள் அவள்பிறந்தபொய்கைகண்டான்
பூவில்பிறந்தாள் பிறந்தொருபொய்கைகண்டான்
மலரிற்பிறந்தாளும் அவளுதித்தபொய்கைகண்டான்
பொய்கைப்படுமைகளை பொனைவனும்பார்த்திருந்தான்
படிக்குப்படிக்கொரு பன்னிருகாதவழி
படியகலங்கொண்டதொரு பன்னூற்றைங்காதவழி
ஏறும்படிகளொரு எண்ணூறுகாதவழி
இறங்கும்படிக்கொரு எண்ணூற்றைங்காதவழி
நாலுபடிகளின்மேற் ஞானவிளக்கெரியும்
அஞ்சுபடிகளின்மேல் பஞ்சவர்ணம்போட்டிருக்கும்
எட்டுபடிகளின்மேல் இலிங்கம்புதைத்திருக்கும்
பத்துபடிகளின்மேல் பத்தினிமார்வேர்திநிற்பார்
கட்டோடேதன்னகையுந் தாமரைப்பூங்காவுகளும்
கட்டுசெழுத்திக் கடலாடும்பொய்கையது
புத்திரசந்தானங் கொடுக்குமந்தபொய்கையது
கைபெண்டுநானஞ்செய்தால் கைலைசேர்க்கும்பொய்கை
அறிவில்லாஸ்நானம்பண்ணு லறிவளக்கும்பொய்கை
மலடிகள்ஸ்நானம்பண்ணல்மைந்தனளிக்கும்பொய்கை
கன்னியப்பெண்கள் கடுகெனவேஸ்நானம்பண்ணல்
கன்னிகழிந்திடுவார் காளைகளையீன்றிடுவார்
மைந்தர்களையீன்றிடுவார் மகிழ்ச்சியாய்வாழ்ந்திடுவார்
பிள்ளைகளையீன்றிடுவார் பேரோதகளர்ந்திடுவார்
இப்படியாய்ப்பகலிதரும் இபலானபொய்கைதனை
கண்டானே தூதுவனுங் கண்கள்ரெண்டுங்கொள்ளாமல்
பார்த்தானே தூதுவனும் பார்வையொன்றுகொள்ளாமல்
அப்பொய்கைதான் தாண்டி அப்பாலேபோகலுற்றான்
அரிசிதசிவரிதேசி யார்வர்துநின்றாலும்

இல்லையென்றுசொல்வார்கள் மெல்லியிடைபுண்ணியத்தால்
முத்துப்பவளம் கொண்டுமவர்க்களிப்பார்
வச்சிரமாணிக்கம் வாரியவர்க்களிப்பார்
பிழைத்தேனென்றுபோவார்கள் பொற்கொடியாள்புண்ணியத்தால்
அப்போதுதூதுவனும் அந்தத்தெருதாண்டி
மற்றொருவீதியிலே வாரார்கள்தூதுவர்கள்
ஆனைகட்டிப்போர்படுப்பார் அல்லியிடராச்சியத்தில்
குதிரைகட்டிப்போர்படுப்பார் உத்தமியாள்சீமையிலே
கட்டுக்கலங்காணும் கதிருமுக்குநெற்காணும்
அரிதாளறுக்கவர மறுதாள்பயிராகும்
அரிதாளின்கீழிருந்து இலக்கலந்தைகள்கூடுகட்டும்
கருப்புமிளநீருங் கண்திறந்துபாயும்
வாழைவடக்கிலும் வாசமுருதெற்கிலும்
சோலைகிழக்கிலும் துய்யபலாமேற்கிலும்
இப்பெரியராச்சியத்தைக் கண்டானேதூதுவனும்
கண்டானேதூதுவனும் கண்கள்ரெண்டுங்கொள்ளாமல்
பார்த்தானேதூதுவனும் பார்வைரெண்டுங்கொள்ளாமல்
அந்தத்தெருதாண்டி மற்றொருவீதியிலே
மற்றொருவீதியிலே வாரானேதூதுவனும்
வேலைப்பழிக்கின்ற விலைமாதர்வீதிகளும்
சேலைவிலைமதிக்கும் சேணியர்கள்வீதிகளும்
யானைவிலைமதிக்கும் அரசர்கள்வீதிகளும்
சேனைத்தலைவர்கள் சூழ்ந்திருக்கும்வீதிகளும்
குதிரைவிலைமதிக்கும் குச்சிலியர்வீதிகளும்
பட்டைவிலைமதிக்கும் உத்தமர்கள்வீதிகளும்
கொட்டியேபொன்னளக்கும் கோமுட்டிவீதிகளும்
தட்டிகொட்டிபணிசெய்யுந்தட்டார்கள்வீதிகளும்
செட்டால்சாக்குவிற்கும் செட்டியர்கள்வீதிகளும்
வில்பிடித்தலைவுக்கு வேந்தர்கள்வீதிகளும்
மல்போருதான்செய்யும் மன்னர்கள்வீதிகளும்
வேதமுறைதவறா வேதியர்கள்வீதிகளும்
நீதிமுறைதவறா நெறியன்மார்வீதிகளும்
அந்தத்தெருதாண்டி மற்றொருவீதியிலே
மற்றொருவீதியிலே வாரானேதூதுவனும்
கடையுங்கடைத்தெருவுங் கருமாரவீதிவிட்டு
அல்லியிடைவாசலுக்கு வாரானேதூதுவனும்
அரிலைப்பூந்தோரணமும் காக்குந்தலைவாசலிலே
அல்லிக்கொடிகட்டி பார்க்குந்தலைவாசல்
பூதம்பணிகள்செய்யும் பொற்கொடியாள்வாசலிலே
மேகப்பணிகள்செய்யும் மின்னனையாள்வாசலிலே
கண்டானேதூதுவனுங் கண்கள்ரெண்டுங்கொள்ளாமல்

பார்த்தாலே தூதனும் பயந்தனவே அச்சங்கொள்ளாமல்
தூதனுமப்போது தூதாகநடக்க
உடலக்கண்ணனும் பக்கமுந்தேயக்குருந்து
கொத்தவாடான கொலுவுக்குருவினைத்தல்
புலந்திரன் கொலுவிருக்கையைத் தூதன் காணுகிறது.
நீலக்கிருக்கொலுவிலே மாயகொலுவிருக்கார்
செம்பொன்னுக்கு சிக்க முத்துமணைக்கிருக்கார்
இரத்தினமுக சிக்க ராஜ காலக்கிருக்கார்
முத்துமுக சிக்க முடிபாளைக்கிருக்கார்
வயிரமுக சிக்க பந்திரிசைக்கிருக்கார்
கட்டியக்காரர் இரவணைக்கிருக்கார்
கத்தியக்காரர் கட்டழகாக்கிருக்கார்
பொட்டுக்கட்டைக்காரர் பொம்மைக்கிருக்கார்
இட்டக்கட்டைக்காரர் இருமலைக்கிருக்கார்
ஆலவட்டமும் அவரிடமாக்கிருக்கார்
பொன்னாலவட்டமும் போடுறதிலிருக்கார்
பேரஞ்சாமன்னன் புலந்திரனுமிருக்கும்
சபைக்கொலுவிருக்கால் முடிசூடிக்கொண்டபோல்
அப்போது தூதனும் அனுமந்தனைப்
போகவிட்டான் கொலுவுக்குள்ளேயுக்கு
பக்கேவிட்டுக்கேக்கி மலைவாளைக்கிட்டேனும்
கருவோலைவிட்டுக்கேக்கி தூக்கவைக்கிறேனும்
பேரஞ்சாமன்னன் புலந்திரனுமப்பார்த்து
அன்னுந்தான்பார்த்து அலைமுடிநிறுமுக்குவை
ஆடாது தவரே அப்பவுமாயமென்னும்
எவ்வாறுந் தூதரே பெண்ணிருந்துவந்தீர்கள்
எக்காரியமாகவே வேகமாய்க்கொண்டுவந்தீர்
அப்போது தூதுவர்கள் அகவணங்கியேதுசொல்வார்
இக்கோட்டைவல்லகோல் இந்திரபாலக்கோலை
செல்லுநிற்கும் இவர்களுக்கவைக்கோலை
அத்திபுரமதும் மியார்தூதுவரோம்
உக்கனியோகமுப்ப அருகளக்கிகொண்டவிட்டான்
பேரஞ்சாமன்னா புலந்திரனுக்குக்கேட்டு
இயோதுதவென்ன அருசிப்பயக்கனும்
இவருடையதம் அருகே சக்கிகொண்டவிட்டு
அடுத்துமவக்கொண்டவிட்டு வெடித்தான்கருவோலை
புலந்திரன் ஓலைவாசிக்கிறது.
பக்கேவிட்டுக்கேக்கிறது மல்லைமுக்கான்விரித்து
கருவோலைதாலவிழ்த்து துக்கமுடைவாசிக்க
மங்கைமன்னர்க்கு வாசித்துமுக்கமும்
[illegible]

திக்கெல்லாந் திடுக்கிட்டு வெப்பமுற்று
அதுக்காலந் தன்னிலே நடக்கலுற்றார்
மோதிரக்கையாலே பாரமெடுத்துக்கொண்டான்
மணிக்கடகக்கையாலே பார்வையெல்லாந் தொண்டான்
செல்வப்பொருளுடன் றானும் விழுந்து புரண்டழுதான்
தாமுடியான் தரைமேல் புரண்டழுதான்
மலைமுடியானும் மண்மேல் புரண்டழுதான்
இப்படியாக இருக்கின்ற வேளையிலே
அல்லிருக்கு ராதர்கள் அவசரமாயோடிவந்து
பிறைமுடி தரித்த பெண்பெருமாள் றானிருக்கும்
மண்டபத்தின் மீதுவந்தே பணிவாக நமஸ்கரிக்க
அரண்மனை மேழுகட்டும் அந்தப்புரந்தாண்டி

அல்லியைக் காணா ராறுடல்.

இணைமலர்க் கண்ணாள் உட்கட்டில் மேல்பாய்ந்து
பிறைமுடி தரித்த பெண்பெருமாள் முன்னேவந்து
அல்லிக்கு நிகராந்து அழகனைக் கண்டவுடன்
தெண்டனிட்டுத் தூதர்கள் திருமகிமை புகழ்ந்து
மோதிரமின்ன முடிமேலவைத்தெழுந்தான்
பிறைமுடி தரித்த பெண்பெருமாள் தான்பார்த்து
நீ-யாருடைய தூதர் அறியவுரையுமென்றாள்
யார்பணியுமல்ல அடியேன் திருப்பணிதான்
ஒருவர்பணியுமல்ல வும்முடைய நற்பணிதான்
பேர்பெற்றுடைய பெருமானே உன்பணிதான்
நீயிங்கேவந்த தெனக்கிப்பக்கூறுமென்றாள்
உத்தமர்களோவர் உத்தரத்தானுப்ப
அதுமப்பி அதுதான்தான் பார்த்து
இலைச்சுருள் விரித்து வாசித்தான் உத்தமனும்
தம்பிநந்தாவென்று தனித்துப் புலம்புகிறான்
செல்வப்பொருளுடன்றானும் விழுந்துப்புலம்புகிறான்
அக்கவிசேவகமது சொல்லவந்தோமென்றார்
பிறைமுடி தரித்த பெண்பெருமாள் தான்கேட்டு

அல்லிபுகைத்திரிகைக் காணா கொலுவுக்குவருகிறது

கட்டாமுடிகழட்டி காரிகைமார் கைகொடுத்து
வீரமுடிகழட்டி மெல்லியர்கள் கைகொடுத்து
மகுடமுடிகழட்டி மங்கையர்கள் கைகொடுத்து
அங்கிணிஜாரு அழகாகத்தான்களைந்து
பரிவாடையுள்ளுடுத்தி பட்டாடைமேற்சாத்தி
ஆனைத்தவாழ்மாரி அலைந்தலைசோருகி
பல்லக்கிமேலேறுமல் பாண்டிப்பெருமானும்
தண்டிகையின்மேலேறுமல் தாராகுழலாளும்
கால்நடையாய்த்தானே கடுகிநடந்து

காத்தாடிபோலே கடுகெனவேநடந்து
எட்டடியும்ஓரடியாய் இட்டுமிகநடந்து
அரண்மனையேழுகட்டும் அந்தப்புரந்தாண்டி
பேடைமயிலனையாள் உட்கட்டில்போய்புகுந்து
கோசலநாடாள் கொலுவுக்குமுன்னேவந்தாள்
பிள்ளைபுலந்திரற்குப்பெண்பெருமாளேதுசொல்வாள்

அல்லி புலந்திரற்கு சொல்லுகிறது.

தருமர்வலுவெழுந்தீர் தம்பிமார்கோளெழுந்தீர்
வீமர்வலுவெழுந்தீர் விஜயனார்கோளெழுந்தீர்
உப்பிட்டவாளை வசைபுருவிவிட்டாற்போல
தப்பிவிட்டீரேயிப்போ தம்பிபுலந்திரனே
ஆறிவிடும்ஆறிவிடும் போனாலாறிவிடும்
தேறிவிடும்தேறிவிடும் தேனேதேறிவிடும்
ஆனந்தமார்பனை அணைத்துமடியில்வைத்து
மாலைமுடியானை மடிமேலேகொண்டுசென்று
கொற்றவனார்கோபக்குணப்பட்டெக்கிக்கொண்டவனும்
மன்னவனார்கோப வசப்படுத்திக்கொண்டிருந்து
இப்படியாக யிருக்கின்றவேளையிலே
ஆருபிரவர் அணிநிராம்பாண்டியரும்
பொன்னுமலைநாடாளும் அன்றுவுடஓடிவந்து
போரஞ்சாமன்னர் புலந்திரனைத்தான்பார்த்து
காடாண்டபஞ்சவர்கள் நாடாளவந்தார்கள்
சுந்திரப்பஞ்சவர்கள் சுகமாயிருக்கிறார்கள்
ஆறிவிடும்ஆறிவிடும் போனாலாறிவிடும்
தேறிவிடும்தேறிவிடும் தேனேதேறிவிடும்
இப்படிக்கேசொல்லி யிருந்தார்கள்பாண்டியர்கள்
பிறவாமுடிதரித்த பெண்பெருமாள்நாயகமும்
ஓலைச்சுருளெடுத்து உத்தமியாள்கைபிடித்து
பவளசேனமந்திரியை பட்டோலைவாசியென்றாள்
பவளசேனதான்வாங்கி பட்டோலைதானவிரித்து
ஓலைச்சுருள்விரித்து வாசிக்கதாளுத்தமியும்
வாசித்தவாசகத்தை கேட்டந்தமெல்லியரும்
(அல்லியரசாணி புலந்திரனுக்குக் கோபித்து வார்த்தையுரைக்கிறது.)
பிறவாமுடிதரித்த பெண்பெருமாள்தான்கேட்டு
கதிக்குக்கதியடி [illegible] கனெருப்பாக
நெற்றிப்பருவம் நெருப்பாலபறந்து
பக்கச்சளைனுடக்கப் பத்தினியாளேதுசொல்வாள்
போபோபுலந்திரா போகவிட்டேன்தூதுக்கு
முன்னேயும்பூசல் முடிந்துமிருக்குதே
மூத்துமுடிபாண்டியனும் பட்டுமிருக்கிறானே
இப்பவும்பூசல் எழுப்புகிறார்பஞ்சவர்கள்

சொல்லுவேற்பார்பஞ்சவர்கள் கூட்டிவருவார்கள்
சிம்மாடுகட்டி சுமப்பார்கள்பஞ்சவர்கள்
சுடலைக்கரைக்குந் தொடருவார்பஞ்சவர்கள்
ஆலோலமென்று அழுவார்கள்பஞ்சவர்கள்
இப்படியாக யிருக்குமவர்கூட்டம்
போபோபுனந்திரனே போகவிடேன் நானுமென்றாள்
போரஞ்சாமன்னர் புனந்திரனு மதைக்கேட்டு
புனந்திரன் பதில் சொல்லுகிறது.
வேரறைபற்றுப் அழிவுசந்தாற்றும்
அவர்க்கேதெரியாதே யுனக்கேதெரியுமோ
போகவிடைதாருமென்றான் போரஞ்சாபுத்திரனும்
பிறவாமுடிதரித்த பெண்பெருமாளேதுசொல்வாள்
சோரவளர்க்கன்னை கபத்திரையைப்போலேறன்
சடையாய்ச்சடைவிரித்து சன்றுமேலேடங்கொண்டு
பிலாக்கணஞ்சொல்லியழுபாடனேன் புண்ணியனே
ஒப்பாரிசொல்லியழுமாட்டேனுத்தமனே
போபோபுனந்திரனே போகவிடேன் நானுமென்றாள்
போரஞ்சாமன்னர் புனந்திரருமேதுசொல்வார்
என்னென்னசொன்னாலும் இனிக்கேளேன் கன்னருச்சி
போகவிடைதாருமென்றார் போர்விஜயன்புத்திரனும்
பிறவாமுடிதரித்த பெண்பெருமாளேதுசொல்வாள்
நல்லதனந்திலே சொன்னாலுங்கேளாயோ
சொன்னாலுங்கேளாயோ சுத்திரப்பூமுடியான்
கடுத்தமொழிபாக காதையற்றுமுறைத்தால
அப்போதுதிற்காணே ஆனந்தவாழ்மார்பன்
பொற்கொடியாளரியரும் புத்திரற்குவதுசொல்வாள்
ஆருடையபுத்திரனும் என்றேனே அலையரும்
என்றுசொன்னவார்த்தையை இந்திரருந்தான்கேட்டு
இவ்வுலகந்தானறியும் எம்பெருமான்தாமறிவார்
மண்டலங்கள்தானறிய மன்னவர்கள்தானறிவார்
சோலைமலருடைய சொக்கருந்தாமறிவார்
ஆனைமலையுடைய அம்மனுந்தானறிவாள்
ஆவிருந்தென்னோர்க்க காவேரிடபுத்திரனாம்
எட்டாதவில்லவனொத்த வீமனிடபுத்திரன்யான்
என்றுமவனுரைக்க யேதுசொல்வாளவளிபற்கு
பொழுதுமேதானுக்கு போகவிடைதாருமென்றான்
போகவிடைதாருமென்றான் போரஞ்சாபுத்திரனும்
விடைதாரும் ஆச்சியென்று வேந்தனும் கண்டனிட்டான்
பிறவாமுடிதரித்த பெண்பெருமாளேதுசொல்வாள்
அங்கிருக்குங்காதிகளிலதிலொருத்தி தானழைத்து
பொன்னுமலைநாடாளு மன்னனைக்கூப்பிடென்றாள்

தாதிகள் பொன்னுமலைநாடாளைக்கூப்பிடுகிறது.

அருணருளுமென்றுதெய்வமுக்கோபாகுதென்று
சொல்லப்பெற்றோளெங்கள் பருக்காமெழுந்திருந்து
கூறப்பெற்றோரென்றுசொல்லிக் குப்பிட்டெழுந்திருந்து
பட்டெடுத்துக்கட்டி பலர்புகழுகைகளைப்போல
எலுமிச்சம்பூப்பட்டு நன்றாய்வரிந்துடுத்தி
போராளனன் சாதி பொன்னுமலைமின்னல்
தேரோடும்வீதி தெருவும்பலதாண்டி
சித்திரவீதி தெருவும்பலதாண்டி
மாநகரமாளும் மகாராஜர்மனையென்றுள்
பொன்னுமலைநாடாளும் அண்ணர்க்கெதிரில்வந்து
அண்ணாக்கெதிரில்வந்து அடிவணங்கிக்கண்டுவிட்டு
தெண்டனிட்டுதாதி திருப்பவெழுந்திருந்து
மோதிரமின்னா முடிமேலேகைதொழுதாள்
பொன்னுமலைநாடாளும் அண்ணாதாதைபார்த்து
கீ-பார்பெண்ணேதாதி மதிபயமாயுமென்றான்
யார்பணியுமல்ல வடிமேன்திருப்பணிதான்
ஒருவர்பணியுமல்ல வுமுடையவபணிதான்
பேர்பெற்றுடைய பெருமாளேயும்பணிதான்
பிறவாமுடிதரித்த பெண்பெருமாள்தாதியென்றாள்
பொன்னுமலைநாடாளு அண்ணாவுந்தான்கேட்டு
தீபிக்கேயந்த தெலக்கரிபச்சொல்லுமென்றார்
பிறவாமுடிதரித்த பெண்பெருமாள்நாயகியும்
உம்மையழைத்துவர கட்டளையிட்டார்காண்
வாருமையாவென்றுசொல்லி வருத்தியேதெண்டனிட்டாள்
பொன்னுமலைநாடாளும் அண்ணாவுந்தான்கேட்டு
இன்னேரமங்கே யிருந்தாரவர்க்கென்ன
நானறியாக்காரியங்கள் உண்டோதாமக்கே
ஏதுவகையா யென்னைவரவழைத்தார்
வரவழைத்தகாரியங்கள் வாய்திறந்துசொல்லுமென்றார்
தாமக்குழலாளும் தாதியவளேதுசொல்வாள்
இராஜாக்கள்காரியங்கள் நமக்குவெளிப்படுமோ
கஸ்திரியர்காரியங்கள் நமக்குவெளிப்படுமோ
மந்திரிகாரியங்கள் மறுபடிவெளிப்படுமோ
என்னமோயேதோ வெனக்கொன்றுந்தெரியாது

பொன்னுமலைநாடான் அல்லிக்கொலுவுக்குவருகிறது.

பொன்னுமலைநாடாளும் அன்றெழுந்திருந்து
முத்துமெரிவடியைத் தொட்டுமிகநடந்து
அரண்மனையேழுகட்டும் அந்தபுரந்தாண்டி
வீதியும்வீதி தெருவும்பலதாண்டி
சித்திரவீதி தெருவும்பலதாண்டி

தேரோடும்வீதி தெருவும்பலதாண்டி
கடையுங்கடைத்தெருவும் கருமாரவீதிவிட்டு
அங்காடிவீதிவிட்டு அரண்மனையிற்புகுந்து
பிறவாமுடிதரித்த பெண்பெருமாள்முன்னேவந்து
வந்துவணங்கியே யென்னைவரவழைத்தீர்
வரவழைக்ககாரியங்கள் வாய்திறந்துசொல்லுமென்றார்
பிறவாமுடிதரித்த பெண்பெருமாளேதுசொல்வான்
அன்றுநீர்கேளும் அடியேனொருவார்த்தை
பொருஞ்சாமன்னன் புனந்திரனார்வீரியனும்
இவரையுங்காணுதற்கு ஆவலன்போகவென்றான்
ஆலாலமுள்ளாமயினை ஆற்றிலேஅரிதது
காவடிகன்னுக்கில் கைகழுவிநீர்குடித்து
காவலனார்வீரியனை கண்ணுண்டாய்ப்பாருமென்றாள்
பொன்னுயலைக்காடானும் அன்னவுந்தான்கேட்டு
அருளாளுமென்றேச்சி அப்படியேயாகுமென்று
பொருஞ்சாமன்னர் புனந்திரனார்முன்னேவந்து
இனிவாருக்கப்பியென்று யிருவருமெழுந்திருந்து
அக்கமுஞ்சத்தமும் அழைக்காதேஆணைமுகன்
தாமமுடியான தனித்தாவடமசைய
சாத்தியபூணலும் தனித்தாவடமசைய
வில்லுக்கைமார்பன் வினிகலமுங்கட்டாதே
யானையுஞ்சேனையும் பணிகலமுங்கூட்டாதே
இருவருந்தாமெழுந்து நடந்தார்துரிதமுடன்

புனந்திரன் தர்மரைக்காணுகிறது.

வீதியும்வீதி தெருவும்பலதாண்டி
தேரோடும்வீதி தெருவும்பலதாண்டி.
சித்திரவீதி தெருவும்பலதாண்டி.
குருட்சேத்திரபூமி குருபூமிசேரவந்தான்
இவருடகாவலிலே துணைமுகன்போய்புகுந்தான்
தாரார்புகழுடைய தருமருக்கெதிரேவந்து
பூவும்புதுமலரும் பொன்னுருகுஅட்சதையும்
பொன்னிருந்சொப்பிலே பன்னீருங்கொண்டுவந்து
தர்மாதுசிர்பாதத்தார்மேவந்தன்சுத்திபண்ணி
கொண்டுவந்தபூமலரை குப்புமென்றுதான்சொரிந்து
முக்கால்வலமவந்து முடிவணங்கித்தெண்டனிட்ட
நாலுகால்வலம்வந்து நமஸ்கரித்துதெண்டனிட்டு
துணைக்கலாழ்மார்பன் அடியணங்கிநிற்கையிலே
தாரார்புகழுடைய தருமராஜர்பார்த்து
வந்துபணிந்தவனுங் கண்டுமனமகிழ்ந்து
வாரியெடுத்து மடிமேலேகொண்டணைத்து
அதுதனைக்கவந்தீரோ சுந்தரப்பூமுடியே

வாழ்வீர் வளர்கிளியே வர்த்தியிருக்கிருப்பீர்
தீர்ப்பீர் கிளைசிப்பீர் பிரானையாண்டிடுவீர்
கழுபகிக்குநான்போலக் கலக்கமாதராளீர்
என்னைப்பெறுவீர் எதிர்த்தார்முடிபெறுவீர்
பின்னைப்பெறுவீர் பெருமான்முடிபெறுவீர்
பொருக்குப்போவீர் பொழுதோடே வென்றிடுவீர்
வெள்நகரியிலே வீரபட்டங்கட்டுவீர்
[illegible] கொண்டுவீர் பிள்ளைகளைப்பெற்றிடுவீர்
[illegible] பெற்றிடுவீர் வைகாசுகளைப்பெற்றிடுவீர்
[illegible] அருகுபோலவேரூன்றி
மூங்கில்போல் [illegible] முடியாமல்வாழ்ந்திடுவீர்
வாழ்வீர்காவென்று பலகுறிசொல்வாழ்த்திநின்றார்
வாழ்த்திநின்று மகிழ்ந்து வாழ்த்திநின்றார்
[illegible] கத்தாப்பூமுடியே
போய்வருகிறேன் என்றுசொல்லி பொருள்களைக்கொடுத்தான்
விடைபெற்றெழுந்திருந்தான் வேந்தர்பெருமானும்

புனக்கிளை திருவாழ்த்தினைக் காணுகிறது

எழுவகையாளுகின்ற எம்பெருமாள்முலைவளர்த்து
பூவும்புதுமணமும் பொன்னைத்துகிலையும்
பொலன்றுஞ்சொப்பிலே பல்வீணுங்கொண்டுவர்த்து
பாதமதுதனக்கே பன்னீரால்சுத்திசெய்து
கொண்டுவந்த பூமலை துரபதுமெல்லனதால் சொரிந்து
முக்காலுமுவந்து முறைமையாகத் தெண்டனிட்டு
சற்தாலும்வந்து தமக்கொப்பச் சுதெண்டனிட்டு
மாமறும்பாதம் வணங்கிநின்று மன்னவனும்
அம்மானவன்பாதம் அடிவணங்கித் தெண்டனிட்டான்
வந்துபணிந்தவனைக் கண்டுமனமகிழ்ந்து
எழுவகையாளுகின்ற எம்பெருமாள் மனமகிழ்ந்து
வரிசைபெறுத்த [illegible] கொண்டளித்து
துரைக்கலந்தீரோ கத்தாப்பூமுடியே
வாழ்வீர்வளர்க்கிளியே வர்த்தியிருக்கிருப்பீர்
தீர்ப்பீர் கிளைசிப்பீர் தீரனையாண்டிடுவீர்
கழுபகிக்குநான்போலக் கலக்கமாதாளீர்
எதிர்த்தார்முடிபெறுவாய் எம்பெருமான் [illegible] பெறுவாய்
பின்பிள்ளைப்பெற்றிடுவாய் பேருண்டாய்வாழ்ந்திடுவாய்
பொருக்குப்போவாய் பொழுதோடே வென்றிடுவாய்
வெள்நகரியிலே வீரபட்டங்கட்டுவாய்
ஆலிலைபோல்தழைத்து அருகுபோல்வேரூன்றி
மூங்கில்போல்கிளைத்து முடியாமல்வாழ்ந்திடுவாய்
வாழ்வீர்காவென்று பலகுறிசொல்லிவாழ்த்தினாள்
ஆருங்குதிக்கழுத்தில் ஆணிப்பதக்கமது

திருநாட்டார்பிடிட்டதொரு திருப்பதக்கந் தன்னைவாங்கி
அலங்கமாப்பனுக்கு அழகுபடச் சாத்தினர்
தூதனைக்கப்போயிடத்தில் சொல்லுவேன் கேளுமையா
ஒன்றுக்குப்பத்து ஒருநூற்றுக்காயிரமாய்
பத்துக்குநூறு பழுதில்லாமலுரைத்து
நாவுதவறாமல் நல்வார்த்தைகுன்றாமல்
சொல்லுதவறாமல் சொற்சிலவுசாயாமல்
சொல்லுக்குச்சொல்லுரைத்து வாருமையா நம்பீரே
போய்வாருமென்று பொருந்தவிடைகொடுத்தார்
விடைபெற்றெழுந்திருந்தான் வேந்தர்பெருமானும்

புலந்திரன் விமானங்காண்கிறது.

வெற்றிமதயானை வீமர்க்கருகில்வந்து
மற்றானைபலமுடைய இயக்கிமார் முன்னேவந்து
பூம்புதுமலரும் பொன்னாலுரு அட்சதையும்
பொன்னிருந்த சொம்பிலே பன்னீருங்கொண்டுவந்து
பன்னீரால்கால்கழுவி பாதமதுதொட்டு.
கொண்டுவந்தபூமாலை தூபுகுபென்றுதான் சொரிந்து
முக்காலலம்வந்து முன்குதால்தெண்டனிட்டு
நாற்காலலம்வந்து நமஸ்கரித்துதெண்டனிட்டு
வெற்றிமதயானை வீமலர்பார்த்து
வந்துபணிந்தவனை கண்டுமனமகிழ்ந்து
வாரியெடுத்து மடிமேலேகொண்டணைத்து
என்னைப்பெறுவாய் எதிர்த்தார்முடிபெறுவாய்
பின்னைப்பெறுவாய் பெருமாள்பதம்பெறுவாய்
நற்பாப்பிதிரிப்பாய் நீரசையாண்டிடுவாய்
கற்பதித்ததூண்போலே கலங்காதரசாள்வாய்
விற்பதித்ததூண்போலே வெகுநாளரசாள்வாய்
போருக்குப்போவாய் பொழுதோடேவென்றிடுவாய்
வென்றுதனிபிலே விரபட்டங்கட்டிடுவாய்
வாழ்வீர்காவென்று மனங்குளிரவாழ்த்தினார்
வாழ்ந்திருப்பீரென்று மையாறவாழ்த்தினர்
தூதனைக்கப்போயிடத்தை சொல்லுகிறேன் கேளுமையா
சகுனிகதையைக் கவிதொடுபாக்கி
அபிமானக்கள்தோறும் இடித்துத்தள்ளிட்டு
ஆலதானந்தோறும் அடக்கலும்பேபிடித்து
ஒன்றுக்குப்பத்து ஒருநூற்றுக்காயிரமாய்
சொல்லுவாறாமல் சொற்சிலவுசாயாமல்
நாவுதவறாமல் நல்வார்த்தைகுன்றாமல்
தூதுரைத்துமீளுமையா மைந்தப்புலந்திரரே
போய்வாருமென்று பொருந்தவிடைகொடுத்தார்
விடைபெற்றெழுந்திருந்தான் வேந்தர்பெருமானும்

புனத்திரன் அருச்சுனனைக் காண்கிறது.

காண்டாபுரமெரிக்க காலையவந்தெதிரில்வந்து
பூவும்புதுமலரும் பொன்னறுகுஅட்சதையும்
பன்னீருஞ்செம்பிலே பன்னீருங்கொண்டுவந்து
கொண்டுவந்தபூமலரை குமுகுமென்றுதான்சொரிந்து
முன்காலவலம்வந்து முழுமனதோடுதெண்டனிட்டு
நாற்காலவலம்வந்து நமஸ்கரித்துதெண்டனிட்டு
பின்காலவலம்வந்து அடியணைந்துதெண்டனிட்டு
காண்டாபுரமெரிக்க காவலனைப்பார்த்து
வந்துபணிந்தவனைக் கண்டுமனமகிழ்ந்து
வாரியெடுத்து மடிமேல்கொண்டணைத்து
வாழ்வீர்வளர்க்கிலே வாசதிருப்பிறக்கிருப்பீர்
சிற்பிரம்ஸிலைத்தீர்ப்பீர் ராசசையாண்டிடுவீர்
கற்பதிக்கதூண்போலக் கலங்காதசாள்வாய்
விற்பதிக்கதூண்போல வெகுகாலமாசாள்வாய்
எல்லைப்பெறுவாய் எதிர்த்தார்முகம்பெறுவாய்
பிள்ளைப்பெறுவாய் பெருமையைப்பெறுவாய்
போருக்குப்போவீயேல் பொழுதோடேவென்றிடுவாய்
வென்றகளரியிலே வீரபட்டமாண்டிடுவாய்
கன்னிகைகளைக்கொண்டிடுவாய் காதலியைமணஞ்செய்வாய்
புத்திரரைப்பெறுவாய் பெருவாழ்வுவாழ்ந்திடுவாய்
பிள்ளைகளைப்பெறுவாய் பேரனையும்வாழ்த்திடுவாய்
மைந்தர்களைப்பெற்றிடுவாய் மகிழ்ச்சியாய்வாழ்ந்திடுவாய்
வாழ்வீர்காமென்று மனக்குளிரவாழ்த்தினர்
உச்சிமுகந்து உள்ளங்கால்முத்தமிட்டு
பக்கங்களெல்லாம் பரிவாகத்தான்தடவி
அதுவரைத்தவீருமையாள் அர்ச்சனைப்பூமுடிய
போய்வாருமென்றுசொல்லிப் பொருத்தவிடைகொடுத்தார்
விடைபெற்றெழுந்தார் வேந்தர்பெருமானும்
நகர்புகுந்தார் இருவருமேவந்து

புனத்திரன் சகுலசகாதேவனைக் காண்கிறது.

பூவும்புதுமலரும் பொன்னறுகுஅட்சதையும்
பொன்னிருஞ்செம்பிலே பன்னீருங்கொண்டுவந்து
பன்னீரால்காலலம்பி பட்டாலடிதுவட்டி
கொண்டுவந்தபூமலரை குமுகுமென்றுதான்சொரிந்து
முன்காலவலம்வந்து முழுமனதாய்தெண்டனிட்டான்
நாற்காலவலம்வந்து நமஸ்கரித்துதெண்டனிட்டு
வந்துபணிந்தவனைக் கண்டுமனமகிழ்ந்து
வாரியெடுத்து மடிமேலேகொண்டணைத்து
அதுவரைத்தவீருமையாள் அர்ச்சனைப்பூமுடிய

வாழ்வீர்வாளர்க்கெவீர் வர்த்திருப்பீருத்திருப்பீர்
நெற்பாயநிலைதரிப்பாய் நீராசையாண்டிவேரம
நற்பதித்தருன்போலக் கலங்காமராசன்
விற்பதித்தநான்போல் வெருகளாதொள்வாய்
கன்னைப்பெறுவாய் காதிரதக்ஷ்டிப்பெறுவாய்
பின்னைப்பெறுவாய் பொருமைப்பதமெபறுவாய்
போருக்குப்போய்விலேயல் வெற்றிதாடேவனத்திவோம்
கொன்றவனிப்பிலே கிரயட்டகவெரள்கொடுவோம்
வதிர்த்தனைசக்கரிதது எக்கேபடசாள்வாய
மாதர்களைமாலையிட்டு மைந்தர்களைப்பெற்றிடுவாய்
கன்னிகளைமாலையிட்டு காளைகளைப்பெற்றிடுவாய்
பெற்றிடுவாய்பெற்றிடுவாய் பின்பேபதினுறாய்
பதினுறும்பெற்று பெருவாழ்வுவாழ்ந்திடுவாய்
வாழ்வீர்காணாகன்று மனங்குளிரவாழ்த்தினுர்
வாழ்த்திருப்பிரென்று மனமாரவாழ்த்தினுர்
தாதனைக்கர்ப்போயிடத்தை சொல்லுவோம் புள்ளே சூருமையா
ஏஸ்ப்பூந்தாசனே எழுதினன்சித்திரத்தில
அபிமன்னைராசனை அங்கேயெழுதிவைத்து
செத்தவன்பிள்ளையென்று சற்றுமறியாமல்
இறந்தவன்பிள்ளையென்று எண்ணியான்பாரமன்
அம்பலவாசலிலே அங்கேபடமெழுதி
அம்பலத்தானறிய அங்கேயவன்கட்டிவைத்தான்
தம்பியைக்கண்டே நூறுசேர்த்துமில்லாதே
உடன்பிறப்பைக்கண்டே உற்றஉயிர்சேராதே
கொம்பனையாள்பாடிசென்று கூடிவிளையாடாதே
மைந்தனைக்கண்டே மகிழ்ந்துவிளையாடாதே
பிள்ளையைக்கண்டே பிடித்தப்பிடியாதே
சொல்லுதவறுமல் சொற்சிலவுசாயாமல்
வாயுதவறுமல் வன்வார்த்தைகுன்றுமல்
நாதுரைசுபத்திரைமையா சுந்தரப்பூமுடியே
போய்வாருமென்றுசொல்லி பொருந்தவிடைகொடுத்தார்
விடைபெற்றெழுந்திருந்தா வேந்தர்பெருமானும்
இவருடஉத்தாரம் ஆணழகன்பெற்றுக்கொண்டு
கன்னைமுடியானும் சின்னக்கிமாளிகைசென்றுன்

புணர்திரன் சுபத்திரையைக் காண்கிறது.

சீராளனங்கை சுபத்திரையாள்முன்னேவந்து
பூஞ்சம்புதுமலரும் பொன்னுருகு அட்சதையும்
பொன்னீருஞ்சொம்பிலே பன்னீருங்கொண்டுவந்து
பாதமதுகழுவி பட்டாலடிதுவட்டி
கொண்டுவந்தபூமலரை சூடுகுபென்றுதான்சொரிந்து
முக்காலவலம்வந்து முன்னிருகால்தெண்டனிட்டு

காற்சிலலங்கைத் து கமல்கரீத்தமெரல்லடனிட்டு
மாதாவின்பாதம் மலர்தூவிமெதல்லடனிட்டு
வந்துபணிந்தவரைக் கண்டுபெத்திராரும்
நீர்கொடுத்தகண்கள்ரெண்டும் நிக்கிக்கொர்விழியும்
கண்ணீரகலமிட்டுமே கட்ட முடியேகுமெசால்வான்
வாழ்விர்மைணர்த்திடுவீர் வர்த்திருப்பிருந்திருப்பீர்
நிற்பாய்மேசகிப்பாய் சீரமையாண்டியனே
கற்பதிகதருவ்போலக் கைவளருமானவனே
விற்பதிசதுரல்போல விளங்குமாமன்னவனே
என்னைப்பெருவாய் எதிர்காற்றுருபெருவாய்
பின்னைப்பெருவாய் பெருமைப்பதாபெருவாய்
பொறுக்குப்பயிர்விரிவாய் மெய்முழங்காட்டவெனத்துவாய்
மெலநகரியிலே விரைப்பட்டங்கட்டுமேவாய்
எதிரியைவென்றிடுவாய் எல்லைவரசாண்டிடுவாய்
மாற்றானை வென்றிடுவாய் மன்னுலகத்தையாண்டிடுவாய்
பெற்றிமொய்பெற்றிடுவாய் பிள்ளைபதினாறும்
பதினாறும்பெற்று பெருவாழ்வுவாழ்ந்திடுவாய்
வாழ்விர்காமெனைநுமனக்குளிரவாழ்த்தினர்
வாழ்த்திருப்பிபெல்லாம் மனக்குளிரவாழ்த்தினர்
வாழ்த்தியிடமெத்து படிமேலேதொவைதுந்தி
துளப்பிறந்த அபிமன்னராசாவும்
உன்னோடேகூட விளையாடுகிறுமென்றிருந்தேன்
பொன்னுலகாட்டுக்கு போனசெய்திநானறியேன்
இவ்வுலகைவிட்டு எழுந்தோடிப்போனிட்டான்
பற்றவர்கள்மேல பகைமுடித்தார்களடோ
பாரதத்தாரென்மேல் பகைமுடித்தார்களடோ
என்றுசொல்லிமங்கையரும் திருக்கண்ணாள்முத்துதிர்த்தாள்
முத்துப்போல்கண்ணீரை முகமெல்லாஞ்சோரவிட்டாள்
பவளம்போல்கண்ணீரை பக்கமெல்லாஞ்சோரவிட்டாள்
போருக்குமன்னர் புலந்திரனுந்தான்பார்த்து
வந்துவிழுங்கண்ணீரை வெட்டிலேதான்துடைத்து
மாதாவருந்துவது மன்னன்மனங்கொள்ளாமல்
இருக்கிறார் அபிமனுஞ் செக்காரமைந்திருக்கும்
உத்தமமேசெல்வத்து உன்புத்திரனிருக்கேவந்தான்
துயிலநேந்துயிலிடும் துக்கிதுயிலிடும்
மெத்தியிடமேதியிடம் நெலமொழியேயநேதயிலிடும்
அப்போதுசுபத்திரையாள் அரவிந்தமேதுசொல்வாள்
இப்போபுலந்திரனே அழிவுள்ளகண்மணியே
பொன்னுமணியே புலந்திரராசாவே
கட்டிமணியே கலிங்கத்துராசாவே
நாளைமுன் ரியிலே சனதசண்டிடுமென்றாரோ

நீதிமேவிக்கர்ணனை சேவகனுமில்லையோ
மாதுமினையாண்டுபோமோ மைந்தனைக்கொடுக்குமென்றான்
மைந்தர்புலந்திரனே மைந்தனைக்கேயது
வைதாலென்புலந்திரனே மைந்தனைக்கொல்லுமென்றான்
அக்கியுடமேமாதே அறியவுமாமென்றான்
போர்க்குசா மன்னர் புலந்திரனேதான் சொல்வார்
சொந்தப்பெருமாளு [illegible] யுடையவரும்
சேனையாளும் ஆழியுசந்தாரும்
[illegible] விடைபோர்க்குள் [illegible]
ஏந்தவரசுகள் பொன்னெபாற்றராஜாக்கள்
போப்பாப்பார் பெரியப்பாதங்கட்கு
விடையதனைவிட்டார்கள் வீமப்பெருப்புலிகள்
தோரணபாவையாய் தூதுரைக்கப்போனேனென்றான்
[illegible]
சோரவளர்க்கை சுபத்திரையாள் தான்கேட்டு
கதும்பிக்கதும்பிக் கண்கள் [illegible]
[illegible]
பத்தியதாயகம் பனிபோல் கண்சிவந்து
முன்னையும்பூசல் முடிந்துயிருக்குதே
இப்பவும் பூசை செய்யும்புவார் பஞ்சவர்கள்
[illegible] பஞ்சவர்கள் [illegible] பஞ்சவர்கள்
சிம்மாசெட்டி சுமப்பார்கள் பஞ்சவர்கள்
கடலைகரைக்குத் தொடருவார் பஞ்சவர்கள்
அலோலமென்று அழுவார்கள் பஞ்சவர்கள்
[illegible]
[illegible]
வையகத்தை யாண்டமைவன் மதிகுலைந்துபோனானே
இப்போது பிள்ளைதான் பக்கலைவிட்டானே
[illegible] படையில் மைந்தனைப்போகவிட்டாள்
போபோ புலந்திரனே போகவிட்டேன் [illegible] என்றாள்
அப்போ புலந்திரனும் ஆர்ப்பரித்துச் சொல்வார்
சேனையரும் ஆழியசந்தாரும்
போகவிடைதந்தார்கள் போர்மன்னராசாக்கள்
விடைதாருமென்றான் [illegible] முடியான்
சோரவளர்கன்னை சுபத்திரையுந்தானெழுந்து

சுபத்திரை புலந்திரனுக்கு பிரார்த்தனை செய்கிறது.

கன்னனாந்தான்பார்த்து நோக்கியனை திலெண்ணி
அறுபதுமுழச்சல்லா ஆனைக்குமானெடுத்து
மஞ்சள் துணிநனைத்து மங்கையவள் தானெடுத்து
ஆயிரம்பொன்னெடுத்து அடவுடனே தான்முடித்து
சோலைமலருடைய சொக்கரைதானினைத்து

அனைப்படையுடைய அர்ச்சுனர்க்காணிவேத்து
செடக்கவேலையுடையான் அருமைத்தமிழ்டார்கால்
தவமும் குரும்பொன்னிபல்லைப் பிளக்குடத்துடனே
கொண்டுவந்துகொடுத்தேன் கோபுரசன்னடை
மாதர்காள்படைநடுவில மைந்தர்புனத்திரனை
கன்[illegible]பாருமென்று காந்தனைத்தொழுதாள்
மைந்தனைக்காருமென்று மங்கையரும்கைதொழுதா
பொய்யாருமென்று[illegible] போகவிடைகொடுத்தான்
விடைபெற்றெழுந்திருந்தார் வேந்தர்பெருமானும்

புனத்திரன் துரோபதையைக்காணுகிறது.

தோரவடிவழகி துரோபதையைத்தேடுவாரான்
தோரவடிவழகி துரோபதையாள் சந்நிடம்
[illegible]பெருமான[illegible] தையல்புகுந்து
தோரவடிவழகி துரோபதையாளும்மேலவந்தாள்
தோரவடிவழகி துரோபதையாள்நாயகியும்
ஆட்டமுங்கூத்தாகியும் ஆனைக்குபார்த்திருந்தாள்
நட்டுமுட்டுசாலை நாட்டியங்கள்பார்த்திருந்தாள்
தாமக்குழலாளும் காதிலவந்துதெண்டனிட்டாள்
தோரவடிவழகி துரோபதைநாயகியே
இக்காடானல்லகாண் இத்திசையாகல்லகாண்
தென்னதிருநாடு திசையனைத்தும்வாழ்ந்தான்காண்
வையவளநாட்டில் பெற்றெடுத்தபுத்திரன்காண்
வாழ்பாண்டுநாட்டான் பயன்றெடுத்தகண்மணிகாண்
போரஞ்சாமன்னர் புனத்திரவீரியரும்
உன்-பிள்ளைவருகுதென்று பின்னொருக்கால்தெண்டனிட்டான்
மைந்தர்வருகுதென்று மறுக்கொருக்கால்தெண்டனிட்டான்
தோரவடிவழகி துரோபதையாள்தான்கேட்டு
மைந்தர்வருகுதென்ன மாதுமனங்குளிர்ந்து
பிள்ளைவருகுதென்ன பூவைமனமகிழ்ந்து
ஆட்டமுங்கூத்தாரும் அமருமென்றுகையமர்த்தி
நட்டுமுட்டுசாலையை நாளையென்றுகையமர்த்தி
அடிசிலம்புமபாடகமும் ஆர்க்கக்குதித்திறங்கி
பூஞ்சிலம்புமபாடகமும் பெய்க்கக்குதித்திறங்கி
கூடவேசோதியின்ன கொம்பேரிடையாளும்
மற்றுமொருவாதினத்தில் மாதரவள்வீற்றிருந்தாள்
போரஞ்சாமன்னர் புனத்திராவீரியரும்
ஓடமலர்க்கண்ணாளும் உட்சட்போய்புகுந்து
தோரவடிவழகி துரோபதையாள்தானிருக்கும்
ஆகிலைதின்றுமேனிவந்தான் அல்லித்திருமகனும்
பூவும்புதுமலரும் பொன்னறுகுஅட்சதையும்
பொன்வீருந்தொம்பிலே பண்ணீருங்கொண்டுவந்து

பாதம்தாகழுவி பட்டாலடிதுவட்டி
கொண்டுவந்தபூமலரை குடுகுமென்று நான்சொரிந்து
மூக்காலுவலம்வந்து முடிவணங்கி தெண்டனிட்டானே
நாற்காலுவலம்வந்து நமஸ்கரித்து தெண்டனிட்டானே
தேவராவடிவழகி துரோபதையுந்தான்பார்த்து
அப்பாமகனே அறிவுள்ளகண்மணியே
இப்பாரையாளுமெங்கள் சிகாமணியே
அல்லத்திருமகனே ஆணந்தவாழ்மார்பா
வாருகவாருகவென் வள்ளலேவருகவென்றாள்
திருவருகபூவருக தேனேவருகவென்றாள்
குடிகாமகொற்றமை கொண்டுவருகவென்றாள்
அங்கத்தரசருள்ளே அமர்ந்திருக்கும்பாற்குடமே
சொக்கர்திருவாசலுக்கு தூண்டாமணிவிளக்கே
கப்பலுக்குநேசாக்கும் கரைதுறையுமுள்ளவனே
முத்துப்பதித்தரையும் முழுகீழுங்கொண்டவனே
பவளம்பதித்தரையும் பத்துலட்சமுள்ளவனே
வையைவளநாட்டை வாழ்விக்கவந்தவனே
வாழ்மதுரைராச்சியத்தை ஆளவந்தரத்தினமே
ஆயிரம்பாண்டியற்கு அழகானபேரமையே
ஆணந்தவாழ்மார்பா அல்லித்திருமகனே
மருடத்துரையல்லியர்க்கு மனதானபுத்திரனே
கண்ணுதலகண்மணியே கட்டழகன்சீர்மகனே
பொன்னானபொற்குடமே புனந்திராசாவே
பொன்றாமிரண்டுருத்திக்கடியை பூவிரண்டுக்கண்ணிலொத்தி
தங்கத்தால்சித்தடியைத் தார்குழலாள்கண்ணிலொத்தி
மைந்தனைத்தொகுத்து மடிமேலேகொண்டணைத்து
இந்திரனைத்தாங்கி எடுத்துமடியில்வைத்தாள்
அப்போபுனந்திரனார் ஆணந்தவாழ்மார்பன்
மடியைவிட்டிறங்கியிறந்து மாதாவின்முன்னேவந்து
மாதாவின்சீர்பாதம் வணங்கியுன்னவனும்
நாலாவதிரதந்திபென்று காலமேல்முடிசாய்த்தான்
தேவராவடிவழகி துரோபதையுந்தான்பார்த்து
வந்துபணிந்தவனைக் கண்டுமகிழ்ந்து
வாழுவீர்வளர்ந்திருவீர் வாழ்ந்திருப்பீர்த்திருப்பீர்
நிற்பாய்நீடிரிப்பாய் வீரதைரியமுண்டிவாய்
சுப்பதித்தாள்போலே சகலஞ்சாமராசன்வாய்
விற்பதித்தாள்போலே விளக்கோதராசன்வாய்
என்னைப்பெருவாய் எதிரத்தார்முடிபெருவாய்
பின்னைப்பெருவாய் பெருமைபெருவாய்
போருக்குப்போய்விடுவாய் பொழுதோடேவென்றிடுவாய்
வென்றுகளத்திலேவீரபட்டங்கட்டிடுவாய்

எதிரிக்கிசைச்சதுரிக்கு மெலக்கிடையாலடிவோர்
மாற்றானைச் சங்கரித்து வையகத்தை யாளடிவோர்
கன்னிகையை மாலையிட்டுக் காமுகனில் விட்டிவோர்
பெண்களை மாலையிட்டுப் பின்னிசையைப் பெற்றிவோர்
மக்களை மாலையிட்டுக் கைக்கூலி பெற்றிவோர்
பெற்றதைப் பறிபெற்றிவோர் பின்னை பதினாலும்
பதினாறும் பெறாது பெருவாழ்வை யாழ்த்திவோர்
வாழ்வில் மனைக் குறைவாழ்த்திருக்கள்
மைந்தரைச் சேர்ந்து மடிமேலே கொண்டிருந்து
புத்திரனைச் சேர்ந்து பெரித்தாமடியில் வைத்து
தாயாரும் தந்தையுமே தனைகண்டு பந்தியிலே
திருமேனிக்கு ஏவலினை சேவகமும் இல்லாமல்
நல்வாழ்வி மயக்கிரகனை வர்த்தவகையேது
என்னாடைப் புத்திரனை வர்த்தவகையேது
நலவகையாக பிக்கைவர்த்திசொல்லுமென்று
அப்போபுனர்த்திரும் ஆக்கியருக்கேதுசொலவான்
ஆக்கிரிக்கேனும் அடிமேல் ஒருவார்த்தை
என்னுடைச்சீரேனும் இன்ன பெருவார்த்தை
பெற்ற பெருமானும் பிரியமுடையவரும்
இவரையும் ஆழிவுயர்க்காரும்
போசப்பாசப்பார் பெரியப்பாசந்கருக்கும்
விடையருளவிட்டார்கள் விப்பெருப்புலிகள்
சோரனையாய் நானைக்கப்போமேனென்றான்
ஆக்கிலக்கலனுலும் நானைக்கப்போகிறேனென்றான்
சோரவழிநுறி அபிராமனையுர்க்தான் கேட்டு
வைத்தாமுதமசோக்கி மாதாவும் யதுசொல்வான்
மாபாவிவாசனுக்கு மன்னவரே போகிறீரோ
அரும்பாவிவாசனுக்கு இபாகிரிப்போகிறீரோ
பெரும்பாவிவாசனுக்கு புத்திரரேபோகிறீர்
நானைக்கப்போயிடமைக சொல்லுகிறேன் கேளுமையா
பாதத்தினைவையார் பட்டைகட்டக்தன்னுடனே
பாலியிக்கேட்டிருப்பி நல்லிசெப்பொங்கிபோது
கர்ப்பம் வேண்டிக் கடைபாசிக்காலும்
கர்ப்பந்திண்டாகே கண்ணீராலாமரிகையில்
தண்ணீர்க்கிளையாகி தாகமெடுக்காலும்
தாகந்தணியாதே தலைஞ்செயனும் மாளிகையில்
வெற்றிலைவேண்டி விருப்பமதுகொண்டாலும்
வெற்றிலைகொள்ளாதே வேர்க்காடைநெருவில்
சுண்ணாம்புகொள்ளாதே குள்ளவாசலிலே
ஆடைக்காயும்பூஞ்சிரியோர் ஆசைக்கப்பெதுகிறு
ஆடைக்கப்பற்றிண்டாதே ஆலமரஞ் சம்பலத்தில்

வாசனைகொண்டுவந்து வகையாயெடுக்கவென்பார்
வாசனைகள் நின்றோமே வலுவாயன் அம்பலத்தில்
பொய்யாதிவையிவைவார் பொற்கைவளையாண்டிட்டோர
ஆதினருசெஞ்சேறகாதே ஆலந்தவாழ்டோர்ப்பா
கட்டுக்கயிறும் கயிறுகளாததனையும்
இந்தாருமென்று எடுத்து அவள்கைகொடுத்து
கண்ணிலாண்பெற்றிறுக்க கபடன்திரிபோதினே
கொழுமுகவாசலிலே கோடிபலவுவைப்பார்
சிம்மாதனக்கொலுவில் சேனையெடுத்துவைப்பார்
உன்னையவன் கண்டாலும் ஒருகோடியெடுத்துவைப்பான்
சொல்லுக்குச்சொல்லுரையுஞ்சிப்பூமுடியே
தூதுக்குத்தூதையுந் தூக்கிலங்கள்றோலை
ஒன்றுக்குப்பத்து ஒருநூறாக்காயிரம்
சொல்லுவதுமல்லாமல் சொற்சிலம்புசாயாமல்
கைநலறுமல் கல்லவர்ந்தைதக்குன்றுமல்
சீர்துரைத்துமிருமையா சுந்திரப்பூமுடியே
சிந்தைகவலைபுற்றுந் திருப்புமையா சுந்தரனே
மனதில்பட்டீர்கள் மன்னவனே போய்வாரும்
என்றுமவளுரைத்தாள் ஏலப்பாசுங்கிளியாள்
போர்க்காமன்னர் புலந்திரனார்தான்கேட்டு
அப்படிக்கேயாகுமென்று ஆச்செரணையென்றான்
போய்வாரேன் ஆத்தியென்று பொன்னடிக்குத்தெண்டனிட்டான்
கோதைவடிவழகி தோரணையுந்தானெழுந்து
அழகுண்ணவாருமையா வென்றுமவளெழுந்து
அழகுள்ளமண்டபத்தை பாரணைக்குழுட்புகுந்து
செய்பொனழுக்காலிலூற்றி செம்பொன்தளிகையிட்டாள்
புலிமுக்கால்தானிருத்திப் பொன்னால்தடுக்குமிட்டாள்
வாழையிலைபோட்டு மணிச்செம்பில்நீர்தெளித்து
தும்பைமலர்போல போசனமுந்தான்சொரிந்தால்
தானிருமும்பருப்பும் தன்னில்வகைக்கறியும்
கூட்டுக்கறியும் கொழும்புவகைக்கறியும்
பொரித்தபொரிக்கறியும் பொன்போலபருப்பும்
ஆயிரத்தெட்டு அருங்கறியுபோசனமும்
சத்திக்கறியமைத்தாள் புத்திரருக்குவார்த்தாள்
வாருமையசங்கமரே வைத்தமுதுகொள்ளுமென்றாள்
அப்போபுலந்திரனும் ஆத்தையருக்கேதுசொல்வான்
தம்பிலையைநான்கொடுத்து தற்சோறுதின்றையிலே
உடற்பிறப்பைநான்கொடுத்து உத்தவுயிர்சோரையிலே
செப்பளித்தகண்டாலும் தீர்ந்தமேபொங்கிபிலே
பாலடிசிலுண்டாலும் பறக்குமேபொக்கிஷிலே
வேண்டாங்காண் ஆத்தியென்று வண்ணமுடிசாய்த்தான்

புனந்திரன்தூது.

ஆழிதடங்கையால் அழுத்தியவன்வீற்றிருந்தான்
போகவிடைதாருமென்று பொன்னடிக்குத்தெண்டனிட்டான்
தோராவடிவழகி துரோபதையுமேதுசொல்வாள்
தூதுரைத்தமீளுமையா சுந்தரப்பூமுடியே
போய்வாருமென்றுசொல்லி பொருந்தவிடைகொடுத்து
விடைபெற்றெழுந்திருந்தார் வேந்தர்பெருமானும்
அரண்மனையேழுகட்டும் அந்தப்புறந்தாண்டி

புனந்திரன் அல்லியரசாணியைகாண்கிறது.

அவ்வீதியாக அழகாகதானடந்தான்
பொன்னுமலைநாடாளும் அண்ணாவுந்தானகூட
இருவருமாக யிசைந்துவழிநடந்தார்
குருட்சேத்திரப்பூமி குருபூமிதேசம்விட்டு
தேரோடும்வீதி தெருவும்பலதாண்டி
சித்திரவீதி தெருவுமபலதாண்டி
வாழ்மதுரைராச்சியத்தில் வந்தாரிருவருமாய்
பிறவாமுடிதரித்த பெண்பெருமாளண்டைவந்து
பூவும்புதுமலரும் பொன்னறுகுஅட்சதையும்
பொன்னீருஞ்சொம்பிலே பன்னீருங்கொண்டுவந்து
பனிநீரால்காலநிறப்பிப் பட்டாலடிதுவட்டி
கொண்டுவந்தபூமலரை குப்புறுமென்று தான்சொரிந்து
முக்கால்வலம்வந்து முடிவணங்கிதெண்டனிட்டான்
நாற்கால்வலம்வந்து [illegible]தெண்டனிட்டான்
மாதாவின்பாதம் மலர்தூவிதெண்டனிட்டான்
தெண்டனிட்டதன்மகனைக் கண்டக்கல்லியரும்
வாழ்வாய்வளர்ந்திடுவாய் வர்த்திப்பாய்வர்த்திருப்பாய்
நிற்பாய்நிலைதரிப்பாய் நீராசையாண்டிடுவாய்
கற்பதித்ததூண்போலே [illegible]தரசாள்வாய்
விற்பதித்ததூண்போலே பெருகாளாய்வாழ்ந்திடுவாய்
என்னைப்பெருவாய் எதிர்த்தார்முடிபெறுவாய்
பின்னைப்பெருவாய் பெருமான்பதம்பெறுவாய்
போருக்குப்போவாய் பொழுதோடேவென்றிடுவாய்
வென்றகளறியிலே வீரபட்டங்கட்டிடுவாய்
மாத்தானைக்கொண்டிடுவாய்வையகத்தையாண்டிடுவாய்
சினத்தவர்கள்பூமுடியை செண்டாண்பாட்டிடுவாய்
பகைத்தவர்கள்பூமுடியை பருந்தாட்டமாட்டிடுவாய்
பிள்ளைகளைப்பெற்றிடுவாய் போகமேவாழ்ந்திடுவாய்
மைந்தர்களைப்பெற்று மகிழ்ச்சியாய்வாழ்ந்திடுவாய்
வாழ்வீர்காணென்று மனங்குளிரவாழ்த்தினாள்
வாழ்த்திடுவீரென்று மனதாரவாழ்த்தினாள்
வாயாரவாழ்த்தி மனதுமிகக்குளிர்ந்து
வாரியெடுத்து மடியிலேகொண்டணைத்து

உச்சிமுகந்து உள்ளங்கால்முத்தமிட்டு
பக்கந்தடவி பவளவாய்முத்தமிட்டு
போய்வந்தகாரியத்தை கேட்கலுற்றாளக்கமியும்
அப்பாபுனர்திரரே அழகுள்ளகண்மணியே
அருந்தவத்தாற்பெற்றெடுத்த அழகுவாய்மார்பன்
புண்ணியதானம்செய்துதித்த பிள்ளைபுனர்திரரே
சொக்கநாதருளாலே துலங்கவந்தகண்மணியே
காலாளுமில்லாததகைதண்டியில்லாதே
நிருபணிகர்வல்லனை சேவகனுமில்லாதே
வாள்விசையன்சிர்மகனே வந்தவகைகளெல்லாம்
மைந்தர்புனர்திரரே வந்தவகைசொல்லுமென்றாள்
தன்றாய்க்குறைபாமல் வந்தமையைசொல்லுமென்றாள்

புனர்திரன்சேதியுரைக்கிறது.

அப்போபுனர்திரனும் ஆர்பெற்றதாயிடம்சொல்வார்
மடியைவிட்டுக்கீழிறங்கி வந்தெதிரில்நின்று
கைகட்டிவாய்புதைத்து காணிக்கையிட்டபுத்திரனும்
வளநாடுஅல்லிபற்கும் வாய்திறந்தேதுசொல்வான்
அம்மாநீகேளும் அடியேனுரைவார்த்தை
என்றேச்சிநீர்கேளும் என்னுடையகல்வார்த்தை
பெற்றபெருமாளும் பிரியமுடையவரும்
உடையாருக்கடைத்தபண்டபத்தில்
இவரனையும் அழிவுபக்தாரும்
மைந்தர்பெருமாளும் மேல்மண்டபத்திலிருந்து
என்னைவரவழைத்து எனக்கிட்டார்கட்டளைகள்
பேரப்பாரப்பா பெரியபாதங்களுக்கு
விடையருளவிட்டார்கள் விரப்பெருப்புலிகள்
தோரணவாயில் துரையைக்காணப்போமென்றுள்
தன்னிலைகண்டறியும் துரைக்கப்போகவென்று
போகவிடைதாருமென்று பொன்னடிக்குதெண்டனிட
இறவாமுடிதந்த பெண்பெருமான்தான்கேட்டு
கதிர்க்குக்கனலாமா கண்களிப்பறந்து
நிலவிழிகள்கள் நெருப்புத்தணலாக
பத்திரகாளம் பாலாம்போலக்கண்சிவந்து
செற்றியபுருவம் நெருப்பாயவல்பறந்து
சூரியமண்டலத்தை எட்டிப்பிடிக்கவாய்ப்போல
குன்றுபோல்கண்சிவந்து கொடியமதிமதால்
ஸ்ரீமதுரைக்குள்ளே நிறையிலவாயிலுக்குள்ளே
கட்டிவரும்பாற்குடக்கள் காவலன்மார்களிலே
எட்டிவரவிடுவார் எம்முடையவர்களுக்கு
இத்தனையும்தள்ளிவிட்டு ஏனோபோறேனென்றும்
அப்பாநீபோனால் அடியேன்பொறுப்பேனோ

மைத்தாநீபோனால் மனதுகளிப்பேனே
உள்ளங்களிக்கிடுவோம் உத்தமனார்புத்திரனே
அறிவீரறிவீர் அடியேன்குடிவிளங்க
அடியேன்குடிவிளங்க வந்துதித்தகண்மணியே
எங்கள்குடிவிளங்க வந்துதித்தரத்தினமே
மனதறிவன்பூமுடிக்கு மாட்டங்கள்வந்ததென்றால
தென்னவன்பூமுடிக்கு நீங்கள்வந்ததானால்
ஆறாயிரவர் அணிதிரளார்பாண்டியரும்
ஆறாயிரவரும் அடியவரும்நான்கூட
ஆறும்ஆகும் அலைவலைபாய்ந்திடுவோம்
பொன்னுயர்நாடாளும் அன்றுவும்பாய்ந்திடுவோம்
போகாதேபோகாதே புண்ணியனார்சீர்மகனே
என்றுமகனாருக்கு எதுசொல்லவிந்திரனும்
சோரவடிவழகி துரோபதைபோவென்றாள்
சோரணங்கை சுபத்திரைபோவென்றாள்
மஞ்சள்துகிலெடுத்து மலராமல்போய்விரித்து
சொக்கப்பொன்றானெடுத்து கலாபியைத்தானணிந்து
முடிப்பெடுத்துகட்டினார் மொய்குழலாள்தேவியர்கள்
போகவிடைதந்தார்கள் போர்விசையன்தேவியர்கள்
தேயும்விடைதாருமென்றான் திக்கிலங்கும்பூமுடியான்
பிறவாமுடிதரித்த பெண்பெருமாளேதுசொல்வாள்
சீறியெழுந்திருந்து சிங்ககுட்டிபோல்குதிப்பி
வாளுருவிகைபிடித்து மாதுநல்லாளல்லியரும்
சிம்மாதனத்தைவிட்டு கீழக்குதித்திறங்கி
எட்டடியுமோரடியாய் விட்டுமிகநடந்தாள்
பத்தடியுமோரடியாய் பார்த்துமிகநடந்தாள்
வேகமாய்தானடந்தாள் வேல்போருதுக்கண்ணாளும்
ஆங்காரங்கொண்டிடவே அல்லியவளோடிவந்து
ஐவருடகாவலிலே ஆனந்திப்போய்ப்புகுந்து
காண்டாவனமெரித்தக் காளையெதிர்க்கவந்து
அருச்சுனர்க்குமுன்பாக அல்லிமெல்லத்திருந்து
வில்லாளிபார்த்தருக்கு மெல்லியெடுத்துரைப்பாள்

அல்லிக்கும் அர்ச்சுனர்க்கும் தர்க்கம்.

அரிபாதகப்புலையா ஆனந்தவாழ்மார்பா
முத்துசூழ்தென்னாடு முழுதிலும் அவனியாள்வான்
மதுரையறுகாதம் வாழ்மதுரைமுக்காதம்
பொய்கையறுகாதம் பூமதுரைமுக்காதம்
வைகையறுகாதம் வாழ்மதுரைமுக்காதம்
அன்பத்தறுகாதம் ஆணழகன்ராச்சியந்தான்
முத்துப்படுந்துறைகள் பத்துலட்சங்கோடியுண்டு
பவளம்படுந்துறைகள் பத்துலட்சங்கோடியுண்டு

இத்தனையுந்தானிருக்க பெண்களிடபுத்திரனாய்
ஒன்றுமறியாளை வந்தனிடபுத்திரனா
பட்டினத்திலுள்ள படைமன்னர் தானறியார்
கொத்தளத்திலுள்ள ரூடிபடைகள் தானறியார்
அறியாதறியுமோ அண்ணன் ...
சிறுபவனுக்கேது ... ராஜ்யமே
அன்னையனுப்புதற்கு ... முன்னே ...
உனக்குப்பெரியவர்க ... மையத்தில்
அண்டமுலகளக்க ஆதிநாராயணனும்
ஆதிநாராயணனும் அவர் போலாகாதா
நக்கப்புகழுடைய ... போலாகாதா
கொற்றமையானை ... போலாகாதா
சித்திலக்குடியாள ... போலாகாதா
இன்னஞ்சிறியவர்கள் இருவர் போலாகாதா
குலசகாதேவ ராஜர்போலாகாதா
அறியாதை போகவிடா ... வந்தனுக்கு
தெரியப்புலந்திரனைப் போகவிடலாகாது
போபோபுலந்திரனே போகவிட்டேன் ...
என்றுமவள் ... தானவளும்
கண்டாலனமெரிக்க காளையுந்தீகட்டு
வில்லாளிபார்த்தர் சிறுபிள்ளை ...
அல்லிமுகம்பார்த்து அருச்சுனனுமே துசொல்வார்
ஆளப்பிறந்த அபிமன்னனைப்பெற்றாப்போல்
தாமமுடியான் கடோற்கஜனைப்பெற்றாப்போல்
அந்தாலத்திருக்க அரவானைப்பெற்றாப்போல்
போரத்துச மன்னர் புலந்திரனைப்பெற்றேனே
மாலைமுடியானை வழியில் கண்டெடுத்தேனே
ஆசையாக்குத்தானே ... தானேனே
என்பிள்ளையானைச் சிறுகல் அனுப்பத்துணிந்தேனே
பெற்றபிள்ளையானைச்சிறுகல் போக அனுப்பிவிட்டேன்
நான்பெற்றபிள்ளையென்று ... அனுப்பிவிட்டேன்
தான்பிள்ளையாமென்றால் பின்தொடருவார் ... சொன்னாய்
வையந்தனைதான் ... சொன்னாய்
என்றுமவளே கோபித்து ... சொல்வாளருச்சுனனும்
முத்துவிரல்சுழட்டி முன்னே பல்லைகடைத்தான்
பவளவிரல்சுழட்டி பல்லைமென்று கையைவைத்தான்
தங்கவிரல்சுழட்டிக் காடையிலே பல்லைகையைவைத்தான்
பிறவாமுடிதரித்த பெண்பெருமாள் கோபங்கொண்டு
அர்ச்சுனரைத்தான் பார்த்து அல்லியவளேது சொல்வாள்

அல்லியரசாணி அருச்சுனன்மேல் கோபித்தது.

வகுத்தெதிர்த்துச்சொல்கிறாய் ... சொல்லமறுக்கிறாய்

அந்தவைக்ரம்வந்த செருவமடக்குதற்கு
எடுக்காதேபரிகத்தி விருதாண்டாய்போட்டிடுவேன்
கத்தியெடுத்துவா கடுகெனவேவெட்டிடுவேன்
என்றுமவள்சீறி யெக்காளித்தப்பின்பு
மண்டியிட்டெடுக்குகிறாள் மாதுநல்லாளல்லியரும்
காமக்குழலாளும் தாதியவளோடிவந்து
அல்லிக்குமுன்னேவந்து அடிவணங்கிதெண்டனிட்டாள்
கைத்தலத்தைத்தான்பிடித்து கட்டழகியதுசொல்வாள்
ஆனைகட்டிவந்தாலும் ஆனந்தவாழுமாரி
ஆளன்பெருமை வேணுமம்மா ஆரணங்கே
குதிரைகட்டிவந்தாலும் கொந்தார்குழலியரே
கொண்டார்பெருமை வேணுமம்மா கொம்பனையே
தங்கமதிலேறி தானடந்துவாழ்ந்தாலும்
தாலிப்பெருமை வேண்டுமம்மாதையலரே
மஞ்சட்பெருமையது வேண்டுமம்மாதையலரே
ஆயிவிடும்ஆயிவிடும் ஆச்சியரே ஆயிவிடும்
தேயிவிடும் தேயிவிடும் தேவியரே தேயிவிடும்
தணியுந்தணியுமம்மா தனஞ்சயனார்தேவியரே
என்றுமவளுரைத்தாள் ஏந்திழையாள்தாதியரும்
பிறவாமுடிதரித்த பெண்பெருமாள்நாயகியும்
கொம்பனையாள்கோபங் குணப்படுத்திக்கொண்டவளும்
மங்கைநல்லாள்கோபம் வசப்படுத்திக்கொண்டவளும்
பிடிக்கபிடியோடே பொன்மதுரைகொண்டுவந்தாள்
அடிக்கபிடியோடே அவளிருக்கைகொண்டுவந்தாள்
வாழ்பாண்டிநாடாளும் வையைநாடுவந்தாள்
அரண்மனையேழுகட்டும் அந்தப்புரந்தாண்டி
ஓடமயிற்கண்ணாள் உட்கட்டிற்போய்ப்புகுந்தாள்
சிம்மாதனத்தருகே சென்றளே அல்லியரும்
போரஞ்சாமன்னர் புனந்திரனாரோடிவந்து

அல்லியைப் புனந்திரன் காண்கிறது.

அல்லியெதிர்வந்து அடிவணங்கிதெண்டனிட்டு
போனதொருகாரியங்கள் புறத்திலேகேட்டிருந்தேன்
நீசென்றகாரியங்கள் நின்னையங்களானறிவேன்
அருச்சுனரும்நீயும் அடுக்குமோயுத்தஞ்செய்ய
நீகோபித்துகண்டேத்து கொல்லத்துணிந்ததுவும்
எல்லாமறிவேன்காண் என்னுடையஆச்சியரே
போரவிடைதாருமென்றான் போரஞ்சாபுத்திரனும்
அப்போதுஅல்லியரு மாரனைக்குறியேதுசொல்வாள்
மைந்தர்முகம்நோக்கி மாதாவெடுத்துரைப்பாள்
வீம்புகள்பேசி விகடங்கள்பண்ணுதற்கு
விகடங்கள்பண்ணுதற்கு விளுபன்மக்களல்லோ

என்றுபவீருனாத்து வெழுந்துநடக்கலுற்றாள்

சொக்கர்சோதிநாக அல்லியாகிறது.

பன்னாகத்தாம்பாளமது சொக்கலிங்கமென்னை
தண்ணமர்பொழுதேடும் அரசப்புரத்தாண்டி
போரஞ்சாமன்னர் புனந்திரற்கேதுசொல்வார்
ஆனால்நீகள்மன்னவனே அந்தகாலமு
கோணுகமாதவத்துக் குந்தியம்மாள்தாயகியும்
அஞ்சுபிராயத்திலே அறியாதநாளையிலே
துருவாசமாமுனிக்குச் செய்தாள்பணிவிடைகள்
அந்தப்பணிவிடைக்கு மெச்சிமகாமுனியும்
ஐந்துமந்திரந்தன்னைக் கற்பித்தாரசியர்க்கு
மந்திரவல்லமைகளறியாள்காண் ஆச்சியரும்
அதிலேயொருமந்திரத்தை தேர்தரித்தாள் ஆங்கவளமே
சூரியமந்திரத்தைச் சொன்னாளேவாயாலே
சொன்னவுடனேதான் தோன்றினார்சூரியனும்
கோணுகமாதவத்துக் குந்தியம்மாள்தன்னையவர்
பருவமதுணடுசெய்து பட்சமுடனே
கூட்டிக்கலந்திருந்தார் கொம்பனையாள்தன்னுடனே
அப்போதுகெற்பந் தரித்துஅழகாக

குந்திசொல்வது.

கோணுகமாதவத்துக் குந்தியம்மாளேதுசொல்வாள்
அஞ்சுவயது அறியாதகாலத்திலே
நானொருபிள்ளைபெற்றால் நாடெல்லாம்ஏசாதோ
என்றுமவளுரைத்து சொல்லிப்புலம்பினாள்
பானுகுலத்துதித்த சூரியனுமேதுசொல்வார்
அஞ்சாதேபெண்மயிலே என்றுமவரெழுந்து
ஆணழகர்வீரியரும் அறைந்தார்தவடையிலே

அன்றந்த அறையாலே பிறந்தார் தருமரும்
கவசகுண்டலந்தன்னுடனே கன்னத்திலேதான் பிறந்தார்
கன்னத்திலே பிறக்கவே கருணனென்று பெயருமிட்டு
குந்திதேவி திருக்குதக் கோலவாகைப்பட்டாளே
முந்தாணி தன்னிலே கிழித்து ஒருமுழந்தான்
ஒருமுழந்தான் கிழித்து உத்தமர்க்குத் தானபோர்த்தி
பஞ்சவர்ண பேழையிலே குழந்தையை உள்ளடக்கி
சாற்றிப் பூட்டியிட்டு விட்டார்கள் ஆற்றுதனில்
ஆற்றில் குழந்தையை விட்டு தருமரும்போய் நடந்தார்
கோணுமாதலத்துக் குந்தியம்மாள் போய்நடந்தாள்

கருணர் பேழையில் மிதப்பது.

ஆற்றிலே பேழை பாய்ந்து மிகத்தளும்பி
ஆத்திபுரத்தை அடுத்தது அப்பேழை
தேசத்தையாளும் துரியோதனன் தானும்
அவனுக்குத் தோழனவன் ஆணழகன் தச்சனவன்
ஆற்றங்கரையோரம் வந்தாரிருவருமாய்
தேசத்தையாளும் துரியோதனன் தானும்
அவனுக்குத் தோழனவன் ஆணழகன் தச்சனவன்
ஆற்றங்கரையோரம் வந்தாரிருவருமாய்
ஆற்றிலே பேழையது அடித்துவரக் கண்டார்கள்
தேசத்தையாளும் துரியோதனன் பார்த்து
பெட்டி வருகிறது பேழையது எனக்கென்றான்
ஆணழகன் தச்சனவனேது சொல்வான்
பெட்டி தனக்காகுமானால் பேழையதுவுள்ளிருக்கும்
பேழையதுவுள்ளிருக்கும் பூஷணங்களென்னுடைதென்றான்
இப்படியாகச் சொல்லியிருந்தார்களிருவருமாய்
வேகமாற்றமலே கிடவெள்ளந்தான் பெருகி
ஆறுபோக்கில் திருப்பி அப்பெட்டி தானமிதந்து
ஆற்றின்கரையோரம் அபர்ந்து பெட்டியது
குளத்தின்கரையோரம் போயே மிதக்கியது

தச்சனுந் திரியனும் ஆற்றில் பேழையைக் கண்டெடுப்பது

தச்சன் திரியனும் கண்டு ஓடிப்போய்ப் பேழைதன்னை
இருவருந்தூக்கிப் பிளக்கவே நடந்தார்
மரநிழலில் பிளந்தார்கள் மன்னவர்கள் தச்சனும்
பேழையின் உள்ளேகண்டு தான்திறந்தானுச்சமனும்
பேழைதனில் உள்ளிருக்கும் பிள்ளையைக் கண்டார்கள்
தச்சனவன் எடுத்து தானடந்தார் மாளிகைக்கு
குழந்தையை வளர்க்கத் தொற்றவனுக்குத் தானடந்தான்

தச்சன்பிள்ளையைப்பெடுத்துக்கொண்டுபோய்
வளர்த்துக்கொண்டிருந்தது.

மாளிகையிலகொண்டுவந்து மைத்தீனீராட்டி
மைத்தீனீராட்டி மலர்க்கண்ணில்மையெழுதி
கமலத்திருமுகத்தில் கஸ்தூரிபொட்டுமிட்டு
உச்சிதமான வுடைமைகள்பலதிருத்தி
கோலவர்ணபூஷணங்கள் குழந்தைக்குதானணிந்து
வன்னவன்னபூஷணங்கள் மைந்தர்க்கலங்கரித்து
கொம்பிலேசிறுதேனும் கோதுபடச்சர்க்கரையும்
மலையில்சிறுதேனும் கொளச்சர்க்கரையும்
கூட்டிப்பிசைந்துமல்லோ கொம்பவர்க்குதானூட்டி
தள்ளிப்பிசைந்துமல்லோ தார்வேந்தர்தானூட்டி
பன்னீரால்வாயலம்பி பட்டாலேவாய்துடைத்து
ஈரம்உலர்த்தி பிறைசேர்த்தபட்டுடுத்தி
மைந்தனைத்தானெடுத்து மடிதடத்தான்மன்னவனும்
தெத்துதெருத்தாண்டி தேரோடும்வீதிவிட்டு
கடையுங்கடைத்தெருவுங் கருமாரிதிரிவிட்டு

தச்சன் திரியோதிரன்மாளிகைக்குக்குழந்தையாகிய
கருணையைப்பெடுத்துக்கொண்டுபோனது.

மாநகரமாளும் மகாராசன்மாளிகைசென்றான்
தேசத்தையாளுந் திரியோதிரப்பெருமான்
அமுதுண்ணுமண்டபத்தில் ஆனமுகனையெழுந்தான்
செம்பொன்முக்கால்நிறுத்தி செம்பொன்தளிகையிட்டார்
புலிமுக்கால்நிறுத்தி பொன்னால்தளிகையிட்டார்
இட்டதொருஆசனத்தில் மதியவர்வீற்றிருந்தார்
அங்குமொருசாதி அறிவுடையாள்சொல்லுகிறாள்
மாணிக்கக்கிண்ணிகளை வைத்தாராம்

திரியோதிரன் ௩௨ கிண்ணியில்பொசிப்பது

முப்பத்திரண்டுகிண்ணி முடிமன்னர்கிட்டேவைத்தார்
அமுதுபடைத்தார்கள் ஆரணங்குமாதியர்கள்
பத்துவகைக்கறியும் பாலடிசல்போசனமும்
மற்றும்வகைக்கறியும் வண்ணவிதபோசனமும்
அத்தனையுங்கொண்டு அளித்தார்சுந்தரியர்கள்
போசனமும்வைத்து பருப்புக்குநெய்சொரிந்து
காரவின்நெய்சொரிந்து கட்டித்தயிர்கொடுத்தார்
தேசத்தையாளும் திரியோதிரப்பெருமான்
அமுதுபொசித்திருந்தார் அழகானராசாவும்.

அக்கினிதாருமே [illegible] க்காண்
[illegible] பூக்களே
குழந்தையைத் [illegible] யதுவும்
தேசத்தையாளும் திரியோதிரன் [illegible]
[illegible] திரைகள்
[illegible]
[illegible] பாரகள்
[illegible] கும்
[illegible] திருக்கும்
திரியோதிரன் [illegible] குழந்தையாகிய.

[illegible] ஸ்ரீகாரக்கொண்டது.

அப்போதிருழுந்தையது [illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] திரியோதிரன்
புழுக்களுடனே [illegible]
[illegible]
[illegible] குழந்தை
[illegible]
புழுக்களுடனே [illegible]
தேசத்தையாளும் திரியோதிரனைப்பார்த்து

திரியோதிரன் சந்தோஷிப்பது.

புத்திரரும் [illegible] பிள்ளை
[illegible]
[illegible] பூரித்து
[illegible]
[illegible] கொண்டான்
[illegible]
[illegible]
[illegible] திருக்கு
[illegible] திரியோதிரன்
[illegible] சொல்வான்
அப்பாகே [illegible] வார்த்தை
[illegible]
[illegible] வாக்கருளும்
[illegible] குழந்தைத்து
[illegible]
குழந்தையாலுக்கு கொட்டிக்கிறேனிரத்தினங்கள்
[illegible] போட்டிக்கிறேனிரத்தினங்கள்
இந்தக்குழந்தை [illegible]

திரியோதிரன் தச்சனுக்கு குழந்தையிடைக்கும் பொன்கொடுத்தது.

குறுக்கொன்றும்பேசாமல் குழந்தையையீந்துவிடும்
மறுவார்த்தைசொல்லாமல் மைந்தனையீந்துவிடும்
எனறுமவனுரைக்க எதுசொல்வான் தச்சனவன்
மன்னனார்கேட்டதற்கு மறுவார்த்தைசொல்லாமல்
அரணமனையார்கேட்பதற்கு அஞ்சிப்பயந்தவனும்
செங்கோலமுறைமைக்குமுன் சங்கீதமேபாறெனறான்
சித்தத்துக்கேத்தபடி செய்தருளிகொள்ளுமென்றான்
உந்தன்மனதின்படி உகந்தருளிககொள்ளுமென்றான்
தேசத்தையாளுந் திரியோதிரனகேட்டு
சந்தோஷப்பட்டுச் சரீரங்கள்பூரித்து
இடைக்கிடைரத்தினங்கள் யெடுத்துநிறுத்தினார்கள்
குழந்தையிடை ண்டு கொட்டினாரத்தினங்கள்
மைந்தனிடை கண்டு வாரியெடுத்தார்கள்

பிராமணரையழைத்து நாமகாணஞ்சூட்டினது.

வேதப்பிராமணர் வேதியரைத்தானழைத்து
சாஸ்திரங்கள்தான்பார்த்து சாதகங்கள்தானெழுதி
நாளதுகேட்டு நடுநாள்முகூர்த்தமிட்டு
நாமமுடியானுக்கு நாமகரணம்பண்ணிவைத்து
காஞ்சிநாடாளுங் கர்னனென்றுபெயருமிட்டு
கலத்துப்புழுநீக்கின கர்ணனெனறுபெயருமிட்டு
மூன்றாம்வயதிலே முத்துமுடிதரித்து
நாலாம்வயதிலே நாடாளச்சொப்பனிட்டு
ஐந்தாமவயதிலே ஆணபூசர்கர்னருக்கு
இராச்சியமுறைமைகளை நன்றாய்தெரியவைத்து
ஏழாம்வயதிலே இளையபட்டங்கட்டிவைத்து

காசிநாடடை கர்னருக்குப்பட்டஞ்சமர்ப்பித்தது.

போதேவருந்தடங்கும் பொன் னுருவிநயகியை
மாலைமுடியாற்கு மணமுகூர்த்தபண்ணிவைத்து
அன்றுமுதலின்றளவும ஆண்டிருந்தார்ராச்சியத்தை
மனதுகுறையில்லாமல் வையத்தையாண்டிருந்தார்
ஏதுகுறையில்லாமல் இனியரசையாண்டிருநதோம்
இழிகுலத்தான்மாளிகையில் யிருந்தபடியாலே
தேர்ப்பாகனென்றுசொலலி எங்குமேபோச்சு
காசிவளநாடாளுங் கர்னர்பெருமாளும
ஐவர்க்குமூத்ததொரு ஆனந்தவாழ்மார்பன்
குந்தியம்மாள்பெற்றெடுத்த குலக்கொழுந்துயிவர்காணும்
உனக்குப்பெரியதந்தை என்றாரேஉத்தமனார்

புனந்திரன் கர்னனைக் காணுகிறது.

போரஞ்சாமன்னர் புனந்திரனுந்தான்கேட்டு

யானைவிட்டுக்கீழிறங்கி யானைக்கலாழ்மார்பன்
பூவும்புதுமலரும் பொன்னறுகு அட்சதையும்
பொன்னீருஞ்சொம்பிலே பன்னீருந்தானெடுத்து
காஞ்சிகோட்டாளுக் கர்ணருக்கெதிரேவந்து
பன்னீரால்காலலம்பி பட்டாலடி துவட்டி
கொண்டுவந்தபூமலரை குப்புகுப்பென்றுதான்சொரிந்து
முக்கால்வலம்வந்து முடிவணங்கிதெண்டனிட்டார்
நாற்கால்வலம்வந்து நமஸ்கரித்துதெண்டனிட்டார்
தந்தையார்சீர்பாதம் வணங்கிநின்றார்வேந்தன்
வந்துபணிந்தவனைக் கண்டுமனமகிழ்ந்து
வாரியெடுத்து மடிமேலேகொண்டணைத்து

கர்ணர்புனந்திரனை வாழ்த்துகிறது.

வாழ்வீர்வளர்ந்திடுவீர் வாழ்ந்திருப்பீர் சிறந்திருப்பீர்
திறமீர்நிலைதரிப்பீர் தீரரைபாண்டிடுவீர்
கற்பகத்தருவைப்போலக் கலங்காதரசாள்வீர்
விற்பனக்குபேரன்போல விளங்கஅரசாள்வீர்
எண்ணைப்பெறுவீர எதிர்த்தார்முடிபெறுவீர்
பின்னைப்பெறுவீர் பெரியாள்பதம்பெறுவீர்
போருக்குப்போவீர் பொழுதோடேவென்றிடுவீர்
வென்றுவரிசையிலே வீரபட்டங்கூட்டிடுவீர்
நினைத்தார்கள்பூமுடியைச் செண்டாட்டமாட்டிடுவீர்
பகைத்தார்கள்பூமுடியை பந்தாட்டமாட்டிடுவீர்
மாற்றாசைப்படைமுகத்தில் மன்னர்களைவென்றிடுவீர்
மதுரைப்பதியாள மைந்தர்களைப்பெற்றிடுவீர்
அத்திபுரமாள ஆண்பிள்ளைபெற்றிடுவீர்
மாதர்களைமாலையிட்டு மைந்தர்களைப்பெற்றிடுவீர்
கன்னிகளைமாலையிட்டுக் காளைகளைப்பெற்றிடுவீர்
பெண்களைமாலையிட்டு புத்திரரைப்பெற்றிடுவீர்
பெற்றிடுவீர்பெற்றிடுவீர் பிள்ளைகள்பதினாறும்
பதினாறும்பெற்று பெருவாழ்வுவாழ்ந்திடுவீர்
ஆலம்போல்தழைத்து அறுகுபோல்வேரூன்றி
மூங்கில்போல்சுற்றம் முசியாமல்வாழ்ந்திருப்பீர்
வாழ்வீர்காணென்று மனங்குளிரவாழ்த்தினார்
வாழ்த்திவிடைகொடுக்க மாதாவோடேசென்றணைந்து
தாயைமுகம்நோக்கி கட்டழகரேதுசொல்வார்

மறுபடியும் கர்ணனுரைப்பது.

தாயர்வலுவெழுந்தீர் தம்பிமார்தோளெழுந்தீர்
வீமர்வலுவெழுந்தீர விசயனார்தோளெழுந்தீர்
ஒப்பிவிட்டவாளை உறையுருவிவிட்டாற்போல
தப்பிவிட்டீர்களேயப்போ தம்பிபுனந்திரனே
வாயாரவாழ்த்தி மனதைப்பெரிதுபண்ணி

ஐயாபுனந்திரரே ஆணழகாநீர்கேளும்
வந்தவகையறியேன மனனுபுனந்திரரே
தேசத்தையாளுந் திரிபோதிரனசபையில்
தாமமுடியான் றைதலாட்டானங்கிருப்பான்
அவரைநீகண்டாலே ஆசாரம்பண்ணுமென்றார்
ஆசாரம்பண்ணி ஆகலப்போய்நில்லுமென்றார்
கோணுதமாதவத்துக் குருக்களுமங்கிருப்பார்
அவரைநீகண்டாலே ஆசாரஞ்செய்யுமென்றார்
தேசத்தையாளுந் திரிபோதிரபெருமான்
அம்பலத்துவாசலிலே ஆசனங்கள்சொப்பனிட்டான்
நீலங்தவிசேஷ மதுவறிந்துமனனவனும்
ஆழக்குழிதோண்டி அமைத்தான்படுகுழியில்
ஈட்டிபிடிமன்னவர்கள் எழுநூறுகோடியுண்டு
கத்திபிடிமனனவர்கள் கஸ்திபாகோடியுண்டு
வாள்கத்திசூலாயுதம் வளவுதடிசக்கரங்கள்
இத்தனையுங்கொண்டு அமைத்தான்படுகுழியில்

மறுபடியும் கர்னர்புத்திகூறுவது.

படுகுழிக்குமேலாக பச்சைத்துகில்விரித்து
பூவாலேஆசனங்கள் போட்டார்கள்புனந்திரற்கு
ஆணழகனம்பலத்தில ஆசனஞ்செனறேறுதே
தட்டோடேவெற்றிலையும் சாதிக்காய்லவுங்கசுகளும்
கொத்தோடேபழக்குலையும் குமியுளளதேங்காயும்
மல்லிகைப்பூமாலைகளும் மாங்கனிறைந்ததாவடமும்
கச்சாயவாககமெலலாங் கட்டழகனதானெடுத்து
உன்னையெதிர்காண வருவார்காணுத்தமனே
மன்னவன்கையிலே மாலைதரித்தாலே
மாலைதரித்தாலே மைந்தர்புனந்திரரே
கச்சாய்தீண்டாதே கட்டழகாவீரியனே
இத்தனையுஞ்சொல்லி யிருந்தாரேகாரைப்போ
போரஞ்சாமன்னர் புனந்திரனுந்தான்கேட்டு
அப்படிக்கேநல்லதென்று அடிவணங்கித்தெண்டனிட்டான்
தெண்டனிட்டமைந்தனைக் கண்டுமேகர்னருமே
ஏற்குமோஏற்குமோ யிழிகுலத்தானவற்கு
ஏற்குமோயெந்தனுக்கு உந்தனிடமுபிடுதான்
சாதிகெட்டவெந்தனுக்கு உந்தனிடமுபிடுதான்
ஐயாபுனந்திரரே ஆகாதுவென்றுரைத்து
என்றவுரைகேட்டு ஏதுசொல்வானிந்திரனும்
ஆதேதுஎன்னையா அதிசயமாய்நீருரைத்து

புனந்திரர் கர்னருக்குச்சொல்வது,

ஐவருக்குமூத்தவர்நீர் அப்படிக்கிசொல்லலாமோ
என்றுமவனுரைத்து யிந்திராசாவும்

சிவசிவாவென்று திருச்செவியில்கையைவைத்து
ஆகாரவென்று அலர்த்தி அலைதாரன்
ஐயாவென்றோமேகூற அறவேயென்றுவார்த்தை
என்னையார்க்கூறும் வினைசொல்லுவார்கலத
ஜயபிடராச்சியத்தை யாருக்கொடுத்தோமோ
மதுரைவிபருபட்டணத்தை யாருக்கொருமன்னவனும்
நாலத்திக்கினார் நாம்சொறுவ பூமியை
மையமாருளகேள மன்னவர்களைப்பேன்
சொக்கநாதரேல கருப்பேசிறுபட்டணத்தில்
அவர்கள்குடியேற்று அரசாளவைப்பேனயான்
அத்திபுரத்தை அரசாளுவமையாமே
ஐவருமிருக அரசாண்டிருக்கக்காலம்
தர்மருபவீமருட அர்ச்சுனரும்
நகுலசகாதேவ ராசசக்கரவர்த்திபருமே
உமக்குதைக்கட்டுவெசெய்யுமாகத்துக் கட்டுகாரருப்பார்
அடிமைத்தொழிற்செய்வார் ஐவர்பஞ்சபாண்டவர்கள்
அப்படிக்கேகேட்டதுக்கு ஆருமென்றுராச்சியத்தை
காருசிராட்டாதுகாரணேதுகேட்டு
மைந்தருமகேள் ஒருவார்த்தைபோதுசொல்வார்

கர்ணன் புனர்திறந்துவரப்பது.

ஜெயபுனர்திரரே அவ்வார்த்தைசொல்லுகிறேன்கேள்
தேசத்தையாளும் துரியோதனராசன்
என்னைவளர்த்தகருணையுள்ளவத்திருக்கேர்த்திகளும்
பின்னையருளைக்கூறும் பட்டகேர்த்திகளுமே
எனக்குவப்பட்டதை செய்ததுபோகோடியுண்டு
கண்டவேடைக்கும்போறுசேல வேல்பொருதுங்கள்றுனும்
மாளிவந்துசேருபட்டுமுடபஞ்செனமேறான்காண்
எனக்காகப்பட்டதை செய்ததுபோகோடியுண்டு
எழுதமுடியாது பெடபுடைக்காது
போதேவருங்கடக்கும் பொன்னருள்காயவிக்கு
மாலைகரிப்பகுந்து மன்னவர்கள்காணதிப
அன்பக்காரத்தகசந்துக்கு அறாதாபரையேயாசை
கண்டவித்துராசாக்கள் வந்தார்கள்பந்தலுக்கு
தேசத்தையாளும் துரியோதிரப்பெருமான
என்னையலைந்து வெண்குடிகவலங்கரித்து
என்னையழைத்து நடந்தார்காண்பந்தலுக்கு

இந்திதுவந்தாலென்றுசொல்லி கர்ணனையிகழ்ந்தது.

ஆசாரிப்பிள்ளையென்று தள்ளிவிட்டாரென்னையவர்
தச்சனிடபிள்ளையென்று தள்ளிவிட்டாரென்னையவர்
அப்போதுரியோதன் அரசாளும்ராசமன்னன்
சிம்மாசனமேறித் தேன்மொழியாள்வீற்றிருந்தாள்

என்னையவர்தள்ளிவிட்ட சேதியவரறிந்து
மண்டலத்தார்தானறிய மடிமேலேகொண்டணைத்தார்
மண்டலத்துராசாக்கள் வந்தசபைநடுவே
தேசத்துராசாக்கள் யிருக்குஞ்சபைநடுவே
போதேவருக்கடங்கள் பொன்னுருவியுன்னிச்சி
மாதரிளங்கொடியாள் மாலைசூழ்ப்பிலக்காள்
தேசத்தையாளுந் திரியோதிரன்பார்த்து
மாலைபிடுங்கவென்று மாயவரைத்தானழைத்தான்
மாயர்பெருமாளும் மாயமாய்வந்துவிட்டார்

ஸ்ரீகிருஷ்ணர் வந்தது.

கெருடன்வடிவெடுத்து செற்சனையிட்டுமல்லோ
மாதினிடைமாலை பறிக்கவேமாயவரும்
மாலையிவர்பறித்த சேதியவரறிந்து
தேசத்தையாளுந் திரியோதிரப்பெருமாள்
கனையாழிமோதிரத்தைக் கழட்டிவிட்டார்பூமியிலே
என்னைக்குனிந்தெடுமென்றார்மோதிரத்தை
குனிந்தெடுக்கையிலே கோபாலனைத்தானும்
மாலைசூழவிட்டார் வந்துவிழுந்ததுகாண்
எந்தனிடகழுத்தில் விழுந்ததுபூமாலை
அங்கிருக்கும்ராசாக்கள் அனைவோருந்தான்பார்த்து
இழிகுலத்தான் தனகழுத்தில விழுந்ததுமாலையென்று
தட்டிநகைத்துமல்லோ தார்வேந்தர்போய்நடந்தார்
கைகட்டிவாய்புதைத்துக் கட்டழகர்போய்நடந்தார்
போதவருக்கடங்கள் பொன்னுருவிநாயகிக்கு
ஐம்பதுபேரையன்மார் ஆச்சிமாரைம்பதுபேர்
அத்தனைபேர்களும் அனைவோருமேதுசெய்தார்

பொன்னுருவிதாய்தகப்பன்மார் புறக்கடையாலோடுகிறது.

அடிசில்சமைத்திருக்க அத்தினையுந்தானெடுத்து
மண்ணைவெட்டித்தான்புதைத்து மன்னவர்கள்ஓடலுற்றார்
புறக்கடைவீதியிலே போய்நடந்தார்மன்னவர்கள்
அன்றுமுதலின்றளவும் அவர்கள்வரவுமில்லை
தேசத்தையாளுந் திரியோதிரன்பார்த்து
போதவருக்கடங்கும் பொன்னுருவிநாயகிக்கு
ஐயன்மார்சீர்போல நடத்திறேனென்றழகன்
ஏதுகுறையில்லாமல் யின்றளவுந்தன்பாட்டன்
எனக்காகப்பட்டதவம் எத்தனையோகோடியுண்டு
மனமாறப்பட்டதவம் மன்னவனேகோடியுண்டு
மற்றுமொருநாளில் மன்னவரோபெக்தனுக்கு
காய்ச்சலடிக்கிறதும் கண்ணைச்சொருகிறதும்
விக்கலெடுக்கிறதும் யில்வாட்டம்வாடுறதும்
எட்டுநாளங்களவே யிருந்தேன்பசிக்கையிலே

பத்தியக்காரனென்று படிக்கவேயாகாதென்று
பெண்டமயிற்கண்ணாள் பெருந்திருவாள்நாயகியை
திரியோதிரன்பந்தனைமேல் தாமிருவர்வீற்றிருந்து
சொக்கட்டானுருட்டி சதுரங்கமாடினேங்காண
திரியோதிரன்றேவி தோற்றாள்பெருந்திருவாள்
மாலைமுடியானும் மறவுக்குப்போகவென்று
எழுந்துநடக்கையிலே எத்திலங்குபூமுடியாள்
அவன்றனதாணிபற்றி யிழுக்கேகாண்மன்னவனே
துகிலாடைபற்றி யிழுத்துயிருக்கையிலே
முத்தாமலைகோர்த்த துகிலாடையத்தனையும்
பற்றியிழுக்கையிலே படபடென்றுதானவிழ்ந்து
கொட்டித்தரையிற் குலைந்ததுமுத்துகள்தான
பேர்வாணமாறுனை முத்திலங்குபூமுடியாள்
மானங்குலைந்து மனைவாசநின்றாள்
தேசத்தையாளுந் திரியோதிரபெருமான்
மாலைமுடியானும் வனமேவேட்டையாடியல்லோ
மாலைவேட்டையாடியல்லோ வந்தாரரண்மனைக்கு
அங்கேகடக்க அதிசயமுள்ளதெல்லாம்
சொக்கட்டானுருட்டி சதுரங்கமாடினதும்
கொற்றமுத்துக்கொட்டிக்கள் குவிந்துகிடக்கிறதும்
ஆடைகளைந்துமவள் அம்பலமானதுவும்
மாலைமுடியான் மறவாய்ப்பிணைக்கிடந்தும்
அத்தனையுங்கண்டிலே ஆறுமுதுமன்னன்
அக்கிருத்தியத்தரியர்கள் அதிசயப்பேரோது சொல்வார்

தாதிகள் சொல்வது.

இன்றைக்குனைமேடுத்திலாரென்பார்கள்
செத்தான்கருணையென்று சொல்வார்களனேகம்பேர்
மாண்டான் கருணையென்று மண்டலத்தார்சொல்லிடுவார்
தேசத்தையாளுந் திரியோதிரனப்பார்த்து
நன்றேயிருக்க துகிலாடைதான்களைந்து
மாலைக்குழலாட்கு பங்கையர்க்குத்தான்கொடுத்து
பெற்றதொருபுத்திரனர் பிள்ளைக்கே போயொளித்தார்
கீர்த்திக்காண்மங்கையர்கீ [illegible] றுமனந்தேற்றி
மாலைக்குழலாளை மடிமேலேகொண்டணைத்து
எத்தனைபோகமெனக்கிதுவுதானுரைத்தார்
அக்கச்சாயம் அதுதான்மறப்பேனோ
எனக்காகப்பட்டபாவம் எத்தனைகோடியுண்டு
படவேனும்பட்டேனும் பார்த்தனையம்பாலே
இன்னம்படவேனும் எழில்விசயனம்பாலே
தேசத்தையாளுந் திரியோதிரனற்று
செஞ்சோற்றுக்கடன்கழிக்க வேணுங்காணிந்திரரே.

என்றுமவருரைத்து வெழுந்தார்கருணாகரர்
போகவிடை தாருமென்று போர்கருணாகரன்கேட்க
கைதொழுதுயிக்கிறார் கட்டழகர்சேதுசொல்வார்
போய்வாருமென்றுசொல்லிப் பொன்னையுங்கொடுத்தனுப்பிவிட்டார்
விடைபெற்றுதானெழுந்தார் வேந்தாகருணாகரன்
கர்ணாரவர்போனபின்பு கட்டழகனிந்திரனும

புனந்திரன்போவது.

மற்றோர்படிகடந்தான் மன்னனைப்படை யப்பிடித்தான்
மற்றோர்படிகடந்து மன்னவன்போகலுற்றான்
காசிவளநாடாளுங் கருணைபெருமாளும
அம்பலஞ்சென்றேறி யானைத்தலைமார்பன்
தேசத்தையாளுந் திரியோதினன்கோயிலில்
வந்துயிவர்வீற்றிருந்தார் மன்னர்கருணாகரர்கே
தேசத்தையாளுந் திரியோதிராசருக்கு
காஞ்சிநாடாளுங் கர்ணாரவாசருக்கு

கர்ணர் திரியனுக்குச் சொல்வது.

மதுரைப்பதியாளும் வாழ்பாண்டியராட்டானும்
தம்பிபரிகொடுத்து வந்தானே சார்வேந்தனை
எதிரேபோய்காணுமென்றான் எத்திலக்குமுடியான்
தேசத்தையாளுக திரியோதிரன்கேட்டு
கச்சாயபூமலரும் கனப்பெற்றவேலாலேந்து
தட்டோடேவெற்றிலையுஞ் சாதிக்காயேலக்காய்
கொத்தோடேபழவகையும் கொற்றவன்றானெடுத்து
ஆளுந்தலையி லெடுப்பித்துத்தானெழுந்து
மண்டியிடுங்கால்களுக்கு மரவம்பூச்சல்லடமாம்
தூக்கிவைக்குங்காலகளுக்கு தூசி பூச்சல்லடமாம்
தட்டிவரிந்துகட்டி தாமரைப்பூசல்விட்டு
அத்தண்டவீரருடன் வாராமல் திரியோதிரன்
அம்பலத்துவாசல்விட்டு வாரானே ஆணழகன்
போரஞ்சாமன்னர் புனந்திரன்முகமேலவந்து
ஐயர்வரவுகண்டு ஆணழகனிருந்திருமும

புனந்திரன் யானையின்மேலிருந்து விளவுகிறது.

ஆனையின்மேல்தானே யிருந்தபடியாக
வாளெடுத்துமுன்னேவைத்து வணங்குவன்மன்னவனும்
தேசத்தையாளுந் திரியோதிரனைப்பார்த்து
சரியானைமேலிருந்து தாம்வேந்தனேதுசொல்வான்
கோபித்துக்கண்சிவந்து கொல்லும்புலியதுபோல்
பத்திபநாகம் படமெடுத்தாற்போல் கண்சிவந்து
குன்றுபோற்கண்சிவந்து கோபமதிகரித்து
தெத்திப்புருவம் நெருப்பாயினலன்டி
சூரியமண்டலத்தைக் கிட்டிவருவதுபோல்

அக்கினிமண்டலத்தை அடுத்துச்சுவாலயமாய்
போராஞ்சாமன்னர் புனந்திரனைத்தான்பார்த்து
தேசத்தையாளுந் திரியோதிரனேதுசொல்வான்

திரியோதிரன்சொல்வது

ஐவர்கள்பெற்றெடுத்த ஆணழகாவீரியரே
காளையர்கள்பெற்றெடுத்த கட்டழகனிந்திரரே
அழகியசிர்கொம்பனையா ளல்லித்திருமகனே
யானைவிட்டுக்கீழிரங்கி யடிபணிந்தாலாகாதோ
குதிரைவிட்டுக்கீழிரங்கி கும்பிட்டாலாகாதோ
வாளெடுத்துக்கீழிரங்கி வணங்கினாலாகாதோ
ஐவரிடவம்பிசைத்துக் காகாதோமன்னவனே
குருகுலத்தார்வங்கிசைத்துக் கொவ்வாதோமன்னவனே
என்றுமவருரைத்து ஏதுசொல்வார்திரியோதிரன்
கொண்டுவந்தகச்சாயன் கொற்றவர்க்குமுன்னேவைத்து
தான்கொண்டுவந்தசெல்லாந் தார்வேந்தர்முன்னேவைத்து
இந்திரர்முகமநோக்கி யேதுசொல்வான்திரியோதிரன்

மறுபடியுந்திரியோதிரன்சொல்வது

தம்பிவலுவெழுந்தீர் தம்பிமார்சீரிழந்தீர்
வீமர்வலுவெழுந்தீர் விசையனார்சீரிழந்தீர்
ஒப்பிட்டவாளை உறையுருவிவிட்டாற்போல்
துப்பிவிட்டீர்குருவிப்போ தமபிதனஞ்செயரே
ஆளப்பிறந்த அபிமர்முடியிழந்தீர்
அத்தானுந்திராத அரவான்முடியிழந்தீர்
தாமமுடியான் கடோற்கஜன்முடியிழந்தீர்
ஆறிவிடும் ஆறிவிடும் அப்பாலே ஆறிவிடும்
தேறிவிடுந்தேறிவிடும் தேவனேதேறிவிடும்
கச்சாயங்கொண்டுவந்தேன் காளைபொசியுமென்றான்
பலகாரங்கொண்டுவந்தேன் பாலகனேபொசியுமென்றான்
உண்டுபசியாறும் உத்தமனார்வீரியரே
தின்றுபசியாறும் காளையின்புத்திரனே
இந்தாருமென்று யெடுத்துமவன்கைநீட்டி

புலந்திரன்சொல்வது

போராஞ்சாமன்னர் புனந்திரருமேதுசொல்வார்
தம்பியைநான்கொடுத்து தற்சோர்ந்துநிற்கையிலே
உடற்பிறப்பைநான்தோற்று உயிர்சோர்ந்துநிற்கையிலே
ஒருவர்கள்தன்மனையில் உண்ணேனென்றான்பாலமிர்தம்
சூதகங்கள்தீராதே தின்னேன்காண்பாலமிர்தம்
மாலைதரிப்பதில்லை மன்னர்பெருமானே
தக்கோலந்தின்பதில்லை தனஞ்செயரோவென்றுரைத்தான்
தேசத்தையாளுந் திரியோதிரன்கேட்டு

மெது

மகுடமுடியசைக்கி மர்மமுறையாமல்
அம்பலத்துவாசலிலே ஆணழகன்வந்தாலே
மண்டையுடைத்திடுவேன் வல்லுயிரைவாங்கிடுவேன்
பொய்யாதினமிடுவோம் பொற்கைவளர்பாண்டியற்கு
அத்தாலுஞ்சாகாமல் தப்பிப்பிழைத்தாலே
தப்பிப்பிழைத்தாலே தார்வேந்தர்பூமுடியை
எந்தவிதமானாலும் யிறக்கவழிதேடுவோம்
என்றுமனதிலெண்ணி யேகிநடக்கலுற்றான்

திரியோதிரன் சிம்மாசனம்வந்துவிட்டது

தென்னமுடிவேந்தன் திரியோதிரன்திரும்பி
அம்பலத்துவாசலிலே ஆணழகன்வந்துநின்று
ஏரிநாகங்கொண்டவனும் ஏறினான்சிம்மாசனம்
அங்கிருக்குமன்னர் அறையர்துரைகளெல்லாம்
புத்திரனைக்காண நடந்தீரோபுண்ணியரே
மைந்தனைக்கண்டு புகழ்ந்துறவாடினதும்
அத்தனையுஞ்சொல்லுமென்றார் அங்கிருக்கும்வீரியர்கள்
தேசத்தையாளுந திரியோதிரன்கேட்டு
போனதுவும்வந்ததுவும் புத்திரனைக்கண்டதுவும்
அங்கேநடந்த விசேஷங்களத்தனையும்
சொல்லிக்குதித்தானே துரைகளுக்குமுன்பாக
அத்தனைபேரும் அனைவோருந்தான்கேட்டு
நல்லதென்றுவீற்றிருந்தார் நர்மமுடியார்கள்
தேசத்தையாளுந திரியோதிரப்பெருமான்
சாமத்துரோகி சகுனியைத்தானழைத்து

திரியோதிரன்சகுனிக்கெடுத்துரைப்பது.

அம்மான்முகம்நோக்கி ஆணழகனேதுசொல்வான்
வையைவளநாட்டான் வாரான்கொலுவுக்கு
வளநாடாள்புத்திரனும் வாரான்கொலுக்கான
கொம்பனையாள்புத்திரனை கொல்லவகைதேடும்
மாயன்மருமகனை மாளவழிதேடுமென்றான்
சாமத்துரோசி சகுனியவன்கேட்டு
மருமகன்முகம்நோக்கி மன்னவனேதுசொல்வான்
வளநாடிப்புத்திரனைக் கொல்லவேவேணுமென்றான்
அர்ச்சுனனார்புத்திரனை யழகுள்ளபுனந்திரனை
அவனையேகொல்லுதற்கு அனேகம்பேர்வேணுமோ
பொய்யாதினமிடுங்காண் பொற்கைவளநாடனுக்கு
ஆதினஞ்சென்றேறினால் அதிலேயழிந்திடுவான்
உள்ளிருக்குமன்னவர்கள் செல்லாயெரித்திடுவார்
செத்துமடிந்திடுவான் சிவலோகஞ்சேர்ந்திடுவான்
மாண்டுமடிந்திடுவான் வைகுந்தஞ்சேர்ந்திடுவான்
என்றுமவனுரைக்க யெழில்நாகந்தான்கேட்டு

அங்கிருக்குத் தூதுவரை யாணழகன்தானழைத்து
தூதுவர்கள் குழிவெட்டி குறுமார்க்கமாயிரங்கி
மருந்துகள்புதைப்பது

ஆழக்குழிதோண்டி யமையுமென்றுன்மன்னவரை
பாதாளலோகமட்டும் படுகுழிவெட்டினான்
ஆழக்குழிதோண்டி அச்சுதென்று தெண்டனிட்டார்
வன்னலட்சமன்னர்களை விட்டானந்தப்பிரபு
ஈட்டிதுப்பாக்கிகளும் ஈயருண்டிரக்காரமும்
வாங்குநல்லஆயுதமும் வளதடிசக்கரமும்
கத்திதுப்பாக்கிகளும் கஸ்திரியர்சேனைகளும்
அத்தனையுங்கொண்டு நிறைத்தார்படுகுழியை
படுகுழிமேலாதினங்கள் சொப்பனிட்டார்திரற்கு
வச்சிரமிழைத்து முகப்புக்குகல்லிழைத்து
முத்துமுடியாதினங்கள் சொப்பனிட்டார்திற்கு
ஆதினங்கள்சோடித்து அச்சுதென்றுதெண்டனிட்டார்
காகக்கொடிவேந்தன் கேட்டுமனமகிழ்ந்து
நிறைந்தகொலுமுகத்தில் யிருந்தான்றிரியோதிரன்
இப்படியாக யிவனிருக்கும்வேளையிலே
போராந்தசமன்னர் புனகதிராசாவும்

புனகதிரன்தைலாட்டான்மண்டபங்காணுகிறது

மற்றோர்படிகடந்தான் மன்னன்படியுயர்ந்தான்
மற்றோர்படிகடந்து வாரானேமன்னவனும்
நின்றுவில்வளைக்கு நிலக்கால்மண்டபமும்
பார்த்தால்விளைவுக்கு பவளநல்லகோபுரமும்
முத்தாலேகால்நிறுத்தி முழுதிலுஞ்சொப்பனிட்டு
பளிங்குமாமண்டபங்கள் பவளத்தால்சொப்பனிட்டு
எங்குமிலாவெரிக்கும் யெத்திசையுங்கீர்தெளிக்கும்
கண்கொள்ளாச்சேர்வையுடன் யிருக்குமாமண்டபந்தான்
போராந்தசமன்னன் புனகதிருந்தானபார்த்து
ஆருது ஆருது என்றானலேதாரன்
அங்கிருக்குமன்னர் அரையர்துரைகளெல்லாம்
தாதைக்குத்தாதை தைலாட்டான்மண்டபங்காண்
என்றுமவருரைக்க யிந்திரருந்தான்கேட்டு

புனதிரன் தைலாட்டானைத்தொழுகிறது

ஆனைவிட்டுக்கீழிறங்கி யானைதவாழ்க்கையுடன்
பூவும்புதுமலரும் பொன்னாருமட்சதையும்
பொன்னிருந்தசம்பிலே பண்ணரிகொண்டுவந்து
தாமமுடியான் தைலாட்டன்முன்னேவந்து
பன்னீராலேகாலலம்பி பட்டாலேதுவட்டி
கொண்டுவந்தபூமலரை குயுகுமென்றுதான்சொரிந்து
முக்காலேவலம்வந்து முடிவணங்கித்தெண்டனிட்டு

நாற்கால்வலம்வந்து நமஸ்கரித்துதெண்டனிட்டான்
தெண்டனிட்டமன்னவனை கண்டுமேதைலாட்டான்
நீ-ஆர்சாணும்மன்னவனே அறியவுரையுமென்றான்
கண்ணில்லாயெந்தனுக்கு காணவுரையுமென்றான்
விழியில்லாயெந்தனுக்கு விளங்கவுரையுமென்றான்

பொன்னுமலைநாடான்சொல்வது

பொன்னுமலைநாடாளும் அண்ணுவுமேதுசொல்வார்
மதுரையறுகாதம் வாழ்மதுரைமுக்காதம்
பொய்கையறுகாதம் பூமதுரைமுக்காதம்
அன்பத்தாறுகாதம் ஆண்டிருந்தார்பாண்டியர்கள்
மைந்தருமில்லாதே மலைமேற்றவமிருந்தார்
மாளுகிறோமென்று மலைமேற்றவமிருந்தார்
மாளாதேயென்று மலரிலவதரித்தாள்
ஏழுபிராயத்தில் யெதிர்த்துவந்தநீன்முகனை
நீன்முகனைக்கொன்று நீலிபட்டமாண்டவர்காண்
மன்னர்விசையன் மடஊர்நதமாதேவி
காளைவிசையன் கட்டழகன்மாதேவி
மதுரைப்பதியாளும் வையைவளநாட்டாள்
வையைவளநாட்டாள் வளநாடியல்லியரும்
அல்லியயின்றெடுத்த அழகுபுனந்திரனார்
காண்டாவனமெரித்த காளையுடபுத்திரனார்
என்றுமவனுரைக்க விழியில்லாதான்கேட்டு

தைலாட்டானுரைப்பது

ஐயாபுனந்திரரோ அழகுள்ளகண்மணியே
ஐவர்க்கும்நூற்றுவர்க்கும் அழகுள்ளகண்மணியே
எங்கள்குடைவிளங்க வந்துதித்தரத்தினமே
ஐயாவருக அழகுள்ளகண்மணியே
என்றுமவருரைக்க யிந்திரருந்தான்பார்த்து
பாட்டன்திருவடியை பணிந்தானேபாண்டியனும்
காண்கிறேனென்றுசொல்லி கால்மேல்முடிசாய்ந்தான்
கண்ணில்லான்தான்பார்த்து கடுகெனவேவாழ்த்தலுற்றான்
வாழ்வீர்வளர்ந்திடுவீர் வர்த்திநப்பிருந்திருப்பீர்
நிற்பீர்நிலைதரிப்பீர் நீரரசையாண்டிடுவீர்
கற்பதித்ததூண்போலக் கலங்காதரசாள்வீர்
விற்பதித்ததூண்போல விளங்கஅரசாள்வீர்
என்னைப்பெருவீர் யெதிர்த்தார்முடிபெருவீர்
பிள்ளைபெறுவீர் பெருமாள்பதம்பெறுவீர்
போருக்குப்போய்விடுவீர் பொழுதோடேவென்றிடுவீர்
வென்றகளரியிலே வீரபட்டஞ்சூட்டிடுவார்
சினத்தார்கள்பூமிதனைச் செண்டாட்டமாட்டிடுவீர்
பகைத்தார்கள்பூமிதனை பருந்தாட்டமாட்டிடுவீர்
மாத்தார்ப்படைநடுவில் மன்னர்களைவென்றிடுவீர்

அத்திபுரமான ஆண்பிள்ளைபெற்றிடுவீர்
ஆல்போல்தழைத்து அறுகுபோல்வேரோடி
மூங்கில்போல்சுற்றமும் முசியாமல்வாழ்ந்திடுவீர்
வாழ்வீர்காணென்று மனமாரவாழ்த்தினார்
வாழ்ந்திடுவீரென்று மனங்குளிரவாழ்த்தினார்
வாயாரவாழ்த்தியபின் விழியில்லான்தான்பார்த்து
எங்கிருந்தாயிந்திரரோ யென்றுமவன்வாரானே
அங்குமொருதூணை யடைவாகக்காண்பித்து
மற்றுமொருதூணில் மறைந்தாரோயிந்திரரும்

குருடன் தூணைக்கட்டிநெறித்தது

கண்ணில்லான்தானெழுந்து காவலனுந்தான்பார்த்து
புனர்திரனைக்கட்டி யணைப்பதுபோல்புண்ணியனும்
தூணைக்கட்டிதான்பிடித்தார் துன்னிலங்கண்ணனும்
அப்பாமகனேயென்று யணைக்கானேகற்றூணை
அணைத்துப்பிடித்து அழித்துநெரித்தானே
இவன்கட்டநெரித்ததினால் கற்றூணுநெரிந்தது
சேர்த்துப்பிடித்ததினா லற்றதுகற்றூணு
கற்றூணுமிற்று கலங்கிறதுமண்டபங்கள்
நாடுகலங்கி நகருகள்தத்தளித்து
பூமிகலங்கிப் புழுதிபறக்கிறது
அண்டாண்டந்தானதிர ஆகாயமிற்றுவிழ
கண்டவர்கண்டபேரெல்லாம் கைகால்நடுங்கலுற்றார்
போராஞ்சாமன்னர் புனர்திரனுந்தான்பார்த்து
தாதைக்குந்தாதை தைலாட்டானேதுசொல்வான்
பாட்டன்முகம்நோக்கி பாண்டியனுமேதுசொல்வான்
என்னையாநீர்கேளும் என்னுடையநல்வார்த்தை
ஆணழகர்பஞ்சவரை ஐவரையுந்தானழைத்து
வெற்றிமதயானை வீமருக்குஎன்னையிட்டு
முழுகுங்குளந்தனில் முழுதுமேவாசிநட்டு
குளிக்குந்துறைதனிலே கொண்டமட்டுநட்டனரோ
அத்தானுந்தப்பிப் பிழைத்தார்களாணழகர்
மாயனிடபுண்ணியத்தால் மன்னர்பிழைத்தார்கள்
அன்னமிடவழைத்து அன்னத்தில்நஞ்சையிட்டார்
மதகிரியான்வீமராசன் வாரியல்லாவுண்டானே
உண்டுமடிந்தானே உத்தமனார்வீரியனும்
மாயனொருசன்யாசி வேஷமெடுத்துமல்லோ
மருந்துபைதோளில்வைத்து மன்னவரையெழுப்பிவிட
அத்தானுந்தப்பி பிழைத்தார்களாணழகர்
மாயனிடபுண்ணியத்தால் மன்னர்பிழைத்தாகள்
ஆயரிடபுண்ணியத்தால் ஐவர்பிழைத்தார்கள்
ஐவரையுந்தானழைத்து அம்பலங்கேளற்றிவைத்து
மாயத்தால்சூதாடி மண்ணிழக்கமண்பறித்து

மாதைத்துகிலுரிந்து மன்னவரைக்காடோட்டி
கோதைதுகிலுரிந்து கொற்றவரைகாட்டோட்டி
பருக்கஉருத்த பணிவந்தலைமோத
ஒடிம்பருக்கை உள்ளங்கால்தாலுறுத்த
கவிழ்ந்தமரத்தடியில் கண்பள்ளிகொண்டிருந்தார்
ஐவருயிர்பிழைக்க புண்ணியரோமன்னவரே
பஞ்சவர்கள்யாள நினைந்தீர்கள்பாவிகளே
அப்படிக்குயென்னை செறிக்கநினைந்தீரோ
நீர்கண்ணில்லாரானதினால் கலியுகத்தில்வாசம்பண்ணீர்
விழியில்லாராகையினால் யிருந்தீரோவின்னுலகில்

மறுபடியும்புனந்திரன்சொல்வது

உந்தனதுபுத்திரர்கள் நூற்றொருவரல்லாது
நூற்றொருவரல்லாது வேற்றொருவராகாதோ
மன்னவர்களல்லால் மற்றொருவராகாதோ
எல்லவரையுங்கொன்று ஆளனுமோராச்சியத்தை
என்றுமவனுரைத்து யெழுந்திருந்தானிந்திரனும்
படிபடியென்றான் படிந்தது அவ்வானை
முகக்கம்பம்தட்டி முதுகின்மேல்கையைவைத்து
கைத்தலத்தைத்தட்டி கழுத்தானையேறினான்
அம்மானுந்தானும் அழகானையேறினார்
மாமாவுந்தானும் மதயானையேறினார்
வந்தவந்தபேர்களெல்லாம் வாகனஞ்சென்றேறினார்
மற்றோர்படிகடந்து வாரானேமன்னவனும்

புனந்திரன் திரியோதனன சிம்மாதனம்வருவது

தேசத்தையாளுந் திரியோதிரன்கொலுவில்
அம்பலத்துசேர்வைகளும் அழகுள்ளமன்னர்களும்
அம்பலத்துவாசலிலே யனைவோரும்வீற்றிருந்தார்
தேசத்தையாளுந் திரியோதிரனும்
செண்டாடும்மன்னன் திரியோதிரனழகும
நாலால்கடுந்திரளார் நூற்றொருவராசர்களும்
பாட்டனார்வீஷ்டுமரும் பாரதியதுரோணரும்
சிற்றப்பாவிதுரனுஞ் சீருள்ளகாங்கையனும்
காஞ்சிநாடாளுங் கர்ணசிகாமணியும்
தங்கைமணவாளன் தனுதலையான்வீரியனும்
அம்மான்சகுனி யவன்தோழனானவனும்
ஈட்டிப்பிடிமன்னர் யிருபுறமுஞ்சூழ்ந்துநிற்க
கத்திபிடிமன்னவர்கள் கவ்விரியர்சூழ்ந்துநிற்க
முத்துமுடிதரித்த முடிமன்னரங்கிருக்க
இரத்தினமுடிதரித்த ராசாக்களங்கிருந்தார்
மகுடமுடிதரித்த மந்திரிகளங்கிருந்தார்
இவரைச்சுற்றிசூழ்ந்திருப்பார் எக்ரகோடிசேனைகளும்

வெளிபுறத்தில்வீற்றிருப்பார் அனேகங்கோடிமன்னவர்கள்
அந்தசமயத்தில் அழகுபுனந்திரனார்
வந்துவெள்ளம்சேனையுடன் வந்துமெள்ளவுள் நுழைந்தான்

புனந்திரன் துரியோதிரன்சபைதனில் வந்தது.

ஆனைவிட்டுக்கீழிறங்கி ஆனந்தவாழ்மார்பன்
வாளுருவிகைபிடித்து வல்லயத்தைதோளிலிட்டு
கத்தியுருவி நடந்தானேகட்டழகன்
போராஞ்சாமன்னர் புனந்திரருமுள் நுழைந்தார்
நிறைந்தகொலுநடுவே நித்திலங்குபூமுடியான்
வந்துமங்கேநின்றாரோ மைந்தர்புனந்திரரும்
அங்கிருக்குமன்னவர்கள் அரையர்துரையெல்லாம்
எழுந்துவந்துகைகொடுத்தா ரிந்திராணவறகு
போராஞ்சாமன்னர் புனந்திரராசாவும்
பூவும்புதுமலரும் பொன்னறுஅட்சதையும்
கோறுதமாதவத்துக் குருக்களுக்குமுன்னேவந்து
பன்னீரால்காலலம்பி பட்டாலடிதுவட்டி
கொண்டுவந்தபூமலரை குருபுகுவென்றுதான்சொரிந்து
மூக்கால்வலம்வந்து மூவிருகால்தெண்டனிட்டு
நாற்காலவலம்வந்து நமஸ்கரித்துதெண்டனிட்டு
தெண்டனிட்டமன்னன திரும்பியெழுந்திருந்து
மோதிரமின்ன முடிமேலேகைதொழுது
கோறுதமாதவத்துக் குருக்களவர்பார்த்து
வந்துபணிந்தவனைக் கண்டுமனமகிழ்ந்து
வாரியெடுத்துமவர் மார்போடேதானணைத்து
வாழ்வீர்வளர்ந்திடுவீர் வர்த்திருப்பிருத்திருப்பீர்
சிறப்பீர்நிலைத்திருப்பீர் சிரசையாண்டிடுவீர்
கற்பதித்ததூண்போலக் கலங்காதராசாள்வீர்
விற்பதித்ததூண்போல விளங்கஅரசாள்வீர்
போருக்குப்போவீர் பொழுதோடேவென்றிடுவீர்
வென்றகளரியிலே வீரபட்டங்கட்டிடுவீர்
மாதர்களைமாலையிட்டு மைந்தரைப்பெற்றிடுவீர்
கன்னிகளைமாலையிட்டு காளைகளைப்பெற்றிடுவீர்
பெண்களைமாலையிட்டு பிள்ளைகளைப்பெற்றிடுவீர்
பெற்றிடுவீர்பெற்றிடுவீர் பிள்ளைபதினாறும்
பதினாறும்பெற்று பெருவாழ்வுவாழ்ந்திடுவீர்
ஆல்போல்தழைத்து அறுகுபோல்வேரோடி
மூங்கில்போல்சுற்றம் முசியாமல்வாழ்ந்திடுவீர்
வாழ்வீர்காணென்று மனங்குளிரவாழ்த்தினார்
அட்சதையும்பூவுமல்லோ அள்ளியவர்கைகொடுத்தார்
போராஞ்சாமன்னர் புனந்திரராசாவும்
ஒருகையால்வாங்காமே இருகையால்தான்வாங்கி

இருக்கையால்தான்வாங்கி யிந்திரருந்தான்தரித்தார்
பாட்டனூர்வீஷ்டுமரை பாதம்பணியலுற்றார்
அட்சதையும்பூவுமல்லோ அடிவணங்கிதெண்டனிட்டார்
வந்துபணிந்தவரைக் கண்டுமனமகிழ்ந்து
வாயாரவாழ்த்தி மாரோடுறவணைத்து
மைந்தரைக்கொஞ்சி மடிமேலேகொண்டணைத்து
உச்சிமுகந்துபிள்ளை உள்ளங்கால்முத்தமிட்டு
பக்கம்தடவிப் பவளவாய்முத்தமிட்டு
கைத்தலத்தைதனெடுத்து கண்ணிலேயொத்திகொண்டு
அர்ச்சுனனூர்புத்திரனே யாளுமழகுமன்னன்
வந்தகருமம் வகையேதுசொல்லுமென்றார்
புனந்திரன்சொல்வது
அப்போபுனந்திரரும் ஆணழகரேதுசொல்வார்
ஐவரரையரும் அழிவசந்தாரும்
பேர்பெற்றுடைய பெருமாளும்பாண்டவர்கள்
வேந்தர்பெருமாளும் வெள்ளிமண்டபத்தில்வந்திருந்து
பேரப்பாரப்பா பெரியப்பாதங்களுக்கு
தூதுரைக்கவந்தேனென்று சொல்லியவனுரைத்தான்
பாட்டனூர்வீஷ்மரும் கேட்டுமனமகிழ்ந்து
வந்தகருமம் முடியுங்காண்மன்னவனே
அந்தவுரைகேட்டு ஆணழகன்போய்நடந்தான்
சிற்றப்பாவிதுரருக்குச் சீரடியைத்தெண்டனிட்டான்
மலர்போட்டுதெண்டனிட்டான் மன்னவனூர்சீர்பாதம்
விதுரர்வாழ்த்துவது
வநதுபணிநதவனைக் கண்டுமனமகிழ்ந்து
வாரியெடுத்து மடிமேலேகொண்டணைத்து
வந்தகருமம் வகையாய்முடியுமென்றான்
அப்படியேநல்லதென்று ஆணழகன்போய்நடந்து
காங்கையன்சீர்பாதம் கட்டழகன்தெண்டனிட்டான்
வநதுபணிந்தவனைக் கண்டுமனமகிழ்நது
வாரியெடுத்து மடிமேலேகொண்டணைத்து
ஆயிரம்பாண்டியர்களையன்மார்தன்சுகமும்
வளநாடியல்லியரும் மாதுசுகமோதான்
போராஞ்சாமன்னர் புனநதிரனேதுசொல்வார்
ஆண்டவனார்புண்ணியத்தால் அனைவோருநதான்சுகமே
என்றுமவருரைத்து யிருக்கின்றவேளையிலே
திரியோதிரன் கர்ணனைபார்த்துரைப்பது
தேசத்தையாளுந திரியோதிரன்பார்த்து
கர்ணர்முகம்நோக்கி கட்டழகனேதுசொல்வான்
போராஞ்சாமன்னர் புனநதிரனார்சீர்முகமும்
காஞ்சிநாடாளுங் கர்ணனேயுன்முகமும்
இருமுகமும்ஒருமுகமா யிருக்குதேவுநதனுக்கு

மதுரைக்கொருபயணம் மன்னவரே போனீரே
காதரசிஅல்லியவள் முழுகிக்குளிக்கையிலே
முழுகிக்குளிக்கையிலே முகத்தில்முழித்திரோ
முகத்தில்முழித்தாலோ வயிற்றிலடைந்தானோ
உந்தன்முகம்பார்த்து பெற்றாளோபுத்திரனை
போராஞ்சமன்னர் புனந்திரனைப்பெற்றாளோ
ளன்றுமவனுரைத்து யிருந்தான்சபைநடுவே

கர்ணர் திரியோதிரனைப்பார்த்து கோபித்தல்.

காஞ்சோடாளுங் கர்ணரவர்கேட்டு
கோபித்துக்கண்சிவந்து கொல்லும்புலியதுபோல்
குன்றுபோல்கண்சிவந்து கோபமதிகரித்து
நெற்றிப்புருவம் நெருப்பாயனல்பறந்து
சூரியமண்டலத்தைக் கிட்டச்சுவாலயமாய்
அக்கினிமண்டலத்தை அடுத்துச்சுவாலயமாய்
தோழன்முகம்பார்த்து சொல்வாரொருவார்த்தை
ஆடம்பலத்தே அவ்வையார்சபைநடுவே
இப்பெரியராச ரிருக்கும்சபைநடுவே
இராசாக்கள்முன்பாக நாடாதவார்த்தைசொன்னீர்
மன்னவர்கள்முன்பாக மதியாதவார்த்தைசொன்னீர்
அறியாதநாளையிலே அடியேனைக்கொண்டுவந்து
தெறியாதநாளையிலே தேடியெனையெடுத்து
பாலமிர்தந்தானூட்டி வளர்த்தீரழகாக
நெய்யமிர்தமூட்டி வளர்த்தீரழகாக
மூன்றுபிராயத்திலே முத்துமுடிதரித்தீர்
நாலுவயதுதனில் தாகக்கனைகொடுத்தீர்
ஐந்துவயதுதனில் அப்பியாசவித்தைபண்ணீர்
ஆறுவயதினிலே ஆனைமேலேற்றிவைத்தீர்
எட்டாம்வயதுதனில் எனைக்குள்ளவித்தையெல்லாம்
ஒன்பதுங்கறுக் கொடுத்தீரோ உத்தமரே
பத்தாம்வயதுதனில் பாருலகமாளவைத்தீர்
அன்றுமுதலின்றொருநாள் அடாதபழிவந்ததில்லை
என்னைக்கடுமுகமாய் உரைத்ததில்லைஉத்தமரே
இன்றுபழிபாவம் என்னமோநானறியேன்
என்றுமனஞ்சலித்து யிருந்தாரொருபுறமாய்
மன்னர்மனஞ்சலித்து மர்மமாய்வீற்றிருந்தார்

புனந்திரன் திரியோதிரன்முன்பாகவந்தது.

போராஞ்சாமன்னர் புனந்திராசாவும்
மன்னாசபைதாண்டி திரும்பிறிந்தமுகம்
தேசத்தையாளுந் திரியோதிரன்முன்னேவந்து
ஆதினத்தைக்காட்டி அதின்பேரில்வீற்றிரென்றான்
காஞ்சிநாடாளுங் கர்ணாபெருமானும்
கன்சாடைகாட்டினார் காவலம்பூவீரியரும்

அப்பெரியசாடை யறிந்தந்தயிந்திரனுர்
சிம்மாதனத்தருகே திரும்பினுரிந்திரரும்
உத்துத்துப்பார்த்தாரே ஒளிபறந்தகண்ணுலே
அப்பெரியஆதினத்தை ஆணழகனேதுசெய்தான்

புலந்திரன் தமக்கிட்டசிம்மாதனத்தை எத்திஎறிகிறது.

வாளாலேஎத்தி எறிந்தானேவல்லாயன்
கத்தியாலெத்தி எறிந்தானேவல்லாயன்
எத்தியெறிந்தவுடன் கத்திவெளியாச்சு
கத்திவெளியாச்சு கல்கிரியாவந்துவிட்டார்
ஈட்டிவவளியாகி யிரமன்னாவந்துவிட்டார்
செட்டிகளுமல்லாகளுஞ் சேரவெளியாளுா
அத்தண்டபேரையெல்லாம் ஆணழகன்தான்பாத்து
எந்தனுயிரவாங்க யிருந்தார்குழிதனிலே
வல்லுயிரவாங்கவென்று வந்தீரோமன்னாகளே
உங்களதுயெண்ணை முடியாது உத்தமரே
மன்னவனுரெண்ண மாளாதுமன்னவரே
சுக்றியெறிந்திடுவேன் சற்றுமணங்கோணுமல்
எமன்பதிதனிலே யிப்போதனுப்பிடுவேன்
நமனுரிடபதிக்கு நானே அனுப்பிடுவேன்
செததுமடிந்திடுவீர் சிவலோகஞ்சேர்ந்திடுவீர
மாண்டுமடிந்திடுவீர் வைகுண்டஞ்சேர்ந்திடுவீர்
என்றுமவருரைத்து யிந்திரராசாவும்

புலந்திரன் சொக்கரைநினைத்துச் சிம்மாதனங்கேட்பது,

சோலைமலருடைய சொக்கரைத்தானினைந்து
ஆனைமலையுடைய அம்மனைத்தானினைந்து
ஏழுலகமாளுகிற பெருமானைத்தானினைந்து
சோலைமலையுடைய சொக்கரேயென்குருவே
அன்றொருநாள்வேளையிலே ஆதிகைலைவிட்டு
அல்லிமலர்நாயகியை காத்தீரேகாத்தாவே
ஆச்சியைக்காத்ததுபோல் அடியேனைக்காருமையா
மாதாவைக்காத்ததுபோல் மைந்தனைக்காருமையா
மாற்றான்தன்வாசலிலே மண்டபஞ்சென்றேன்காண்
எதிராளிவாசலிலே ஆதினஞ்சென்றேன்காண்
வண்ணத்துகிலாசனங்கள் வரவனுப்பவேண்டுமையா
என்றுமிகத்தொழுதா னிந்திரராசாவும்
புனந்திரனுர்தோத்தரிக்க புண்ணியருந்தானறிந்து

சொக்கர் அம்மனுக்குரைப்பது.

சொக்காமனமகிழ்ந்து தோகையற்கேதுசொல்வார்
அம்மன்முகம்நோக்கி ஆதிசிவனேதுசொல்வாா
போரஞ்சாமன்னர் புனந்திரவீரியரும்
தூதுரைக்கப்போனுனே சுந்தரப்பூமுடியன்

எதிராளிவாசலிலே சென்றனேபூமுடியான்
ஆதினங்களில்லாமல் ஆனைமுகாகின்றுவிட்டார்
அங்கையற்சுந்தரியை ஆதினமலைப்புமென்றா
அங்கயற்கண்மீனாட்சி அம்மன்மனமகிழ்ந்து
வன்னலட்சம்பூதங்களை வரவழைத்தாளட்சணமே
மாணிக்கச்சிம்மாதனம் மன்னவற்குச்சாப்பணிட்டு
தங்கத்தால்சிம்மாசனந் தானேயலங்கரித்து
பூதங்கள்கைக்கொடுத்து போமென்றாளத்திபுரம்

பூதங்கள் சிம்மாசனமெடுத்துக்கொண்டுவருவது.

அத்தன்டபூதங்களும் அம்மனுரைகேட்டு
சுவாமிதிருமுடிக்கு சாஷ்டாங்கதெண்டனிட்டு
அம்மன்திருவடிக்கு அடிவணங்கிதெண்டனிட்டு
சிம்மாசனமெடுத்து திரும்புதுபூதமெல்லாம்
ஆகாயமார்க்கத்திலே அத்தண்டபூதமெல்லாம்
மேலேயெழும்பி விசயரிடத்திற்கு
காற்றேறிமேகங் கலந்துவருமயாவனைபோல்
ஆற்றிலேவெள்ளம் அடித்துவருவதுபோல்
காற்றாய்ப்பறந்து கடுகவழிநடந்து
போரஞ்சாமன்னா புனந்திரனாமுன்னேவந்து
இட்டஆதினங்கள் எழுலகந்தத்தளிக்க
போட்டதுஆதினங்கள் பூமிகிடுகிடென்ன
அண்டாண்டந்தானதிர ஆசனங்கள்போட்டுதங்கே

புனந்திரன் மனக்களிப்புடன் சிம்மாசனமேறியது.

போரஞ்சாமன்னா புனந்திரனாதான்பார்த்து
சிம்மாசனந்தனைக் கண்டுமனமகிழ்ந்து
சோலைமலருடைய சொக்கரைக்கைதொழுது
ஆனைமலையுடைய அம்மனைதெண்டனிட்டு
ஏழுலகமாளுகிற யெம்பெருமாளடிவணங்கி
அம்மனுக்குச்சென்று ஆசனந்தன்னிலேறி மன்
இட்டசிம்மாசனந்தனிலே யிருமன்னவன்வீற்றிருந்தான்
அங்கிருக்குமன்னர் அவையர்துரைகளெல்லாம்
திரியன்முகமநோக்கி சொல்லுவாரொருவார்த்தை
மைந்தா புனந்திரனார் வந்தாரோ அத்திபுரம்
பிள்ளைபுரந்திரனா வந்தாரோ அத்திபுரம்
வந்ததையறிந்து வார்த்தைதனைநிருவைத்து
சிந்தையிலுள்ளதெல்லாந் திடமாகத்தானுரைத்து
உரைக்கிவரைகொடுத்து உத்தமரேபோகவிடும்
என்றுமவருரைக்க யேதுசொல்வான்திரியோதிரன்

திரியோதிரன் புனந்திரனுக்குக்கூறுவது.

காண்டாவனமெரித்த காளையிடபுத்திரனே
பாசுபதம்பெறுமெற்றி பார்த்தரிடசிர்மகனே

ஆளப்பிறந்த அபிமன்னராசாவும்
பகையாளிபேரில் படையெடுத்துவந்தானே
முன்னையுப்பூசை முதல்பூசைதன்னுதென்றான்
முத்துமுடிபாண்டியனும் பட்டுவிழுந்தானே
ஆளப்பிறந்த அபிமன்னன்தேவியவள்
விலாடபுரத்தான் புத்திரியாளுத்தரையும்
உன்-தம்பியுடதேவி தார்குழலாள்மாதருக்கு
தாலிகழட்டினையோ சன்னல்பின்னல்வாங்கினையோ
ஆரங்கழட்டினையோ ஆபரணம்வாங்கினையோ
கொப்புகழட்டினையோ கோர்வைமணிவாங்கினையோ
வளையல்கழட்டினையோ வாங்கினையோபூஷணங்கள்
ஏதுகருமம் யெனக்கறியச்சொல்லுமென்றான்
ஒன்றுமொளியாதே உரையுமென்றனந்தனுக்கு
போரஞ்சாமன்னர் புணந்திரருந்தான்கேட்டு
கதிக்குக்கதிமண்டி கண்கள்பொறிபறந்து
நீலவிழிகண்கள் நெருப்புதணலாகி
பத்தியநாகம் பவளம்போல்கண்சிவந்து
முத்தியநாகம் விழியதுபோல்கண்சிவந்து
கோபித்துக்கண்சிவந்து கோபமதிகரித்து
குன்றுபோல்கண்சிவந்து கோபமதிகரித்து
நெற்றிப்புருவம் நெருப்பாயனல்பறந்து
சூரியமண்டலத்தைக் கிட்டிச்சுவாலயமாய்
அக்கினிமண்டலத்தை அடுத்துச்சுவாலயமாய்
வேர்த்துவிரிவிரித்து மீசைசுருண்டேறி
சித்துடம்புவேர்த்து சிறுகண்சிவப்பேறி
தேசத்தையாளுந் திரியோதிராசருக்கு

புணந்திரன் திரியோதிரனுக்குத் தூதுரைப்பது.

போரஞ்சாமன்னர் புணந்திரருமேதுசொல்வார்
பதினலுநாளையிலே படைமன்னாசண்டையிலே
பாரதமென்று படைபொருதும்வேளையிலே
ஆளப்பிறந்த அபிமன்னராசாவும்
முன்னேயும்பூசை முதல்பூசைதன்னுதென்று
முத்துமுடிபாண்டியனும் பட்டுவிழுந்தானே
ஆளப்பிறந்த அபிமன்னன்தேவியற்கு
தாலிகழட்டினோம் சன்னல்பின்னல்வாங்கினோம்
ஆரங்கழட்டினோம் தாவடங்கள்வாங்கினோம்
கொப்புகழட்டினோம் கோர்வைமணிவாங்கினோம்
வளையல்கழட்டினோம் வார்கொப்புவாங்கினோம்
மாலைகழட்டினோம் மண்டபமேற்றிவைத்தோம்
அவளைச்சுற்றிப்பெண்டுகள் அணியிழைமார்காத்திருந்தார்
வைத்துச்சிறைகாக்க மண்டலத்தில்கோடியுண்டு
(எங்கள்)தேவின்முடியாளுஞ் சிறைகாத்திருப்பாள்காண்

(நாளை)பதினெந்தாம் நாளையிலேபடைபொருதுஞ்சண்டையிலே
பாரதமென்று படைபொருதும்வேளையிலே
ஆடியளக்கும் அமிர்தசமர்க்களத்தில்
இரத்தாறுஓடுகிற வேளையிலேவுத்தமனும்
இரத்தக்களரியிலே ராசாக்கள்கூட்டத்திலே
பாசுபதம்பேறுபெற்று பார்த்தன்கையம்பாலே
வில்லாளிபார்த்தர் விசையாகையம்பாலே
உன்-தங்கைமணவாளன் தறிதலையன்பூமுடியை
யுத்தகளத்திலே வெட்டியறுப்பார்கள்
உன்-தங்கைமணவாளன் தறுதலையன்பட்டாலே
நூலாற்கடுந்திரளார் நூற்றொருவர்தங்களுக்கு
தோகைமயிலனையாள் துற்சடையாள்நாயகிக்கு
தாலிகழட்டாதே சன்னல்பின்னல்வாங்காதே
பாரப்பதக்கமும் பருத்தமுத்துத்தாவடமும்
தாலிப்பதக்கமுஞ் சன்னல்பின்னல்தாவடமும்
கோவைப்பதக்கமுங் குடைமுத்துத்தாவடமும்
சொப்புக்கழட்டாதே கோர்வைமணிவாங்காதே
வளையல்கழட்டாதே வாங்காதேபூஷணங்கள்
மாலைமுடியாளை மஞ்சள்குளிக்கவைத்து
வாரியசுருங்குழலது வண்ணவிதிக்கொண்டையிட்டு
நீவிமயிர்முடித்துச் சிமிள்போலக்கொண்டையிட்டு
கமலத்திருமுகத்தில் கஸ்தூரிபொட்டுமிட்டு
அவள்-நீலவிழிகண்களுக்கு நிறைக்கவேமைதீட்டி
கருங்குருவிவால்துபோல் கண்ணுக்குமையெழுதி
மங்கைநல்லாள்பூமுடிக்கு மல்லிகைமாலைசூட்டி
கொப்புமிகத்திருத்தி கோவைமிகத்திருத்தி
வளையல்திருசதியல்லோ மற்றும்பணிதிருத்தி
பச்சைவடந்திருத்தி பாளாடையுள்திருத்தி
குப்புவடம்பச்சைவடம் உத்தமிக்குமிகசாத்தி
அத்தாகதமப்பொடி அள்ளியேமேல்பூசி
சாதிக்காயேலந் தனிமணமுங்கொண்டுவந்து
வாடாயிலைச்சுருளும் வண்ணத்துவாபாக்கும்
கோவையிலைச்சுருளும் கொத்துந்துவாபாக்கும்
ஏலம்லவுங்கம் யின்பக்களிப்பாக்கு
சாதிப்பெருக்கடலில் சங்குகட்டசுண்ணாம்பும்
சுருளைக்சுருள்மடித்து சுண்ணாம்பைச்சூட்சமிட்டு
சுத்திவிட்டபொன்மடலும் குள்ளேசுருளமாத்தி
மாதரிளங்கொடிக்கு மங்கையற்குநீகொடுத்து
மற்றுமுள்ளமன்னவரைச் சுற்றிலுங்காவல்வைத்து
நீங்கள்-நூலாற்கடுந்திரளாா நூற்றொருவராசாக்களும்
தூங்கவையுந்தெருத்திண்ணையில் வாங்குமென்றான்வட்டகாசு
வட்டக்காசுவாங்கியல்லோ வட்டிக்குமாறுமென்றான்

செத்துமடிந்தாலும் சிவலோகஞ்சேர்ந்தாலும்
வாண்டுமடிந்தாலும் வைகுந்தஞ்சேர்ந்தாலும்
எள்ளளவுசீவ னிருக்கிறகாலமட்டும்
கடுகளவுசீவ னிருக்கிறகாலமட்டும்
பகையாளிபஞ்சவற்கு பாதிநாடில்லையென்றான்
பங்கிட்டநாடும் பகுந்தரசுமில்லையென்றான்
பஞ்சவாகள்சீமை பகுந்தரசுமில்லையென்றான்

புனந்திரன் மறுபடியுங் கோபித்துரைப்பது

போரஞ்சாமன்னா புனந்திரருந்தான்கேட்டு
சிற்றுடம்புவேர்த்து சிறுகண்சிவப்பேறி
வேர்த்துவிரிவிரித்து மீசைசுருண்டேறி
போரஞ்சாமன்னர் புனந்திரனுமேதுசொல்வார
தர்மருக்கிப்போ சனியன்பிரிந்தது
எங்கள்-வீமருக்கிப்போ விதியொழிந்தது
ஐவருக்குமிப்போ அடுத்ததுநற்காலம்
மாதுமயிர்முடிக்க நாளாச்சுமன்னவரே
கோதிகுழல்முடிக்க நாளாச்சுகொற்றவரே
பத்தினியாள்சாபம் பலித்ததிவர்களுக்கு
உத்தமியாள்சாபம் உடனேபலித்தது
பார்த்தன்கையம்பாலே படுவதுநிட்சயந்தான்
எழில்விசையனம்பாலே படுவாகள்படுவாகள்
வேசிமகனுக்கு விடுபடக்காலமில்லை
தாசிமகனுக்கு தானிருக்ககாலமில்லை
உடன்பெற்றபிள்ளையெல்லாம் கொத்தோடேமாண்டிடுவார்
அந்தகனார்பெற்றபிள்ளை அடங்கலுமாண்டிடுவார
இப்படிக்குச்சொல்லி யெடுத்துரைத்தானிந்திரனும்
விட்டானொருபாணம் மண்ணதிரவிண்குலுங்க
மாற்றான்திடுக்கிடவே மறுமன்னர்கொக்கரிக்க
நாகக்கொடிவேந்தன் கேட்டானவ்வார்த்தைகளை
இந்திரனார்சொன்னதெல்லாம் எதிர்நாகன்தான்கேட்டு

திரியோதிரன் புனந்திரற் குரைப்பது.

கோபித்துக்கண்சிவந்து கொல்லும்புலியதுபோல்
பத்தியநாகம் பவளம்போல்கண்சிவந்து
குன்றுபோல்கண்சிவந்து கோபமதிகரித்து
நெற்றிப்புருவம் நெருப்பாயனலண்டி
சூரியமண்டலத்தை எட்டிச்சுவாலயமாய்
அக்கினிமண்டலத்தை யடுத்துச்சுவாலயமாய்
போரஞ்சாமன்னா புனந்திரற்கேதுசொல்வான்
வேசியென்றுந்தாசியென்றும் விஸ்தாரஞ்சொல்லுகிறான்
தாசிபெற்றபிள்ளையென்றும் தளர்ச்சியாய்சொல்லுகிறான்
இந்தசபைநடுவே யெடுத்தெறிந்துபேசுகிறான்

தாசிபிள்ளையென்றவனைத் தலையைப்பிளந்திடுவேன்
வேசிமகனென்றவனை வெட்டியெறிந்திடுவேன்
உலகத்தில்வாழும்பெண்கள் ஒருவனுக்குகைகொடுப்பார்
இன்னஞ்சிலவேசியர்கள் இருவருக்குகைகொடுப்பார்
ஆணழகிதுரோபதைக்கு ஐந்துபேர்மாப்பிள்ளைமார்
பலபேர்க்குகைகொடுத்தாள் பட்டியவள்தேவடியாள்
இப்படிக்குசொல்லுகின்றான் எரிநாகங்கொண்டவனும்
அங்கிருக்குமன்னவர்கள் அரையர்துரைகளெல்லாம்
பாட்டனார்வீஷ்மரும் பாரியதுரோணருக்கு
சிற்றப்பாவிதுரனுக்கு சீருள்ளகாங்கையனும்
காஞ்சிநாடனுங் கர்ணர்பெருமானும்
சிந்தைகலங்கி திக்கிட்டுமெய்மறந்து
மன்னன்மனஞ்சலித்து மர்மமாய்த்தானிருந்தார்

விகர்ணனுரைப்பது.

வில்லில்பெரிய விகர்ணனுமேதுரைப்பான்
நூலால்கடுந்திரனார் நூற்றொருவர்க்கேயிளைஞன்
விகர்ணப்பெருமான் யெடுத்துமிகவுரைப்பான்
அண்ணன்முகம்நோக்கி ஆணழகனேதுசொல்வான்
அண்ணாவேகேளும் அடியேனொருவார்த்தை
என்னண்ணாநீர்கேளும் யின்னமொருவார்த்தை
பஞ்சவர்களைவரையும் பார்மன்னர்சபைநடுவே
ஐவர்பஞ்சபாண்டவரை அழைத்துமேசூதாடி
மாதுநல்லாள்துரௌபதையை மன்னர்சபைநடுவே
துரௌபதையைக்கொண்டுவந்து துகிலுரிந்தாயே
பாவையழகியரைப் பாஞ்சாலன்சீர்மகளை
உரிந்ததுகில்வளர்ந்த உத்தமியாள்நாயகிக்கு
அத்தானுஞ்சாடை யறியாமற்போனீரே
பெண்ணுரிந்ததுகில் போராய்க்குவிந்தது
மாதையுரிந்ததுகில் மலையாய்வளர்ந்தது
அத்தானுஞ்சாடை யறியாமற்போனீர்கள்
பத்தினியாளென்று சொல்லிப் பாராமற்போனீர்கள்
அரண்மனைப்பெண்டுகளை அனைவரையுந்தானழைத்து
எடுத்துவிடுங்களென்றீர் எத்திலங்குபூமுடியான்
அந்தவிசேஷ மதுகேட்டுமங்கையர்கள்
இரியோநிரான்பெண்டுகள் மானங்குலைந்தது
அத்தண்டசேலையெல்லாம் அவர்களெடுத்துடுத்தி
வர்ணவிதசேலையெல்லாம் மாதர்கள்தானுடுத்தி
அம்பலத்திவாசலிலே ஆணழகர்பெண்டுகளும்
மானங்குலைந்தார்கள் மதிகுலைந்துபோனார்கள்
வெட்கங்குலைந்தார்கள் வெட்கிநடந்தார்கள்

பத்தினியாள்சாபம் பலித்துதேகம்பளுக்கு
உத்தமியாள்சாப முடனேபலித்ததல்லோ
அத்தாலுஞ்சாடை யறியாமற்போனீரோ
பத்தினியாளென்றுசொல்லி பாராமற்போனீரோ
இப்பெரியநாடும் எழில்பெரியஆதினமும்
அத்திபுரமும் அடங்கலும்நம்முதென்றான்
நாலாக்கடுந்திரளார் நூற்றொருவர்பூமுடியை
எல்லையுலகங்கள் யிருந்தரசுஆள்வோமென்று
எண்ணியிருந்தீரோ அண்ணாமேவேநீர்கேளும்

புனந்திரன்சொல்வது

பதினெட்டாநாளையிலே படைமன்னர்சன்னைடயிலே
பாரதமென்று படைபொருதும்வேளையிலே
ஆடிப்பறக்கும் அமுர்தசமர்க்களத்தில்
நாலால்கடுந்திரளார் நூற்றொருவர்பூமுடியை
வெற்றிமதயானை வீமதுதெண்டாலே
பட்டுவிழுந்தாலே படைமன்னர்சபைநடுவே
தோழுவடிவழகி துரெளபதைநாயகியாள்
உன்மார்மேலேயேறி மயிறைமுடிக்கவென்று
குடல்மாலைதானெடுத்து கொண்டைக்கபராக்கி
மார்பெலும்பைத்தானெடுத்து வண்ணவிதசீப்பாக்கி
மாருதிரந்தானெடுத்து மயிர்க்கூந்தல்தான்தடவி
சம்பங்கிஎண்ணெயது போலேதடவியவள்
வாரிமயிர்முடிக்க நாளாச்சேமன்னவனே
கோதிகுழல்முடிக்க நாளாச்சேகொற்றவரே
இன்னமனதில் வைராக்கியம்வேண்டாங்காண்
பங்குவிட்டநாடும் பகுந்தரசுதந்துவிடும்
பாதிநகரமல்லோ பஞ்சவர்க்குநீகொடுத்து
ஒத்துப்பிழையுமென்று னுத்தமனூர்வீரியனும்
கலந்துப்பிழையுமென்றான் கட்டழகன்வீரியனும்

திரியோதிரன்கோபித்து விகர்னருக்குரைப்பது

இவன்சொன்னவார்த்தையெல்லாம் யெரிநாகன்தான்கேட்டு
விகர்னனுடனுரைப்பதற்கு வெகுண்டுமனங்கொதித்து
தம்பிமுகம்நோக்கி தார்வேந்தனேதுசொல்வான்
தூதுரைக்கவந்தானே தூன்னீலங்கண்ணனும்
வேசிபெற்றபிள்ளை விடுபட்டுவந்தானே
தாசிபெற்றபிள்ளையிவன் தனதுரைக்கவந்தானே
அவனுடனேநீகூடி அடுத்துப்போர்செய்தாலும்
நீங்கள்-ஒருமிககக்கூடியல்லோ யுத்தங்கள்செய்தாலும்
எந்தன்முடிசிந்தி யிறந்துநான்போனாலும்
மகுடமுடிசிந்தி மாண்டுமடிந்தாலும்

மாண்டுமடிந்தாலும் வைகுண்டஞ்சேர்ந்தாலும்
செத்துமடிந்தாலுஞ் சிவலோகஞ்சேர்ந்தாலும்
பஞ்சவர்களைவருக்கும் பாதிநாடில்லையென்றான்
பாதியேநாடும் பகுந்தரசுயில்லையென்றான்
உத்தமர்களைவருக்கு மொன்றுங்கொடுப்பதில்லை
அவர்களாலானமட்டும் கண்டுவிடச்சொல்லுமென்றான்
பார்த்தனாலானமட்டும் பார்த்துவிடச்சொல்லுமென்றான்
வீமனாலானமட்டும் வீம்புசெலுத்துமென்றான்
போராஞ்சாமன்னர் புணந்திரனாலானமட்டும்
புணந்திரனாலானமட்டும் போர்கொடுத்துவெல்லுமென்றான்

புணந்திரர் கோபித்துரைப்பது.

பொங்கிமனந்தளர்ந்து போராஞ்சாபுத்திரனும்
அங்கிருக்குமன்னவர் அவையர்முகம்நோக்கி
தேசத்தையாளுந் திரியோதிரன் தானும்
இப்படிக்குசொன்னமட்டும் யினிபொறுக்கமாட்டேனையா
வெற்றிமதயானை விமாசபதமது
மன்னன்பொருஞ்சபதம் மாளட்டுமென்றிருந்தேன்
இவனுக்குகால முடிந்ததுமன்னர்களே
எமனையாவந்து யிவனைவாவென்றழைக்க
நமனருயாவந்து நாடியழைத்திருக்க
சிறைபட்டபித்திரனுங் குறைபட்டுந்தானழைக்க
எரிநாகங்கொண்டவனுக் கிருக்கப்பதமுமில்லை
என்றுமவனெழுந்து யெடுத்தானேவில்லதனை
வில்லெடுத்துநாணிபூட்டி வில்லைக்குணத்தொணித்து
வில்லைக்குணத்தொணித்து வில்மாரிதான்பொழிய
சண்டைக்குமுஸ்திராய் நின்றானேபித்திரனும்
தேசத்தையாளுந்திரியோதிரன்பார்த்து

திரியோதிரன் சண்டைக்கு ஆயுத்தப்பட்டது

வில்லெடுத்துவாளெடுத்து வில்லைக்குணத்தொணித்து
வாடாபயலேயுன்னை வாரியறைந்திடுவேன்
வேசிமகனேயுன்னை வெட்டிபிளந்திடுவேன்
தாசிமகனேயுன்னை தலையையுடைத்திடுவேன்
ஒன்றுமெழுந்தானே எழில்நாகங்கொண்டவனும்
வேசிமகனென்றுவிஸ்தாரஞ்சொன்னதெல்லாம்
வேசிமகனானதெல்லாம் வெளியாகக்காண்பிப்பேன்
தாசிமகனென்பதெல்லாந் தானேதெரியுதுபார்
என்றுதிரியோதிரன் யிடும்பாயுரைக்கையிலே
போராஞ்சாமன்னர் புணந்திராசருக்கு
மீசைதுடித்துவிழ மின்மீசையொப்பமிட

புனந்திரன் திரியோதிரனுபரணங்களை தவிடுபெறச்செய்தது

கண்கள்பொறிபறக்க காந்தாளமாகுதங்கே
வில்லெடுத்துநாரிபூட்டி வில்லைகுணத்தொனித்து
மன்னர்சபைநடுவே உந்தனமுடிதரிப்பேன்
விட்டானொருபாணம் மண்ணதிர விண்ணதிர
மண்ணதிர விண்குலுங்க மாற்றான் திடுக்கிடவே
மாற்றான்திடுக்கிடவே மறுமன்னர்கொக்கரிக்க
மற்றுமொருகணையை மறுகணையைத்தான்தொடுத்தான்
தேசத்தையாளுந் திரியோதிரன்வீற்றிருக்கும்
சிம்மாசனங்களெல்லாம் தவிடுபொடியாகுதங்கே
முத்துமுடிகளெல்லாந் தரையில்பிரண்டுருள
வாள்கத்தியம்புகளும் வளைதடிசக்கரமும்
அத்தனையுமற்றுவிழ மற்றுங்கணைதொடுத்தான்
மற்றுமொருகணையை மறுகணையைத்தான்தொடுத்தான்
சரமேற்சரம்பொழிந்தான் சாமார்த்தியமுள்ளவனும்
இப்படியாக இவன்விடும்பாணமெல்லாம்
தேசத்தையாளுந் திரியோதிரன்பார்த்து

திரியோதிரன்கோபித்து புனந்திரனைப்பார்த்துரைப்பது.

கோபித்துகண்சிவந்து கொல்லும்புலியதுபோல்
பத்தியநாகம் பவளம்போற்கண்சிவந்து
நெறறிப்புருவம் நெருப்பாயனல்பறந்து
சூரியமண்டலத்தைக் கிட்டிச்சுவாலயமாய்
அக்கினிமண்டலத்தை யடுத்துசுவாலயமாய்
குன்றுபோல்கண்சிவந்து கோபமதிகரித்து
மீசைதுடிதுடிக்க விழிகள்பொறிபறக்க
கண்கள்பொறிபறக்க காந்தாளம்பொங்கிவர
இந்திரனைப்பார்த்து எடுத்துரைப்பான்திரியோதிரன்
சாணுண்டுபையாஉன் சாமாத்தியம்நானழிப்பேன்
சௌரியத்தைநான்குலைத்து தலையையுடைத்திடுவேன்
நாகக்கணையாலே நானேதலையுடைப்பேன்
அறுதலைப்பெற்றபிள்ளை ஆட்டிவைப்பேனம்பலத்தில்
என்னுகணையெடுத்தா னிந்திரன்மேலேவிட
இவனுரைத்தவார்த்தையெல்லாம் யிந்திரனுந்தான்கேட்டு
தேசத்தையாளுந் திரியனுக்கேதுசொல்வான்

புனந்திரன் திரியனுக்குரைப்பது

ப்ச்சைமடல்விரியும் பாளைவிரிபூமணக்கும்
பாஞ்சாலமகாராசன் சுயம்வரப்பந்தலிலே
தோளுவழ்ப்பழகி துரௌபதைநாயகியை
மாலையிடவந்தவர்கள் வர்ணல்ட்சம்ராசாக்கள்
அவர்களுடனாக வந்தீரே ஆணழகா

மெல்லியாள் துரௌபதையை வில்வளைத்தானாயிலே
வில்லைவளைப்பதற்கு உந்தனாலாகாதே
வேந்தர்சபைநடுவே வெட்கங்கெட்டமன்னவனே
மன்னர்சபைநடுவே மானங்குலைந்தாயே
அன்றுபட்டபாடு மறந்தாயோ ஆணழகா
இன்னமுமெந்தனுடன் எதிர்நின்றுபேசவந்தாய்
ஐவர்பஞ்சபாண்டவர்கள் யாகம்வளர்த்திடுவார்கள்
யாகமதுபார்க்க வந்தாயேஆணழகா
சநத்னச்சேற்றில் நடக்கவறியாமல்
சவுரியங்களற்று சறுக்கிவிழுந்தாயே
ஆண்மைகளற்றுமல்லோ அங்கேவிழுந்தாயே
மன்னர்சபைநடுவே மானங்குலைந்தாயே
தோறுவடிவழகி துரௌபதையாளென்றேச்சி
பாங்கியர்க்குமுன்பாகப் பார்த்துநகைத்தாளே
அத்தானுந்தாசிலையே ஆணழகாயுன்னுடம்பு
நீ-ஆண்பிள்ளைபோல அமருக்குவந்தாயே
வில்லெடுத்துயுத்தம்பண்ண வந்தாயேவேந்தர்முன்னே
கைதனிலே வில்லெடுக்க அறிவாயோகட்டழகா
நானுன்னுடையவன் சாமர்த்தியம்பாருமென்றான்
அறியாதுயெந்தனிட ஆண்மைகளைப்பாருமென்றான்

திரியோதிரன்பேரில் பாணம்விட்டது

விட்டானொருபாணம் மன்னதிர விண்ணதிர
மன்னதிர விண்ணதிர மாற்றான்திடுக்கிடவே
எதிரிதிடுக்கிடவே யெல்லையதிர்ந்துவிழ
மற்றுமொருகணையை மறுகணைதானெடுத்தான்
அந்ததொருபாணம் வந்துவிழுமனேகம்
திரியோதிரன்முடிமேல் யிருக்குஞ்சிகரங்களும்
அவன்கையிலாயுதமும் அத்தனையுந்தான்பார்த்து
வந்துவிழுந்தது மன்னனிடகைத்தலத்தில்
மற்றுமொருகணையை மன்னனிடகைத்தலத்தில்
திரியோதிரனுடைய சேனைத்திரள்படையும்
அத்தனையுநெத்தி நடந்துதேபாணமது
போராஞ்சாமன்னர் புனந்திரனுரேதுசொல்வார்

புனந்திரன் சொல்வது.

பஞ்சவர்களைவரும் பாரவனநதேடி
ஐவர்பஞ்சபாண்டவர்கள் ஆரணியம்சென்றாரோ
பன்னிரண்டுதன்வருஷம் ஆண்டாரேகானகத்தில்
அவர்களைத்தேடியல்லோ யனுப்பினார்மல்லர்களை
மல்லர்களைவிட்டவரைக் கொல்லுமென்றுவாக்களித்தார்

அவர்களைக்காணும லனுந்துவநதாமல்லாகளும்
தூறுவாசமகாமுனியை தொழுது தவம்புரிநது
ஆணழகர்பஞ்சவரை அவனைவிட்டுகொல்லுமென்றார்
ஐவரைத்தேடி நடநதாரவனம்நோக்கி
ஐவரையுங்கண்டாரே அப்பெரியதூறுவாசர்
ஐவர்பஞ்சபாண்டவரும் மாமுனியைக்கண்டவுடன்
மாமுனியானவற்கு மன்னாபஞ்சபாண்டவரும்
ஆசனங்கள்தான்போட்டு அவர்க்களித்தார்போசனங்கள்
பலாயிலையில்போசனங்கள் படைத்தாரோமாமுனிக்கு
அருந்துண்டுமாமுனியும் ஆலித்தவாமறநது
ஐவரையும்வாழ்த்தி நடநதாரேகானகத்தில்
மற்றுமொருவனத்தில் மன்னரொளித்திருநதார
தங்கைமணவாளன் தறுதலையைத்தானழைத்து
ஐவாபஞ்சபாண்டவர்க்கும் அபிஷேகபத்தினியாள்
அபிஷேகபத்தினியாள் ஆரணங்குதுரௌபதையும்
அவளழகுமொப்பனையும் ஆருமில்லைவையகத்தில்
துரௌபதையைக்கொண்டு தூங்குமஞ்சமேற்றிவைத்தால்
இப்பெரியநாடுமெழில்பெரியஆதினமும்
உன்னுடையநாடுங் கர்ணாபதியாதினமும்
அந்தனையுநதாரேனென்றார ஆனநதமார்பனுக்கு
நல்லதென்றுசம்மதித்தா னுமமுடியானும்
ஒளித்திருக்கும்வனத்தை வுத்தமியைத்தான்தேடி
பத்தினியைத்தேடியல்லோ வநதானேகானகத்தில்
குதுரைத்துதுரௌபதையை தூக்கிநடநதானே
கபடமவனுரைத்துக் கட்டழகன்போய்நடநதான்
ஆரணங்குபோனதை ஐவர்களுநதானறிநது
பாதகன்கொண்டுபோற சேதியவரறிநது
தேரையுடைத்தவர்கள் செம்புரவிதுண்டித்து
இரத்தையவருடைத்து நால்புரவிதுண்டித்து
பாவையழகியரைப் பத்தினியைக்கொண்டுவநது

சயிநதவனைக் கழுதைவடிவாக்கினது

கட்டழகனசயிநதவனைக் கழுதைவடிவாக்கி
கழுதையைத்தொட்டதொரு கட்டழகரானவர்கள்
ஒட்டிவருகவென்று யிட்டாள்பெருஞ்சாபம்
எங்கள்-வம்மிசத்தார்தொட்டாலேவிட்டுவிடவேணுமென்று
மிருகவடிவாக்கி யனுப்பினாருங்களண்டை
கட்டழகர்மைத்துனனை கழுதையாயாக்கிவிட்டார்
அன்றுமேகண்டாயே அவருடையவீரியத்தை
இன்னமுங்காண்பாய்காண் யெங்களிடசௌரியங்கள்
மற்றுமொருவனத்தில் வாசம்பண்ணாமன்னவர்கள்

இன்னஞ்சிலகாலம் சென்றபிறகாக
ஆகாயகெந்தருவன் அவனுமிழ்ந்தான் தம்பலங்கவ்
மாயரிடைகைத்தலத்தில் வந்துவிழுந்தது
அவன் தலையைவாங்கிவைக்க ஆயரவரெழுந்தார்
ஆகாயகெந்தருவன் அவன்பயந்தோடிவந்து
அர்ச்சுனராசரண்டை அபயமிட்டோடிவந்தான்
ஆர்ச்சுனராசர் அவனையெடுத்தணைத்தார்
அந்தவிசேஷம் அதுவறிந்துமாயவரும்
மன்னர்மனதறிய மாயர்படையெடுத்தார்
உந்தன்கெருவம் அடக்கமனதிலெண்ணி
அத்தானுஞ்சாடை அறியாமற்போனீரே
மாயருக்குமெங்களுக்கு மச்சான்முறைகளென்று
உன்படையுமவர்படையு மொன்றாகக்கூட்டினார்
இருவர்மேல்சண்டைபண்ண வந்தீர்களெல்லாரும்
வெற்றிமதயானை வீமாருச்சுனரும்
உந்தன்படைத்தளத்தை ஒருமிக்கவேராய்ந்து
மாயன்படையையெல்லாம் மன்னனுக்கிரையாக்கிவிட்டார்

மாயரருச்சுனன்மேல் சந்தோஷப்பட்டது

மாயரதுதெரிந்து மர்மம்வெளிவிடாமல்
தேரைவிட்டுகீழிறங்கி நடந்தமாயவரும்
வீமருக்குமருச்சுனற்கும் எதிராகவந்துமவர்
அருச்சுனரைக்கட்டி யணைத்துவுறவாடி
வீமரைக்கட்டி வெகுவாயுறவாடி
மாயவருமருச்சுனனும் மனங்குளிர்ந்தாரன்னேரம்
ஆயரும்வீமரும் அங்கேமனங்குளிர்ந்தார்
அத்தானுஞ்சாடை யறியாமற்போனாயே
இன்னமின்னம்பார்க்கணுமோ எங்களுடைவீரியங்கள்

துரியோதனன்மாடுபிடிசண்டையில் முதுகுகொடுத்தோடினது

மாடுபிடிசண்டையிலே மன்னவரே வந்தீர்கள்
பேடியவர்சண்டையிலே பின்னிடைந்தோடினீர்கள்
அருச்சுனனார்சண்டையிலே ஆண்மைகுலைந்தீர்கள்
வீமனார்சண்டையிலே வெற்றிகுலைந்தீர்கள்
யானைபெருஞ்சேனைகளும் அத்தனையும்நீர்தோற்று
சேனையொருவெள்ளம் திரள்வேந்தர்கையைவிட்டு
முடிதரித்தராசாக்கள் முதுகிட்டோடினீர்கள்
கணைபிடித்தராசாக்கள் கால்நடுங்கஓடினீர்கள
அறியாதவையனிட ஆண்மைகளைக்கண்டீரே
தெரியாதவன்றனுடைய சௌரியத்தைப்பார்த்தீரோ
இன்னமின்னமென்றனுடைய சௌரியங்கள்பார்க்கணுமோ
பார்த்தமட்டும்போதாதோ பாம்புக்கொடியோனே

பதினெட்டாநாளையிலே படைபொருதுஞ்சண்டையிலே
ஆடிப்பறக்கும் அமர்தசமர்க்களத்தில்
யுத்தமிகநடந்து ரத்தாறுஓடையிலே
உங்கள்முடிகளெல்லாஞ் சிதறியுடையிலே
காணுதசெளரியங்கள் காண்பாயுன்கண்ணாலே
பாருதவீரியங்கள் பார்த்திடுவாய்முன்னாலே
இந்தக்கணையாலே வுந்தன்தலையுடைப்பேன்
என்றுமனங்கொதித்து யிந்திராசாவும்
அங்கிருக்குமன்னர் அரையர்துரையரெல்லாம்
பாட்டனார்வீஷ்டுமரும் பாரறியதுரோணரும்
சிற்றப்பாவிதுரனுஞ் சீருள்ளகாங்கையனும்
காஞ்சிநாடாளுங் கர்னசிகாமணியும்
வில்வில்திறமுடைய விகர்ணப்பெருமானும்
இதக்கணையாலே யியற்றிடுவான்பூமுடியை
இந்திரன்வாளாலே யிற்றுவிடும்பூமுடிதான்
இவன்தலையற்றாலே எனபடுமோஉன்வாசல்
வெற்றிமதயானை வீமனதுசபதங்களும்
தோருவடிவழகி துரௌபதைநாயகியாள்
இட்டபெருஞ்சபதம் யிதுமுடிக்கவேணுமென்று
எல்லவருங்கூடி யின்பமாயெழுந்திருந்து
பாட்டனார்வீஷ்டுமரும் பாரறியதுரோணரும்

புனந்திரன் திரியோதிரன்பேரில் பாணம்விட்டது

வில்லெடுத்துநாரிபூட்டி வில்லைக்குணத்தொனித்து
விட்டான்சரபாணம் விண்ணதிரவிண்குலுங்க
மண்ணதிரவிண்குலுங்க மாற்றான்திடுக்கிடவே
மாற்றான்திடுக்கிடவே மறுமன்னாரொக்கரிக்க
எதிரிதிடுக்கிடவே யிருந்தமன்னர்கொக்கரிக்க
பாணம்வரும்வேகம் பார்க்கமுடிபோகாது
அம்புவரும்வேகம் ஆற்றமுடிப்போகாது
சிற்றப்பாவிதுரனுஞ் சீருள்ளகாங்கையனும்
காஞ்சிநாடாளுங் கர்ணசிகாமணியே

கர்ணர்விதுரர் விஷ்டுமர் விகர்ணனிவர்கள்
திரியோதிரனுக்கு கோபந்தணித்தது

தேசத்தையாளுந் திரியோதிரன்முன்னேவந்து
அமையுமமையுமையா ஆனந்தவாழ்மார்பா
தூதுரைக்கவந்தவனைத் தொடர்ந்துகொல்லலாயமுண்டோ
வார்த்தைசொல்லவந்தவனை வாளெடுத்துகொல்லலாமோ
புத்திரனைக்கொல்வாரும் உண்டோவுலகுதனில்
மைந்தரைக்கொல்வாரும் உண்டோதான்வையகத்தில்
என்றுமனந்தேற்றி எத்திலங்குபூமுடியன்.

கொற்றவனார்கோபம் குணப்படுத்திக்கொண்டார்கள்
மன்னவனார்கோபம் வசப்படுத்தியானபின்பு
தேசத்தையாளுந் திரியோதிரப்பெருமான்
ஆதிரனென்கோபம் அமர்ந்தான்கொலுமுகத்தில்
தேறுறான்கோபந் தெளிந்தான்கொலுதனிலே
எரிநாகங்கொண்டவனு மிருந்தின்றபிவனையிலே

காணர்விதுரர்வீஷ்மர்துரோணர் இவர்கள்புனந்திரனுக்கு
சமாதானவார்த்தை கூறல்.

நகனைதுமேல்பாணம் எடுப்பாரோதார்வேந்தா
அய்யர்மேல்பாணம் எடுப்பாரோஆணமுகா
மன்னர்மேல்பாணம் எடுப்பாரோமந்திரியே
அமையுமமையுமென்று ஆணமுகரிந்திரரே

புனந்திரனை குருக்களணைந்து சமாதானங்கூறல்.

சொணுதமாதனைத்துக் குருக்களவர்ஓடிவந்து
ஆனந்தமார்பனை யணைத்துமடியில்வைத்து
உச்சிமுகந்துமவர் உள்ளங்கால்முத்தமிட்டு
பக்கந்தடவிப் பலனாவாய்முத்தமிட்டு
கைதனைத் தடவிப்பதனைத்து சனிவாய்முகர்ந்தணைத்து
கொற்றவனார்கோபம் குணப்படுத்திக்கொண்டவரும்
மன்னவனார்கோபம் வசப்படுத்திக்கொண்டவாகள்
அறுப்பினபாணமதை யழைத்துவுறையினிலே
போரஞ்சாமன்னர் புனந்திரருமுன்னேவந்து
இந்திராசனுக்கு பேறுபொல்லாமன்னவர்கள்
அமையுமமையுமையா ஐவரிடபுததிரனே
சண்டையமையுமையா இந்திராசாவே
போரையடக்குமையா புனந்திரவீரியரோ
பாணம்விலக்குமையா மாயர்மருகனே
மாயன்மருமகனே மாதுமணவாளா
செல்லவிட்ட பாணமதை சொலமறைத்தாலிக்கும்
என்றுமவருரைக்க பெருமிசொல்வாரிக்கிரரும்
உங்களதுபாணம்போல என்றனுடபாணமில்லை
உங்களதுவில்லதுபோல் என்றனுடைய பாணம்
போவென்றால் போய்விடும் வாவென்றால்வந்துவிடும
நில்லென்றால்நின்றுவிடு நிங்கள்பிடித்தபாணம
வல்லுயிர்களற்றவர்க்கும பாணத்திறமுண்டோ
மந்திரவல்லமையுள்ள வில்லாதபேர்களுக்கு
பாணத்திறமுமில்லை படைமன்னர் பலமுமில்லை

வில்லுதிறமுமில்லை வேந்தர்பகையுமில்லை
உங்களதுபாணம்போல் என்னினைததிரகளே
எந்தனிடைகைபாணம் யிதின்வலுமைசொல்லுகிறேன்

புனந்திரன் பாணததின்மகிமைகூறல்.

எதிர்குறிகாணுதே வுறைசொல்லமாட்டாதே
உதிரங்கள்கண்டாலே வுறைவந்துசேர்ந்துவிடும்
இரததக்குறிகண்டாலே உறைவந்துசேர்ந்துவிடும்
என-பாணததின்தன்மகிமை யறியீரோமன்னர்களே
என்னுடையவில்திறத்தை யறியீரோமன்னவரே
இரத்தக்குறிகாட்டுமே உததமரேயென்றுரைத்தான்
உதிரக்குறிகாட்டுமென்றான் உத்தமனரிந்திரனும்
அங்கிருக்குமன்னர் அரையாதுரைகளெல்லாம்
கேட்டபுனந்திரற்கு கேள்விசொல்லமாட்டாமல்
நெஞ்சுலர்ந்துநாவறண்டு நித்திலங்குபூமுடியார்
பச்சைமுகங்கருகிப் பால்முகம்வேறுபட்டு
சிந்தைகலங்கித் திடுக்கிட்டுமெய்மறந்து
மன்னாமுகம்பார்தது மாமமாய்வீற்றிருந்தார்

கர்னர் புனந்திரனுக்கு திரியோதிரனுயிர்த்தூணைக்
கல்சாலைய்யாய்க்காட்டினது-

காஞ்சிநாடாளுங் காணசிகாமணியும்
மன்னாமுகம்நோக்கி மாமமாபேதுசொல்வார்
தேசததையாளுந் திரியோதிரன்முன்பாக
இருவருக்குமுயிர்த்தூணை நித்திலங்குபூமுடியாள்
கல்சாலைகாட்டினூ கர்ணசிகாமணியும்
போரஞ்சாமன்னா புனந்திரருந்தான்பார்த்து
காலையிடபுத்திரனும் கைபாணத்தைமுகவிட்டு
வேந்தனிடகைபாணம் வீறிட்டெழுந்தது
புனந்திரன்பாணமது பொறிபரக்கத்தானெழுந்து
ஆகாயவீதியெல்லாம் அங்கேசுழன்றுவிழ
உயிர்த்தூணைவெட்டி உறைந்துசேர்ந்ததப்போ
போரஞ்சாமன்னா புனந்திரராசாவும்
ஆறினான்கோபம் அமர்ந்தான்கொலுமேடை
தேறினான்கோபம் தெளிந்தான்கொலுமேடை
கொற்றவனார்கோபம் குளிர்ந்தசலம்போலானர்
மன்னவனார்கோபம் மனதாறிவீற்றிருந்தார்
தேசத்தையாளுந் திரியோதிரப்பெருமான்
உயிர்த்தூணுபோனவுடன் உற்றபலமிழந்தான்

திரியோதிரன் ஆங்காரபலமிழந்தது.

வாடியணந்தளர்ந்தான் வலுமன்னராசாவும்
கைசோர்ந்தான்மெய்சோர்ந்தான் கையில்கணைசோர்ந்தான்
உற்றபலங்குறைந்து ஒங்கிமனந்தளர்ந்து
ஏரிநாகங்கொண்டவனும் யிருந்தசபைநடுவே
மூர்ச்சையடைந்தானே முடிமன்னராசர்கள்முன்
கலையாகிவிழுந்தானே கட்டழகன்வீரியனும்
இப்படியாக யிருக்கின்றவேளையிலே

திரியோதிரனுக்கு கலைமாறச்செய்தது.

சாதிமணிக்கவுரி சந்தானத்தாலூதுவத்தி
கோலமணிக்கவுரி குங்குமத்தாலூதுவத்தி
வீசினார்தூதுவர்கள் வேல்புருவக்கண்ணனுக்கு
திறவாதகண்கள்ரெண்டும் திறந்துமவன்பார்த்து
முழியாதகண்கள்ரெண்டும் முழித்தான்திரியோதிரன்
தாமதங்கொண்டல்லவோ தார்வேந்தன்வீற்றிருந்தான்
இப்படியாக யிவனிருக்கும்வேளையிலே

புணந்திரன் உத்தரவுகேட்கிறது.

போரஞ்சாமன்னா புணந்திரனாரப்போது
வந்துமிகப்பொழுதாச்சு மன்னர்பெரியவரே
போகவிடைதாரும் என்றுமன்னன்கைதொழுதான்
பாட்டனும்வீஷ்மரும் பாரானுந்துரோணரும்
சிற்றப்பாவிதுரனுக்கும் சிறுள்ளகாந்தையற்கும்
காஞ்சிநாடானுங் கர்ணர்பெருமானுக்கும்
தேசதந்தையானுந் திரியோதிரனுக்கும்
போகவிடைதாருமென்று பொன்னடிக்குதெண்டனிட்டான்
அங்கிருக்குமன்னர் அரையர்துரைகளெல்லாம்
தெண்டனிட்டமன்னவனை வாரியெடுத்தணைத்து
வாரியெடுத்தணைத்து மார்மேலேகொண்டணைத்து
போய்வாருமையா புணந்திரராசாவே
ஆறுயிரம்பாண்டியற்கும் ஐயன்மார்பாண்டவற்கும்
ஐவர்பஞ்சபாண்டவற்கும் அல்லித்திருநாயகிக்கும்
எக்களதுசென்மம் யெடுத்துரையுமிந்திரரே
போய்வாருமென்று பொருந்திவிடைகொடுத்தார்.
போரஞ்சாமன்னர் புணந்திரராசாவும்

பேரிகை முழங்குவது.

அந்தத்தெருவீதியிலே அடித்தார்கள்பேரிகையை
ஊதினார்சின்னம் உலகேழுந்தானதிர
செய்பொன்னாற்காளை திசைவிளங்கவூதினான்
பொன்னினாற்காளை பொருந்தியின்றூதினான்
இந்திரனும்போமறமென்று வெடுத்தான்திருதாசை
செயம்பெற்றுவாரோமென்று ஊதினான்சங்கெடுத்து
காஞ்சிநாடாளுங் கர்ணரவர்பெற்றெடுத்த
வேல்பொருதுங்கண்ணனும் விஸ்வகேதுதான்கேட்டு

கர்ணர்குமாரன் விஸ்வகேது யுத்தத்துக்குப்புறப்பட்டது.

எந்தவூராசாவோ யெவ்விடத்துமந்திரியோ
கொர்ச்சிதேசமாளுங் குணமுள்ளராசாவோ
மாற்றான்படையோதோ விவ்வீதிவந்ததென்ன
எதிராளிபடையோதா விவ்வீதிவந்ததென்ன
செயம்பெற்றுவந்தோமென்று ரணபேரியடிபடுது
வந்ததொருராசாக்கள் மன்னரைநாம்பார்ப்போமென்று
சென்றதொருராசாக்கள் சேவகத்தைக்காண்போமென்று
சினத்துமவனெழுந்து தேர்விசையன்செல்வனுமே
தேர்ப்பாகனையழைத்து தேர்கொண்டுவாருமென்றான்
அப்படியேயல்லதென்று ஆணழகனேடிவந்து
தேரையலங்கரித்து தேர்ப்பாகன்கொண்டுவந்தான்
தேர்வந்ததென்றுசொல்லி தீர்க்கமுடன்தெண்டனிட்டான்
வேல்புருவங்கண்ணனும் விஸ்வகேதுதானெழுந்து
மண்டியிடுங்கால்களுக்கு மாதளப்பூசல்லடமாம்
தூக்கிவைக்குங்கால்களுக்கு துத்திப்பூசல்லடமாம்
குந்தியிடுங்கால்களுக்கு குரிஞ்சிப்பூசல்லடமாம
தட்டிவரிந்துகட்டி தாமரைப்பூசுங்குவிட்டு
சிவசிவாவென்றுசொல்லி திருநீற்றுக்காப்பணிந்து
கமலத்திருமுகத்தில் கஸ்தூரிப்பொட்டுமிட்டு
வாளெடுத்துவில்லெடுத்து வளைதடிகையெடுத்து
அம்பெடுத்துவில்லெடுத்து அம்புறாத்தூணிதானெடுத்து
அரண்மனையேழுகட்டும் அந்தப்புரந்தாண்டி
மாலைமுடியானு மணிரதத்தின்முன்னேவந்து
தேரைச்சுற்றி தெண்டனிட்டு தேரின்மேலேறினான்

பச்சைக்குடையாம் பவளமிங்குடையாம்
வச்சிரக்குடையாம் வைடூரியப்பொற்குடையாம்
முத்துக்குடைபிடிக்க முடிமன்னர்தேர்நடக்க
பவளக்குடைபிடிக்க பார்மன்னர்தேர்நடக்க
ரத்தினக்குடைபிடிக்க ராசாக்கள்தேர்நடக்க
போரஞ்சாமன்னர் புனைத்திரருஞ்சேவகரும்
அர்ச்சுனனுற்புத்திரனும் அவருடையசேனைகளும்
அம்பலத்துவாசல் நடந்தாரு[illegible]
குடைவிட்டவாசலெல்லாந் தாண்டியக்கோபுரவாசலும்
பத்துப்படித்தளமும் பதினெட்டுமண்டபமும்
எட்டுப்படித்தளமும் யிராசாக்கள்மண்டபமும்
அத்தனையுந்தாண்டிவந்தார் ஆனைமுகசித்திரரும்
வாசலைத்தாண்டிநின்ற வார்கொள்ளிமுன்னேவந்தார்

வார்கொள்ளி புனைத்திரனைச் செய்திகேட்பது.

வாசல்தடைக்காறி வார்கொள்ளியேதுசொல்வாள்
வாணவாகன்புத்திரனே வந்தீரே தூதுரைக்க
மாதுமணவாளர் தூதுரைத்துமீண்டரோ
தூதுரைத்துவந்ததெல்லாம் சொல்லுமையாயென்றனக்கு
சொல்லுமையாவென்றுசொல்லிக் கொழுந்திருந்தெண்டனிட்
போரஞ்சாமன்னர் புனைத்திரரும் அதுசொல்வார் [டாள்
போனவிசேஷம் புதுமைநடந்ததுவும்
தாமமுடியான் தைலாட்டன்பட்டதுவும்
[illegible] கடப்பித்தார்சித்திரரும்
அந்தவிசேஷம் அதுகேட்டுவார்கொள்ளியும்
கேட்டுமனமகிழ்ந்து கிளிபவளச்செவ்வாயாள்

வார்கொள்ளியுரைப்பது.

அத்திபுரத்தை யரசாளவாருமையா
அங்கவனாடி அரசாளவாருமையா
உங்கள்-ஐவிடசீமை முழுதுமேயாளுமென்று
போய்வாருமென்றுசொல்லிப் பொன்னடிக்குதெண்டனிட்டு
போரஞ்சாமன்னர் புனைத்திருமேதுசொல்வார்
மூன்றுகாணாப்பொழுது முடிமன்னராளுவது
காலகாலங்களாது ஆருக்குகால்ராச்சியங்கள்
செட்டிசம்பளங்கள் நாமேதருகிறங்கான்
ஏதுக்குமஞ்சாதே யிளங்கொடியேநீயென்றான்
சொல்லித்திரும்பினான் தன்னிலங்கன்றனுட
அத்திப்புரத்தில் செமீந்திவாராங்கள்

......வி.

திரியோதிரனை புனந்திரனுத்தரவுகேட்டதற்கு
மௌனமாய் தலையசைத்தது.

தேசத்தையாளுந் திரியோதிரன்முன்னேவந்து
போகவிடைதாருமென்று பொன்னடிக்குத்தெண்டனிட்டான்
வந்துபணுந்தவனை வாழ்த்திவிடைதாராமல்
வாரியெடுக்காமல் வண்ணமுடிவைக்காமல்
மகுடமுடிசைக்க மௌனமாய்த்தானிருந்தான்
முத்துமுடியசைக்கி மெத்தெனவேதானிருந்தான்
பாருமுடியான் பராமுகமாய்த்தானிருந்தான்
போரஞ்சாமன்னர் புனந்திரராசாவும்
ஆகட்டுமென்றுசொல்லி ஆணைகர்சொல்லலுற்றார்
படிபடியென்றுசொல்லி படிந்தது அவ்வானை
முடிக்கமபம்தட்டி முதுகின்மேல்கையைவைத்து
கைத்தலத்தைத்தட்டிக் கறுத்தானையேறினன்

புனந்திரன் பிரயாணப்பட்டுவருகிறது.

மத்தகசத்தைத்தட்டி மதயானையேறினன்
அம்மானுந்தானும் மதயானையேறினர்
மாமாவுநதானும் மதயானையேறினர்
சிலமன்னரெல்லோரும் திடுக்கிட்டெழுந்திருந்து
சரியானையேறினர் தன்னோடொத்தராசாக்கள்
முன்னானையேறினர் மூன்றுலட்சம்ராசாக்கள்
பின்னானையேறினர் பேருலகராசாக்கள்
முன்னைமுரசெடுத்து முன்னானைமேல்போட்டார்
பின்னைமுரசெடுத்து பின்னானைமேல்போட்டார்
சிலமன்னரெல்லோரும் தேரின்மேலேறினர்கள்
பலமன்னரெல்லோரும் பல்லக்குயேறினர்கள்
குலமன்னரெல்லோரும் குதிரையின்மேலேறினர்கள்
அழகானமன்னரெல்லாம் ஆனைமேலேறினர்கள்
பட்டர்புலவர் பதினெட்டுமந்திரிகள்
சித்தர்புலவர் சிறப்பானமந்திரிகள்
சிங்கங்காடிபுலி சேரமுழங்கினர்
யானைகரடிபுலி யருகில்வந்துமுழக்கினர்
அவரவர்கள்வாகனத்தில் அவரவர்களேறினர்
ஏறினபோதே யெடுத்தார்நெடுங்குடைகள்
முத்துக்குடைகள் முழுவயிரப்பொற்குடையும்
தங்கக்குடையாம் தவளநெடுங்குடையாம்

சிவசங்கராவென்றுசொல்லி தேரின்மேலேறினன்
ஒரு அக்ரோணிசேனையுடன் உத்தமனும்வாரானே
சிலமன்னரெல்லாம் தேரின்மேலேறினர்
பலமன்னரெல்லாரும் பல்லக்கிலேறினர்கள்
தன்றேடொத்தராசாக்கள் யழகானையேறினர்
அழகானையேறினர் ஐந்துலட்சம்ராசாக்கள்

குடையின் சிறப்பு.

ஏறினபோதே யெடுத்தார்நெடுங்குடைகள்
முத்துக்குடையாம் முழுவைரப்போர்க்குடையாம்
தங்கக்குடையாம் தவளநெடுங்குடையாம்
பச்சைக்குடையாம பவளநெடுங்குடையாம்
எடுத்துநிறைத்தார்கள் என்றுபிரங்கோடி
சுத்திநிறைத்தார்கள் சூரியனைக்கண்மறைக்க
பக்கம்நிறைநதார்கள் பகவானைக்கண்மறைக்க
ஒற்றைக்குடைநடுவில் வாரானேவீரியனும்
காஞ்சிநாடாளுங் கர்ணசிகாமணியும்
வெல்புருவக்கன்றுமவம் விஸ்வகேதுவாரேனென்று

விஸ்வகேது விருதுமுழக்கினது.

விஸ்வகேதுவாரேனென்று விருதுமுழக்கிவிட்டான்
சன்னைக்கிலக்கேனென்று ஆதிரேன்நாரைசின்னம்
ரணங்கள்ரணப்கனென்று ரணபேரியடிபடுது
சன்னைசன்னையென்றுசொல்லி சன்னைபேரியடிபடுது
வெற்றிவெற்றியென்றுசொல்லி வெற்றிகேரடிபடுது
நடந்தானேவிஸ்வகேது நாலுதிக்குந்தானதிர
போரஞ்சாமன்னர் புனந்திரராசாவும
வந்துவளைந்தானே வல்லிடிபோல்விஸ்வகேது
போரஞ்சாமன்னர் புனந்திரனைத்தான்பார்த்து
கட்டழகன்விஸ்வகேது காளையறகேதுரைப்பான்
ஆரடாமன்னவனே அறிவுகெட்டபாதகனே
எந்தவூர்சன்னைபண்ணி யிந்தவூரசெயிக்கவந்தாய்
எந்தவூர்வெற்றிகொண்டு யிந்தவூரகெலிக்கவந்தாய்
நில்லடாமன்னவனே நிமிஷத்தில்வென்றிடுவேன்
வாளாலுயிர்பிளந்து வலலுயிரைக்கொள்ளைகொண்டு
எமனுலகுதேடி யிப்போதனுப்பிடுவேன்
நமனுலகத்துக்கு நானேயனுப்பிடுவேன்
என்றுமவன்வில் லெடுத்தா னித்திலங்குபூமுடியான்

புணந்திரனுக்கும் வில்லவகேதுவுக்கும் யுத்தம்

வில்லைக்குணத்தொனித்து விட்டானொருபாணம்
விட்டானொருபாணம் விண்ணதிரமண்ணதிர
மண்ணதிர விண்குலுங்க மாற்றான்படைநடுங்க
எதிரிதிடுக்கிடவே யெல்லையதிர்ந்துவிழ
இப்பெரியபிடியை யிந்திரனார்தான்பார்த்து
இவனார்காண்மூளியென்று ஆணழகனெச்சரித்து
வில்லெடுத்துநாரிபூட்டி வில்லைக்குணத்தொனித்து
வில்லைக்குணத்தொனித்து விட்டான்சரபாணம்
விட்டான்சரபாணம் விண்ணதிரமண்குலுங்க
விண்ணதிரமண்குலுங்க மாற்றான்திடுக்கிடவே
மாற்றான்திடுக்கிடவே மறுமன்னர்கொக்கரிக்க
எதிரிதிடுக்கிடவே பிடிமன்னர்கொக்கரிக்க
இப்படிக்குசண்டைபண்ணி ருநிலத்துராசாக்கள்
இவருடையசண்டைகளில் தும்பிப்பறக்காது
குருவிபறக்காது கோட்டானும்நாடாது
ஆகாயவீதியெல்லாம் ஆணழகர்பந்தலிட்டார்
பாலாளலோகமெல்லாம் பாணத்தால்பந்தலிட்டார்
அம்புவருமவிதங்கள் ஆற்கமுடிபோகாது
பாணம்வரும்விதங்கள் பார்க்கமுடிபோகாது
கோடானகோடியுண்டு கொற்றவர்கள்பாணமது
கண்டுமுடியாது கணக்கிலடங்காது
சொல்லமுடியாது சுந்தரனார்பாணமது
ஒருவர்விடும்பாணம் ஒருவர்விலக்கிடுவார்
வேல்புருவங்கண்ணனும் வில்லவகேதுபாணம்விட்டான்
போரஞ்சாமன்னர் புணந்திரனார்முன்னேவந்து
மல்லிகைப்பூவாய் வணங்குவதுபாணமது
போரஞ்சாமன்னர் புணந்திரனார்பாணம்விட்டார்
மல்லிகைப்பூவாம வணங்குதவர்பாதம்
வேல்புருவங்கண்ணனும் வில்லவகேதுபாணம்விட்டார்
வந்துவணங்குது மன்னவர்பாணங்கள்

புணந்திரன் அம்மான் பொன்னுமலைநாடனுக்குரைப்பது.

போரஞ்சாமன்னர் புணந்திரனுந்தார்த்து
பொன்னுமலைநாடனும் அண்ணர்முகம்நோக்கி
போரஞ்சாமன்னர் புணந்திரனுக்கேதுசொல்வார்
அவனவிடும்பாணமெல்லாம் ஐயாவேவணங்குதுகாண்

கான்விடும்பாணமெல்லாம் அவனைவணங்குது
எதுகருமம் எனக்கறியச்சொல்லுமென்றார்

பொன்னுமலைநாடான் சொல்வது.

பொன்னுமலைநாடானும் அண்ணைஎடுத்துரைப்பார்
அவனூரும்பேரும் அதிசயங்கள்கேளுமென்றார்
நாடும்புதுமைகளும் ராசனுடதன்பேரும்
அத்தனையுங்கேட்டால் தெரியுங்காணழகா
என்றுமலருரைக்க இந்திரரும்தான்கேட்டு
ஆர்காணும்ராசாவே ஆனலழகுமன்னா
ஊரென்னபேரென்ன வுத்தமனேசொல்லுமென்றார்
உன்னைப்பெற்றதந்தையர் பேருமாயுமென்றானே
வேல்புருவங்கண்ணான் விஸ்வகேதுதான்கேட்டு
போகேட்டுவேர்பிந்தி வந்தீரோமன்னவரே
உன்னை-சண்டையன்னிநான்கெலித்து சவுரியங்காண்பித்து
என்-தேருக்கால்தன்னுடனே சேர்த்துநானுன்னைகட்டி
என்-ரதத்தின்கால்தன்னுடனே வுன்னைகட்டிபோகையிலே
அப்போதுநாமுரைப்பே னடையாளங்கேளுமென்றார்
அந்தவிசேஷம் அதுகேட்டுஇந்திரரும்
எடுத்தானேவில்லதனை ஏழுலகந்தத்தளிக்க

புனந்திரன் பாணம்விட்டது.

அண்டரண்டங்காணதிர ஆகாயம்அற்றுவிழ
விட்டான்சரபாணம் மேனியெல்லாந்தான்மறைய
மற்றுமொருகணை பருகணையைதான்தொடுத்தான்
வேல்புருவங்கண்ணானும் விஸ்வகேதுதான்பார்த்து
படபடென்றுபற்கடித்துப் பதறியங்கேவில்லெடுத்தான்
வில்லைக்குணத்தொனித்து வீரவனவன்வில்லெடுத்தான்
விட்டான்சரபாணம் மேனியெல்லாந்தானதிர
இருதரத்தார்பாணமது எண்ணமுடியாது
தும்பிபறக்கிறது சூரியனைக்கப்புறது
கருந்தூளுஞ்செந்தூளுங் கலந்துபறக்கிறது
இப்படிக்காசண்டையன்றோ இருதரத்துராசாக்கள்
காஞ்சிநாடானுங் கர்ணர்பெருமாளும்

காவலர்பிள்ளைகளிடம்வருகிறது.

அம்பலத்துவாசல்விட்டு ஆனைமுகன்தானெழுந்து
அழுதுவண்ணப்போமோனென்று ஆனைமுகன்வாராரனே
சண்டைசண்டையென்றுசொல்லி சண்டைகராடிபடுது
ரணங்கள்ரணங்கள்என்று ரணபேரியடிபடுது
உத்துத்துக்கேட்டாரே உத்தமனார்கருணராசன்

எவ்வுலகாராசாக்கள் இங்கேவந்தார்சண்டைசெய்ய
ஆளப்பெருஞ்சேவகரை யனுப்பியவர்பாருமென்றார்
தூதுவர்களோடிவந்து துரிதமுடன்கண்டார்கள்
இருதரத்துசேனைகளும் இந்திரராசாவும்
காஞ்சிநாடாளுங் கருணரிடபுத்திரனும்
இவர்களுடன்சண்டையென்று எழுந்துமிகநடந்து
காஞ்சிநாடாளுங் கருணருக்குதெண்டனிட்டு
உந்தன்குமாரனும் ஒளிவுள்ளயிந்திரனும்
விஸ்வகேதுராசாவும் விஜையனுடபுத்திரனும்
இவருடன்சண்டையென்று இணைகடகைக்கைதொழுதார்
காஞ்சிநாடாளுங் காணரவர்கேட்டு
சிந்தைகலங்கி திடுக்கிட்டுமெய்மறந்து
இவனாரவனார் இருதரத்துசேனைகளும்
என்றுமனதிலெண்ணி எழுந்திருந்துஓடிவந்து
யுத்தமுகந்தனிலே வந்துநின்றாருத்தமரும்
போரஞ்சாமன்னர் புணர்திருந்தான்பார்த்து

புணர்திரன் கர்ணரைக்காணுகிறது.

யானைவிட்டுக்கீழிறங்கி ஆனந்தவாழ்மார்பன
பூவும்புதுமலரும் பொன்னறுகுஅட்சதையும்
பொன்னீருஞ்சொப்பிலே பன்னீருந்தானெடுத்து
காஞ்சிநாடபளுங் கர்ணருக்குமுன்னேவந்து
பன்னீரால்காலலம்பி பட்டாலடிதுவட்டி
கொண்டுவந்தபூமலரை குபுகுபென்றுதான்சொரிந்து
முக்கால்வலம்வந்து முடிவணங்கிதெண்டனிட்டு
நாற்கால்வலம்வந்து நமஸ்கரித்துதெண்டனிட்டு
தெண்டனிட்டமன்னவரைக் கண்டல்லோசீர்கர்ணர்
வாரியெடுத்து மடிமேலேகொண்டணைத்து
உச்சிமுகந்துபிள்ளை உள்ளங்கால்முத்தமிட்டு
பக்கந்தடவி பவளவாய்முத்தமிட்டு
இப்படியாய்ப்பேசி இருக்கின்றவேளையிலே

விஸ்வகேதுதகப்பனாகிய கருணரைக்காண்கிறது.

தேரேறிசண்டைபண்ணும் விஸ்வகேதுதான்பார்த்து
தன்னைப்பெற்றதந்தை கருணரங்கேவந்ததுவும்
அவர்-யானைவிட்டுக்கீழிரங்கி ஆணழகன்வந்ததுவும்
புண்ணியனார்பாதம் பூபோட்டுதொழுததுவும்
வாரியெடுத்துமல்லோ மார்போடணைத்ததும்
அத்தனையுங்கண்டானே ஆணழகன்விஸ்வகேது
தேனைவிட்டுகீழிறங்கி துருசாகத்தானடந்து
பூவும்புதுமலரும் பொன்னறுகுஅட்சதையும்
பொன்னீருஞ்செம்பிலே பன்னீருங்கொண்டுவந்து

பன்னீர்காலலம்பி பட்டாலடிதுவட்டி
கொண்டுவந்தபூமலரை குபுகுபென்றுதான்சொரிந்தான்
முக்கால்வலம்வந்து முடிவணங்கிதெண்டனிட்டான்
நாற்கால்வலம்வநது நமஸ்கரித்துதெண்டனிட்டான்
காஞ்சிநாடாளுங் கருணாரவர்பார்த்து
வந்துபணிந்தவனை கண்டுமனமகிழ்ந்து
வாயாரவாழ்த்தி மனதுமிகக்குளிர்ந்து
மைந்தனைக்கொஞ்சி மடிமேலேகொண்டணைத்து
இருவரையுங்கொஞ்சி யிருதொடையில்கொண்டணைத்தார்
அந்தச்சமையத்தில் விஸ்வகேதுயேதுசொல்வான்
தன்னையர்முகம்நோக்கி ஆணழகர்ஏதுசொல்வார்
மாத்தானைக்கொண்டு மடிமேலணைத்தீரே
சண்டைபண்ணவந்தவனைத் தூக்கிமடியில்வைத்தீர்
இவன் ஆர்காணுமையாவே அடியேனுக்குரையுமென்றான்
காஞ்சிநாடாளும் கர்ணரவர்கேட்டு

கருணர்தன்பிள்ளையாகிய விஸ்வகேதுக்கு தன்னுடைய
கோத்திரவரலாறு கூறல்,

சோணுதுமாதவக்குக் குந்தியம்மாள்என்னாச்சி
அறியாதநாளையில் ஆச்சியரும்என்னைபெற்றாள்
தெரியாதகாலத்திலே தேவியரும்யென்னைபெற்றாள்
கன்டார்நகைப்பாரென்று கட்டழகியென்னாச்சி
பேழைதனிலேவைத்து ஆற்றில்அலையவிட்டாள்
தேசத்தழகன் திரியோதிரன்தான்பார்த்து
என்னைவளர்த்தவரும் என்னைப்பட்டங்கட்டினான்காண்
இந்தபெருமையா யிருந்திட்டேன்நானுமப்போ
சோணுதமாதவனுக் குந்தியம்மாளாச்சியரும்
ஐவர்பஞ்சபாண்டவர்கள் ஆணழகர்தம்பியென்று
ஆளாந்தவாழ்மார்பர் அறியாமல்நானிருந்தேன்
இப்போதுயெந்தனுக்கு எல்லாம்வெளிராச்சு
தக்கப்புகழுடைய தருமரவருன்தாதை
வெற்றிமதயானை வீமரவருன்தாதை
காண்டாவனமெரித்தக் காளையவருன்தாதை
நாமமுடியானும் நகுலனும்உன்தாதை
தாமமுடியானும் சகாதேவன்உன்தாதை
ஆனந்தமார்பாவுனக் காறுபோதாதையென்றான்
தோராவடிவழகி துரோபதைஉன்னாச்சி
சோரவளாநங்கை சுபத்திரையாள்உன்னாச்சி
மேகம்பயின்றெடுத்த மின்னொளியாளுன்னாச்சி
நாகம்பயின்றெடுத்த நாகக்கன்னிவுன்னாச்சி
பொற்கலசவாழ்முலையாள் போகவதிவுன்னாச்சி

பிறவாமுடிதரித்த பெண்பெருமாளுன்ணார்த்தி
பங்கயஞ்சீர்கண்ணாள் பவளக்கொடி உன்ணாச்சி
போதேவருந்தடங்கு பொன்னுருகிதன்னுடனே
ஈரலாப்பூந்தாரர் எட்டுப்போராச்சியென்றான்
இவர்யார்காணும்என்று கேட்டீரே ஆணழகா

கருணர்விஸ்வகேதுவுக்குப் புனந்திரன்வரலாறு சொல்லல்.

யாருமல்லாளந்தனுக்கு அழகானகன்மணியே
பாசுபதம்பேறுபெற்ற பார்த்தனுடபுத்திரர்காண்
காண்டாவனமெரித்த காளைபுடபுத்திரன்காண்
அழகியசீர்கொம்பனையாள் அல்லியுடபுத்திரன்காண்
தோகைமயிலனையாள் துற்சடையாள்மருமகன்காண்
கருநீலம்பூங்குழலாள் கலந்தாரிநாயகன்காண்
அஞ்சுவயதுடைய அருச்சுனற்குதந்தையிவன்
நூலால்நடுந்திரலார் நூற்றொருவர்புத்திரன்காண்
உந்தனுக்குதம்பியென்று உரைத்தார்கருணராஜன்
அந்தஉரைகேட்டு ஆனந்தவாழ்மார்பன்
போரஞ்சாமன்னர் புனந்திரருந்தானெழுந்து
பூவும்புதுமலரும் பொன்னறுகு அட்சதையும்
பொன்னீருஞ்சொம்பிலே பன்னீருங்கொண்டுவந்து
கொண்டுவந்தபூமலரை குபுகுமென்றுதான்சொரிந்தான்
முக்கால்வலம்வந்து முடிவணங்கிதெண்டனிட்டான்
அப்போதுவிஸ்வகேது ஆணழகனேதுசொல்வான்

விஸ்வகேது புனந்திரனை ஆசீர்வதிக்கிறது.

வந்துபணிந்தவனைக் கண்டுமனமகிழ்ந்து
வாழ்வீர்தளந்திடுவீர் வர்த்திருப்பீருத்திருப்பீர்
நிற்பீசிலைதரிப்பீர் நீராசையாண்டிடுவீர்
கற்பதித்ததூண்போலே கலங்காதாசாள்ர்
விற்பதித்ததூண்போல் விளங்கஅரசாள்வீர்
மாரனைக்கொன்று மறுபட்டமாண்டிடுவீர்
என்னைப்பெறுவீர் எதிர்த்தார்முடிபெறுவீர்
பிள்ளைபெருவீர் பெருமாள்பதம்பெறுவீர்
போருக்குபோய்விடுவீர் பொழுதோடவென்றிடுவீர்
வென்றகளறியிலே வீரபட்டங்கட்டிடுவீர்
[illegible]த்துவந்தார்பூமுடியை செண்டாட்டமாட்டிடுவீர்
பகைத்துவந்தார்பூமுடியைப் பந்தாட்டமாட்டிடுவீர்
கன்னிகளைமாலையிட்டு காளைகளையீன்றிடுவீர்
மங்கையரைமாலையிட்டு மைந்தர்களையீன்றிடுவீர்
பெண்களைமாலையிட்டு பிள்ளைகளைப்பெற்றிடுவீர்
அத்திபுரமாள அரசாளஆண்பெறுவீர்
மதுராநகராள மைந்தர்களைப்பெற்றிடுவீர்

பதினாறும்பெற்று பெருவாழ்வுவாழ்ந்திடுவீர்
ஆலம்போலேதழைத்து அறுகுபோல்வேரோடி
மூங்கில்போல்சுற்றம் முசியாமலவாழ்ந்திடுவீர்
வாழ்வீர்காணென்று மனதாரவாழ்த்தினார்
வாழ்ந்திருப்பீரென்று மனதாரவாழ்த்தினார்
தம்பியைவாழ்த்தியல்லோ தார்வேந்தனேதுசொல்வான்
தம்பிதனஞ்சியனை சமர்த்துள்ளவீரியனை
அரண்மனைக்குவந்து அமுதுபொசியுமென்றான்

புனந்திரன் விஸ்வகேதுவுக்கு சொல்வது.

போரஞ்சாமன்னன் புனந்திரருந்தான்கேட்டு
அண்ணன்முகம்நோக்கி ஆணழகனேதுசொல்வான்
தமயன்முகம்நோக்கி தார்வேந்தனேதுசொல்வான்
இன்னம் மூன்றுநாளாற்பொழுது முடிமன்னராளுவது
நாலாறுள்நம்முது ஆததுகாண்ராச்சியங்கள்
மன்னர்பெருமைகளும் மறுமன்னர்சேவகமும்
க்ஷத்திரியன்பெருமைகளும் சேனைபேர்சேவகமும்
மூன்றுநாள்தன்னிலே சாயுதுகாண்அண்ணாவே
நூலால்கடுந்திரளார் நூற்றொருவர்பூமுடியும்
நூற்றொருவர்பூமுடியும் நூறுங்கஅடித்தபின்
தருணிதலையுடைத்து தாவெக்கர்போட்டபின்பு
நமதுதன்னை முடி தரிப்பு அதிலங்குபூமுடியே
போம்தவருக்கடங்கும் பொன்னுருவிளன்றுச்சி
நமதாச்சியரண்மனையில் எல்லவருங்கூடி
ஒத்தக்கலது பொசிப்போங்காண்மன்னவரே
கூடக்கலந்து பொசிப்போங்காண்மன்னவரே
இப்போ மாற்றான்தன்வாசலிலே பாலமுர்தமுண்ணலாமோ
எதிரியாரன்மனையில் இருந்தமுர்தமுண்ணலாமோ
என்றுவுரைத்தானே யிந்திரராசாவும்
விஸ்வகேதுதான்கேட்டு மெத்தமனமகிழ்ந்து
இவர்களுங்கொஞ்சி யிருந்தார்களந்நேரம்
போரஞ்சாமன்னர் புனத்திரராசாவும்

கருணர் புனந்திரனைப்பார்த்துச் சொல்வது.

கருணாரவாபார்த்தும் கட்டழகா ஏதுசொல்வார்
காமதஞ்சுபோதம்பியரும் அவருடையபுத்திரரும்
மன்னவாகள்ளுக்குபேரும் மன்னர்பஞ்சபாண்டவரும்
கோணுதமாதவத்துக் குந்தியம்மாள்என்தாயும்
யானும்எனபுத்திரனும் என்னுடையதேவியரும்
ஒக்கக்கலந்து ஒருசலத்திலுண்போமோ
கூடயிருந்துநாம் கூட்டமுதுண்போமோ
ஐவர்பஞ்சபாண்டவர்கள் அரசாளுங்கோலமதை

என்-கண்ணாலேகண்டு களிப்பேனேகட்டழகா
மனதாரப்பார்த்து மகிழ்வேனேமன்னவனே
என்றுமவருரைத்து ஏங்கிமனந்தளர்ந்து
இத்தித்துமன்னன் இருகண்ணும்முத்துதிர்த்தான்
போரஞ்சாமன்னர் புனந்திரருந்தான்பார்த்து
ஐவர்பஞ்சபாண்டவரும் அவராளும்அரசுகளும்
மதுரைவளநாடும் வைகைப்பெரும்பதியும்
அத்திப்புரமும் அடங்கலும்உன்னுதுகாண்
அங்கவளநாடும் அடங்கலும்உன்னுதுகாண்
மன்னவர்பஞ்சவர்கள் வனமேதிரிந்திடட்டும்
ஐயாவேநீரிருநது அரசாளலாகாதோ
மன்னவரோநீரிருந்து வையகத்தையாளொணாதோ
காஞ்சிநாடாளுங் கருணர்பெருமாளும்
மன்னபஞ்சபாண்டவர்க்கு உடற்பிறப்புஎன்றாலே
உங்களுக்குமுன்பிறந்த உத்தமனார்என்றுசொன்னார்
காவலர்களைவர்களும் காடேதிரிவார்கள்
ஐயாவேநீரிருநது அரசாளலாகேதோ
நீரும்அவருமென நிஷ்டூரமேவேறுமுண்டோ
அண்டர்பதியாண்டால் ஆகாதேஐவருக்கும்
நீர்மன்னாபதியாண்டால் மனங்கொள்ளமாட்டாதோ
வந்துபதிசேரு மென்றுசொல்லித்தெண்டனிட்டான்

கருணர் புனந்திரனுக்குச் சொல்வது.

காஞ்சிநாடாளுங் கருணரவாகேட்டு
போரஞ்சாமன்னர் புனந்திரக்குஉதுசொல்வார்
அய்யாவேநீர்கேளும் அடியேனொருவார்த்தை
இந்திரரோநீர்கேளும் என்னுடையநல்வார்த்தை
காவலனாபஞ்சவர் கட்டழகர்ஐவருக்கும்
என் மாதாபயன்றெடுத்த மன்னவர்களைவருக்கும்
எநதனுடசேதி யெடுத்தொன்றுஞ்சொல்லாதீர்
காணருடசேதியவர் காதிலேயும்போடாதீர்
மன்னாபஞ்சபாண்டவாகள் என்வரலாறறிந்தாலே
ஐவாகளும்பூமிவிட்டுக் கானகத்தில்செல்வார்கள்
அவர்-தோணியநாளுந் துலைத்தார்வனந்தனிலே
அவா ஊழியுள்ளகாலமட்டும் உழன்றாவனநதனிலே
ஐவாபஞ்சபாண்டவரும் அரசாளவேணுமப்பா
நான்படவேணும்படவேணும் பார்த்தன்கையம்பாலே
போரஞ்சாமன்னா புனந்திரரோநீர்கேளும்
பாரதம்என்று படைபொருதும்வேளையிலே
பதினெட்டாம்நாளையிலே படைபொருதுஞ்சண்டையிலே

ஆடிப்பறக்கும் அமுர்தசமர்க்களத்தில்
தேடியுலாவுந் திரள்வேந்தாகூட்டத்திலே
பக்தயூகம்பிரித்து சண்டைபண்ணுவேளையிலே
ஆயனொருசாரதியாய் அருச்சுனன்தேரேறி
மாயனொருசாரதியாய் மச்சுரதமேறி
ஆனைலழகுமன்னன் அருச்சுனராசதுரை
வாளெடுத்துவில்லெடுத்து வளவுதடிகையெடுத்து
அருச்சுனன்தானும் அடுத்துமவன்சண்டைபண்ண
நாகக்கணைதொடுக்க நடுங்கியதுவொடிய
இருவரும்யுத்தம்பண்ணும் வேளையிலேயிந்திரரோ
அர்ச்சுனன்கைபாணம் அறுக்குமேஎன்தலையை
பார்த்தன்கையம்பதுதான் படுக்கென்றறுத்துவிடும்
பட்டுவிழுவேன் பார்த்தன்கையம்பாலே
அற்றுவிழுவேனன் அருச்சுனன்கையம்பாலே
கருணனைக்கொன்று விருதுபெற்றேனென்றுசொல்லி
அருச்சுனராசனவ ஹூதுவான்சங்கெடுத்து
அந்தத்தொனிகேட்டு என்னைச்சிருக்கியார்
என்னைச்சிருக்கியம்மாள் உன்னைற்சிஅல்லியரும்
அருச்சுனனுடபெண்டுகள் ஐந்நூறெண்டுஏழுபேரும்
ஐவர்பஞ்சபாண்டவரும் அவர்களுடதேவியரும்
அத்தனைபேரும் அடியனெதிரில்வந்து
என்னையெடுத்து அடக்கஞ்செய்ய வேணுங்காணிந்திரனே
போதேவருந்தடங்கும் பொனவனுருவிநாயகமும்
வேல்புருவங்கண்ணுறும் விஸ்வகேதுராசாவும்
இருவரையுந்தேடி இங்கேயழைக்கவேணும்
ஐவர்பஞ்சபாண்டவர்கள் அவர்களைக்காக்கவேணும்
தேசத்தையாளுந் திரியோதிரன்மாளிகையில்
என்தேவியும்புத்திரரும் இருக்கவேஆகாது
ஐவரிடஞ்சேர்ப்பேனென்று ஆணையிடுவீரிந்திரரோ
போரஞ்சாமன்னா புனந்திரருந்தான்கேட்டு

புனந்திரன் ஆயாசப்படுவது.

சிவசிவாவென்று செவிதனிலேகையைவைத்து
ஈயத்தைக்காய்ச்சி செவியில்விட்டாற்போல்
நாராசங்காய்ச்சி நடுச்செவியில்விட்டாற்போல்
சிந்தைகலங்கி திடுக்கிட்டுமெய்மறந்து
பிச்சைமுகங்கருகி பால்முகம்வேறுபட்டு
மன்னன்மனஞ்சலித்து மறுவார்த்தையெடுத்துரைப்பான்
ஐயாமுகம்நோக்கி ஆணழகன்ஏதுசொல்வான்
ஐயாவேகேளும் அடியேனொருவார்த்தை
நால்லர்கடுந்திரளார் நூற்றொருவர்பூமுடியை
நூற்றொருவர்பூமுடியை நொறுங்கஅடித்திடுவேன்

சருவிதலியைத் தவிப்பொழியாக்கிப்பேன்
தைலாட்டான் புழுவைத் தண்டாலடித்திடுவேன்
தங்கைமணவாளன் தறுதலையன் புழுவை
ஆனைநாக்கொள்ளியிலே அலைவாயெரித்திடுவேன்
வாய்திறந்துரைத்தால் வல்லமுடிசாய்ப்பேன்
ஐவர்பஞ்சபாண்டவரும் ஊராளுமல்லோ
ஒக்கவிருந்து அரசாளுமையாவே
காஞ்சிராடராளுக் கருணைசுவாகேட்டு

கருவர் புலந்திரனை ஆசீர்வதிப்பது

போர்ஞ்சாமன்னர புலந்திரனைதானெடுத்து
கட்டியணைத்துக் கனிவாயைமுத்தமிட்டு
என்னையா புலந்திரனே என்னமுதே மாணிக்கமே
கட்டிக்கரும்பே கணுவில்லா செங்கரும்பே
முத்துமுடிதரித்த முடிமன்னர் புத்திரனே
பொன்னின்முடிதரித்த புலந்திரராசனே
நீ சொன்னதுபோதாதோ நூற்றுவரை சாளனுபோ
பேசினதுபோதாதோ பெருலககளானுபோ
வாய்திறந்துசொன்னீர் மன்னாபெருமானும்
ஐவர்பஞ்சபாண்டவரும் அடியேனுக்கருந்தால்
அரசாள் பாவனைபோல் ஆச்சுதுகாணிந்திரரே
ஆண்மையுள்ளபுத்திரனே ஆனைமுகனிந்திரனே
என்-பேவியும்டனான்னையும் சேர்க்கிறேன்னென்றுசொல்லி
உன்றன்சிஅனையும் ஐவருடன்சேர்ப்பேனென்று
ஆனைக்கிங்காளும் ஆனைமுகராசமன்று
எல்லுமவருரைக்க எதுசொல்லாரிந்திரரும்
சிவசிவாவென்று திருச்செவியில்கையை வைத்து

புலந்திரன் ஆணைகூறுவது.

சோலைடலருடைய சொக்கர திருவாணை
ஆனைமகநுடைய அம்மன் திருவாணை
ஏழுலகுமாளுகின்ற எம்பெருமாளவராணை
ஆதிசிவனாணை ஆயமேல்தாளாணை
பரமசிவனாணை பார்வதியாள் தன்னாணை
கோனுதயாலத்துக் குந்தியம்மாள் தன்னாணை
ஐவர்பஞ்சபாண்டவர்கள் ஆனமுகர் தன்னாணை
தேவேந்திரன்மீதி வாளைபெரிதுகன்னா
தோரவத்தழகி துரோபதைதன்னாணை
போதேவந்திடக்கும் பொன்னுருவிமேலாணை
பிரமாழ்நிரதப் பெண்பெருமாள்மேலாணை
சோரவனசங்கை சுபத்திரையாள்மேலாணை
மெய்ப்பின்பெறித்த மின்னொளியாள்தன்னாணை

நாகம்பயின்பெற்ற சாகைக்கனிதன்னனே
அக்கினியிற்பெற்றெடுத்த பொக்கத்திதன்னனே
மகிமையுற்ற அல்லிமாகாதன்னனே
சொர்ணம்புராணப்பெற்ற செல்வதியாள்தன்னனே
அந்தவைகுடைய அருச்சனராசேனை
மைத்துனர் அருச்சனராசமன்னவராசேனை
அத்தனையும் அண்ணனையும் ஆளிட்டுச்சோர்த்திடுவேன்
பாவேசமுடனிருந்து பாதுமுடன்சேர்த்திடுவேன்
அந்தாதி அந்தாதி ஆனைமுகா அந்தாதி
எதுக்கும் அந்தாதி என்னுடைய அய்யாவே
ஆணையிட்டுநீசொல்லி ஆனைமுகன்கொண்டனிட்டா
காந்தாரிகாட்டாருங் கருணைரவர்பார்த்து
ஆணையிட்டேன்தோஷமில்லை அனந்தவாழ்மாயா
நாட்டிலிட்டேன்தோஷமில்லை உத்தமராபுத்திரரே
பொரசவுரமன்னா புனைத்திரசராசே
ஆணையிட்டேனென்றவுடன் ஆனைமுகனே நீசொல்வான்
போகவிடைதாருமென்று சொன்னபடி கூறினன்கொண்டனிட்டான்
விடைதருவேன் நீயொருவன் வரைக்கும்பெருமிதராவம்
காந்தாரிகாடாருங் கன்னரவாகேட்டு
மதுரைக்கும் பாரீச மன்னா பெருமானே
ஆறுயிரம்பாண்டியருக்கும் அல்லிமலாநாயகிக்கும்
என் தேவமருமைப்பெண்ணா செல்வனுபுத்திரனா
அடிமைப்பெற்ற மன்னவரு நாமெல்லா
போருக்குச்சாமன்னா புனைத்திரர்கான்கேட்டு
அப்படிக்கேகல்லவென்றான் ஆனைவாழ்மாயன்

கர்னர் சொல்வது.

காந்திசெடாருங் கருணைசெடுத்துரைப்பார்
பருவமதையானைப் பஞ்சவர்களை வருக்கும
உருவமதயானை வுத்தமாகளை வருக்கும
பன்னோதியொன்றும் உரையாதே ஆனைமுகா
என்னவொன்றும் முறையாதே மன்னவனே
தோளுக்குஞ்சொன்னதுபோல ஆனையஞ்சென்றிடுவார
மன்னவர்குச்சொன்னதுபோல வெம்சமரைநடத்திடுவார
இன்னையரசாள வைத்துமவாநடப்பார
வீமன்சபதம் முடியாதுமன்னவனே
அருச்சனராசன்சபதம் முடியாதுமன்னவனே
இரட்டைகளாதன்சபதம் முடியாதுமன்னவனே
பாஞ்சாலன்பெற்றெடுத்த பத்தினியாள் துரௌபதையாள்
மாதுசபதம் முடியாதுமன்னவனே
மாதுமயிர்முடிக்க மேதினிங்கான்மன்னவனே

கோதிகுழல்முடிக்க வேணுங்காண்கொற்றவரே
ஒன்றுமுரையாதே வித்தடாகள்புத்திரரே
என்சேதியொன்றும் எடுத்துரைக்கவேண்டாங்காண்
இங்கேநீவந்ததுவும் இவர்களைக்கண்டதுவும்
திரியனுடனேகச் சபதங்கள்பேசினதுவும்
[illegible]
போருஞ்சாமன்னா புனந்திரருந்தான்கேட்டு
[illegible]
வந்துமிகப்போதாச்சு எந்தனிட அய்யாவே
[illegible]
காஞ்சிநாடாளுங் கருணைவர்பார்த்து

புனந்திரன் கானரைவிடைகேட்பது

போய்வாருமிந்திரரே புத்திபுள்ளகண்மணியே
[illegible]
கட்டியணைத்துக் கனிவாயைமுத்தமுட்டு
போய்வாருமென்று பொருந்தவிடைகொடுத்தார்
விடைபெற்றெழுந்தார் வேந்தர்பெருமானும்
[illegible]
[illegible]
[illegible]
பொன்னுமலைநாடாளும் அன்னைவுங்கைதொழுதார்
[illegible]
காஞ்சிநாடாளுங் கருணைபெருமாளும்
[illegible]
[illegible]
[illegible]

புனந்திரன் சேனையுடன்புறப்பட்டது.

போருஞ்சாமன்னர் புனந்திரராசாவும்
யானையறுகில்வந்து ஆனந்தவாழ்மாயன்
வென்றுகெலித்தோமே வேந்தர்பெருமானே
பாசுபதம்பேறுபெற்று பார்த்தர்பெருமானே
படிபடியென்றுன் படிந்தது அவ்வானை
முகக்கயபந்தட்டி முதுகின்மேல்காலைவைத்து
கைத்தலத்தைதட்டிக் கறுத்தானையேறினான்
[illegible]
[illegible]
மாமனுந்தானுமாய் மதவானையேறினா
[illegible]
மூன்றானைஏறினா மூன்றுலட்சம்ராசக்கள்
சரியானைஏறினா சரியோத்தராசாக்கள்

பக்கரிவேயற்றோர் பத்துலட்சம்ராசாக்கள்
அநுகாளிமேயறிறா அஞ்சுலட்சம்ராசாக்கள்
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
பலமன்னரெல்லாரும் பல்லக்கிலேறினார்
அழகானமல்லரெல்லாம் அழகாயேறினார்
பட்டாபுலவர் பதினெட்டுமந்திரியும்
சித்தர்புலவா இலருசமந்திரிகள்
சிங்கங்கரடிபுலிச் சேரமுழங்கிவர
யாளிபுலிகரடி யுறுமிமுழங்கிவர
தங்கள் தங்கள்வாகனத்தேறி [illegible]

குடையின்பெருமை

எதிரேபோதே எடுத்தார் [illegible] குடைகள்
முத்துக்குடையாம் [illegible] பொற்குடையாம்
தங்கக்குடையாம் [illegible] குடையாம்
பட்டுக்குடையாம் பவள[illegible]குடையாம்
இரத்தினக்குடையாம் [illegible]
வச்சிரக்குடையாம் [illegible] பொற்குடையாம்
எடுத்தாக் [illegible] குடைகள்
[illegible]
[illegible]
ஒத்தக்குடைகள் [illegible]
பக்சக்கரக்குடை [illegible]
முத்துக்குடைபிடிக்க [illegible]
இரத்தினக்குடைபிடிக்க [illegible]
பச்சைக்குடைபிடிக்க [illegible]

புனந்திரன் இரிபோதிரனோ [illegible]

[illegible]

எதிரேராசனை எடுத்தாக [illegible]
[illegible] உலகெங்கும் [illegible]
[illegible]
செம்பொன்றன் [illegible]
தங்கத்திருக்கா [illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] அழுத்தான் [illegible]
[illegible] இவனுகைபிலே

புனந்திரன் அத்திபுரத்துவீதியிலே வருகிறபோது சனங்கள்பார்த்து பேசிக்கொள்வது.

அங்கிருக்குமங்கையர்கள் அணியிழைமாரேதுசொல்வார்
கொம்பனைமாரெல்லாருங்கூடியொன்றாய்ப்பேசிக்கொள்வார்
மாயன்மகன்காண் மகாதேவன்புத்திரன்காண்
சிதைமருமகன்காண் தேவருடபுத்திரன்காண
பாண்டியற்குபேரனிவன் பஞ்சவற்குபுத்திரன்காண்
ஆயிரம்பாண்டியற்கு அருமையுள்ளபேரனிவன்
ஐவருக்கும் நூற்றுவற்கும் அனதொருபுத்திரன்காண்
கருநீலப்பூங்குழலாள் கலந்தாரிநாயகன்டி
தோகைமயிலனையாள் துற்சடையாள்மருமகன்டி
நூலால்கடுந்திரளாற் நூற்றொருவர்மன்னவற்கும்
பாட்டனார்வீஷ்மருக்கும் பாரறியதுரோணருக்கும்
சிற்றப்பாவிதுரருக்குஞ் சீருள்காந்தையற்கும்
காஞ்சிநாடாளுங் கருணர்பெருமாளுக்கும்
சாமத்துரோகி சகுனியவன்தோழனுக்கும்
மாமன்சகுனியற்கும் மற்றுமுள்ளமன்னவற்கும்
அம்மான்சகுனி யவன்தோழனானவற்கும்
தங்கைமணவாளவன் தறுதலையானவற்கும்
அங்குள்ளசேனையற்கு அதிகமாய்த்தான்பேசி
எதிராயிருந்துமல்லோ எத்திலங்கப்பூமுடியான்
சரியாயிருந்துமல்லோசாதித்தான்மன்னரகளை
வல்லமையுள்ளப் புருஷனிவன்தாண்டி
இவனழகுஞ்சவுரியமும் ஆண்மைகளுமுள்ளவன்டி
கலந்தாரிநாயகிக்கு வாய்த்தமணவாளன்
தோகைமயிலனையாள் துற்சடையாள்பெற்றெடுத்த
எலங்குழலாளுக்கு ஏற்றதொருமணவாளன்
அவரழகுக்கேற்றாப்போல் அருச்சுனாபெற்றெடுத்தார்
இவரழகுக்கொப்பானோர் இந்திரருமீடல்லவே
மன்னர்அழகுக்கு மன்மதனுமீடல்லவே
இப்படியாகச் சொல்லியல்லவோயிருந்தார்
கொம்பனைமாரெல்லாருங் கூட்டமாய்ப்பேசினார்கள்
இப்படியாய்ச்சொல்லி இருக்கின்றவேளையிலே

புனந்திரன் வேறுவீதிவருகிறது.

போரஞ்சாமன்னர் புனந்திரராசாவும்
அவ்வீதிவீதி நடந்தார்அழகாக
மற்றுமொருவீதியிலே வாரானேமன்னவனும்
அந்ததெருவீதியிலே வாழுகின்றமன்னரெல்லாம்
இந்திரனார்தன்முகத்தை ஏறெடுத்துப்பார்த்துமல்லோ

அருச்சுனனார்பெற்றபிள்ளை அழகுடையானென்பார்கள்
ஐவருடபுத்திரன் இவன் ஆண்மையுள்ளானென்பார்கள்
ஐவரழகுமிங்கே பெற்றுவந்தானென்பார்கள்
தூதுரைத்துமீண்டானே சுந்திரப்பூமுடியாள்
எதிராகவாதாடி வென்றான்தானென்பார்கள்
இப்படியாகச்சொல்லி யிருக்கின்றவேளையிலே
போரஞ்சாமன்னர் புனந்திரனார் வீரியரும்
அந்தத்தெருதாண்டி வாராரேயாஅழகன்
மற்றுமொருவிதியிலே மன்னன்நடக்கையிலே
அந்தத்தெருவுதனில் வாழும்பெண்ணானவர்கள்

புனந்திரனைப்பார்த்து சனங்கள்பேசுகிறது:

மாயனது மருமகனை மதிலேறிப்பார்ப்பார்கள்
எட்டிநடைநடந்துக் கிட்டவந்துபார்ப்பார்கள்
உயர்ந்தமதிலேறி வுற்றுற்றுப்பார்ப்பார்கள்
சன்னல்கதவைத் திறந்துமெள்ளப்பார்ப்பார்கள்
ஆணழகுமன்னன் அருச்சுனராசனவன்
அவனழகுக்கேற்றாப்போல் ஆண்பிள்ளை பெற்றானென்றார்
போரஞ்சாமன்னர் புனந்திரவீரியரும்
தன்னழகுக்கேற்றாப்போல் நான்பெற்றாபிள்ளையென்றார்
இப்படியாய்ப்பேசி யிருக்கின்றவேளையிலே
போரஞ்சாமன்னர் புனந்திரராசாவும்
அவ்வீதிவீதி நடந்தார் அழகாக
தெற்குத்தெருதாண்டி தேரோடும்வீதிவிட்டு
சித்திரவீதி தெருவும்பலதாண்டி
அங்காடிவீதிகளும் அரண்மனையுந்தாண்டி
கடைக்கடைத்தெருவும் கருமார்வீதிவிட்டு
அத்திபுரபட்டணந் தாண்டியந்தவாணழகன்
வனமாய்வனம்நுழைந்து வாரானே தென்மதுரை

புனந்திரன் மதுரைவருகிறது.

ஓங்கிவளர்ந்ததொரு மூங்கில்வனந்தாண்டி
இருந்தவனந்தாண்டி எலுமிச்சந்தோப்புவிட்டு
சிங்கமுலாகொடுக்குஞ் கருநாய்வனந்தாண்டி
கோங்கும்பெருத்தவனங் கொன்றைக்காபூத்தவனம்
மாதுளிமுல்லைப் பருத்தவனந்தாண்டி
இஞ்சிவனந்தாண்டி எலுமிச்சந்தோப்புவிட்டு
மஞ்சள்வனந்தாண்டி மாதளந்தோப்புவிட்டு
தேசத்தையாளுந் திரியோதிரன்தோப்புவிட்டு
காஞ்சிகாடாளுங் கருணரிடகாவல்விட்டு
ஐவர்பஞ்சபாண்டவர்கள் ஆண்டபெருஞ்சோலைவிட்டு

நாலிரும் [illegible]
[illegible]

[illegible]

[illegible]

வேந்தர்பெருமாள் வெளிமண்டபத்தில் [illegible]
ஐவரையரும் ஆழிவுசந்தாரும்
வேந்தர்பெருமாளும் [illegible]
விராடபுரம்விட்டல்லோ வீற்றிருந்தார்மண்டபத்தில்
போர்ஞ்சாமன்னர் புணந்திரராசாவும்
[illegible]
[illegible]
வாளுருவிக்கைப்பிடித்து வல்லயத்தைத்தோ [illegible]
ஓடமலர்க்கண்ணனும் உள்ளே நுழைந்தான்காண்
பூவும்புதுமலரும் பொன்னுருகு அட்சதையும்
அட்சதையும்பூபோட்டு [illegible]
[illegible]
[illegible]
வாயாரவாழ்த்தி மனதுபெரிதுகந்த
[illegible]
[illegible]
ஐவரையும ஆழிவுசந்தாரும்
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
அங்கேநடந்த அதிசயமுள்ளதுவும்
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
அத்தனையுஞ்சொன்னபோ [illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

கட்டியணைத்துக் கனிவாயைமுத்தமிட்டு
திஷ்டிகழித்துமல்லோ சீரானபுனந்திரற்கு
போய்வாருமென்று பொருந்தவிடைகொடுத்தாந்
விடைபெற்றெழுந்திருந்தார் வேந்தர்பெருமாளும்

புனந்திரன் மதுரையில் சின்னமூதுவது,

படிபடியென்றான் படிந்தது அவ்வானை
முகக்கம்பந்தட்டி முதுகின்மேல்காலைவைத்து
மத்தகத்தைதட்டி மதயானையேறினான்
கைத்தலத்தைதட்டி கறுத்தானையேறினான்
அம்மானு அத்தானு அழகானையேறினான்
மாமனுந்தானு மதவானையேறினார்
வந்தவந்தபேர்களெல்லாம் வாகனஞ்சென்றேறினார்
அவ்வீதிவீதிநடந்தார் அழகாக
மாலைமுடியானும் மதுரைக்குவந்தானே
ஊதினான்சின்னம் உலகேழுலகதிர
ஊதினான்காளை வுலகுதலைதுமுக்க
வென்றுவந்தேனென்றுசொல்லி விருதெடுத்தூதினான்
செயம்பெற்றுவந்தேனென்று சின்னமெடுத்தூதினா
ஊதினசின்னத்தொனி கேட்டாளுத்தமியும்
பிறவாமுடிதரித்தப் பெண்பெருமாள்தான்பார்த்து

அல்லிதாதிகளைவிட்டுப் புனந்திரற்கு
திருஷ்டிகழிக்கிறது.

தாமக்குழலாளை தாதியரைத்தான்பார்த்து
தூதுரைத்துமீண்டானே சுந்திரப்பூமுடியான்
அருச்சுனனார்புத்திரற்கு ஆலாத்திகாட்டுமென்றாள்
தாதியெழுந்திருந்து தானுமங்கேஓடிவந்து
முத்தினாலாத்தி முப்பதுநூறாயிரமாம்
பவளத்தாலாத்தி பத்துநூறாயிரமாம்
திருஷ்டிசுழட்டித் தெருவெங்கும்விட்டெறிந்து
கற்பூரவாலாத்திக் காட்டியந்தகாரிழைமார்
ஆலாத்திகாட்டி யணியிழைமார்நீங்கினார்
போரஞ்சாமன்னர் புனந்திரராசாவும்
ஆனைவிட்டுக்கீழிறங்க ஆனந்தவாழ்மாபன்
ஓடமலர்க்கண்ணனும் உட்கட்டில்போய்புகுந்து
கோசவளநாடான் கொலுவந்துவீற்றிருந்தான்

பாட்டன்மார் தாயார் அல்லி இவர்கள் முதலானவர்கள்வந்து
புனந்திரனைக்கண்டதற்கு புனந்திரன்போய்வந்து
சங்கதிகளையுரைத்து சுகமாகமதுரையை
அரசாண்டிருந்தது.

ஆறுபிரம்பாண்டியர்கள் அய்யன்மார்வந்துகண்டார்
பெண்பெருமாளல்லியரும் புத்திரனைவந்துகண்டாள்
போனதுவும்வந்ததுவும் புதுமைகளுள்ளதுவும்
நாலுரெண்டுவார்த்தைகளால் நடப்பித்தாரிந்திரனும்
அனைவற்குந்தானுரைத்து அரசாண்டுவாழ்ந்திருந்தார்
புனந்திரனாதன்கதையைப் பத்தியுடன்படித்தவர்கள்
இந்திரனார்தன்தூதை யின்பமுடன்சொன்னவர்கள்
பப்பிரவாகன்தூதைப் பட்சமுடன்வாசித்தவர்
மண்டலத்தில்கீர்த்திபெற்று மாறுமல்வாழ்ந்திடுவார்
தேசத்தில்கீர்த்திபெற்று சிறப்புடனேவாழ்ந்திடுவார்
சுந்திரனார்தூதுரைத்தோர் சொக்காபதப்பெறுவார்
மன்னவனார்தூதுரைத்தோர் மாயர்பதம்பெறுவார்
மாயர்பதம்பெறுவார் மாறுமல்வாழ்ந்திருப்பார்
புனந்திரராசனைப்போல் பூரித்துவாழ்ந்திடுவார்
இந்திரராசனைப்போல் இருந்தரசையாண்டிடுவார்
வெங்கட்டராம்பூபன் விருப்பமுடன்னீன்றெடுத்த
நாராயணசாமி நல்லோனுரைப்படிக்கு
தாரணியிற்கீர்த்திபெற்ற தமிழ்வல்லோன்வேதகிரி
மைந்தன்கந்தசாமியென்பவ னிக்கதையைபாடினர்
குற்றங்கள்நேராமல் குறைகளொன்றும்வாராமல்
தப்பிதங்களில்லாமல் தாழ்வொன்றுஞ்சேராமல்
இந்தக்கதைதன்னை இன்பமாய்க்கேட்டவர்கள்
ஆலைபோலேதழைத்து அறுகுபோல்வேரூடி
மூங்கில்போற்சுற்றம் முசியாமல்வாழ்ந்திடுவார்
வாழிவாழியென்றுசொல்லி வரமளித்தாரீஸ்வரனார்

வித்வசிரோன்மணியாகிய புகழேந்திபுலவர் அருளிச்செய்த
புனந்திரன்தூது-முற்றிற்று.

—ooᴥoo—

அனந்தரின
[illegible]